71

சித்ரபாநு வரு
மாசி - பங்குனி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 3

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 APR 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

கெ. 5, ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

March 1943
Vol. 2, No. 3

3L
இ22ஊ211/N41
N43·2·3
21211

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஆசாரம்	74
2.	திருப்பாவை	78
3.	"பிரிந்தவர் கூடினால்............"	83
4.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்துதி	88
5.	முதல் ஆண்டு நிரம்பிய ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு .... வாழ்த்து	90
6.	ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்	92
7.	ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ த்யாந ஸோபாநம்	93
8.	அரி(யல்)ஊர் (அரியலூர்)	95
9.	காரயித்ருத்வ ஸித்தாந்த விமர்சநம்....	97
10.	செய்திகள்	103
11.	ஆர்ய தசகம்	108
12.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	109
13.	கடோபநிஷத்	65

ஸ்ரீ:

வ்யாஸம் எழுதுபவர்களுக்கு விஜ்ஞாபநம்

1. மூன்று அல்லது நாலு பக்கங்களுக்கு அதிகப்படாமல் அச்சுப் பதிப்பிக்கும்படியாக வ்யாஸங்களைச் சுருக்கி எழுத வேண்டுமென்றும், நல்ல காகிதத்தில் தெளிவாக ஒரே பக்கத்தில் எழுதி அனுப்ப வேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

2. ஏற்றுக்கொள்ளப்படாமல் இருக்கும் வ்யாஸங்களெல்லாம், தபால் சார்ஜுக்கு வேண்டிய ஸ்டாம்பு அனுப்பப்பட்டிருக்கும் பக்ஷத்தில், அவை உடனே திருப்பி அனுப்பப்படும்.

3. அநேக வித்வான்கள் மஹத்தான க்ருபையுடன் வ்யாஸங்களை அனுப்பி, அவைகளை உடனே பத்ரிகையில் ப்ரசுரம் செய்யவேண்டுமென்று நியமிக்கிறார்கள். பத்ரிகையில் இடம் ஸங்குசிதமாக இருக்கிறபடியால், அவர்களுடைய நியமநத்தை அவர்கள் இஷ்டப்ரகாரம் நிறைவேற்ற ஸாத்யப்படாமல் இருக்கிறது. அவகாஶம் ப்ராப்தமாகும்பொழுது அவைகள் யதார்ஹம் ப்ரசுரம் செய்யப்படும். அப்படிச் செய்வதால் ஸம்பவிக்கும் கால விளம்பத்தை அந்த வித்வான்கள் க்ருபையுடன் க்ஷமிக்க வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.

ஸம்பாதகர்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	சித்ரபாநு ௵ மாசி - பங்குனி ௴	ஸஞ்சிகை 3

"அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
13 APR 1943
MADRAS

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆஶாஸந அநுஶாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகாருண்யோத்திதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்களுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

21011

ஆசாரம்

[ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர்:
ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாந வித்வான்]

ஸந்த்யா வந்தநம்

தர்ம சாஸ்த்ரங்களில் நான்கு ஜாதிகளையும் நான்கு ஆஶ்ரமங்களையும் குறித்து அவஶ்யம் செய்யப்படவேண்டியவைகளென்று விதிக்கப்பட்டவைகளாய், மற்றும் புண்ய கர்மங்களை அநுஷ்டிப்பதற்கு யோக்யதையையும் கொடுக்கக்கூடியவைகளுமான கார்யங்கள் ஆசாரங்கள் என்று சொல்லப்படுகின்றன. ஆகையினால் தனது ஜாதிக்கும் ஆஶ்ரமத்துக்கும் அவஶ்யமாக விதிக்கப்பட்ட ஆசாரங்களை அநுஷ்டிக்காத மனிதன், ஈஶ்வரனுடைய பலவிதங்களான சிக்ஷைகளுக்குப் பாத்யப்படவேண்டியதோடு, மற்றும் ஒருவிதமான புண்யகர்மங்களை அநுஷ்டிப்பதற்கும் யோக்யனாகமாட்டான். ஆதலால் மனிதன் தன்னுடைய வர்ணாஶ்ரமாசாரங்களை விடுவது, இரட்டைப்படி அநர்த்தங்களுக்கு ஹேதுவாகிறது. உதாஹரணம்:

"ஸந்த்யாஹீநோऽஶுசிர்நித்யமநர்ஹ: ஸர்வகர்மஸு |
யதந்யத் குருதே கர்ம ந தஸ்ய பலபாக்பவேத்" ||

[தக்ஷ ஸ்ம்ருதி]

[ஸந்த்யா வந்தநம் என்னும் கர்மத்தைச் செய்யவேண்டிய மனிதன் அதை அநுஷ்டிக்காமல் விட்டுவிட்டால், அவன் எப்பொழுதும் தீட்டை உடையவனாக ஆகிறான்; அவனைத் தொட்டவன் ஸ்நாநம் செய்யவேண்டும். ஸந்த்யா வந்தநத்தை விட்டவன், அந்ந தாநம் செய்வது குளம் வெட்டுவது கோயில் கட்டுவது முதலிய எந்த நல்ல கார்யங்களைச் செய்தாலும் அவைகளுக்குப் பயன் கிடையாது. அவஶ்யம் செய்யவேண்டியதாக விதிக்கப்பட்ட ஸந்த்யா வந்தநத்தை விட்டதற்காகப் பிறகு நரக துக்கங்களையும் அநுபவிக்கவேண்டும்.] இதைப்போலவே மற்றும் செய்யவேண்டிய ஆசாரங்களை விட்டவன் இரண்டு படி அநர்த்தத்துக்கு ஆளாகிறான் என்பது சாஸ்த்ரங்களின் அபிப்ராயம்.

இப்படிப்பட்ட ஆசாரங்களுக்குள் ஸந்த்யா வந்தநம் போன்ற சில கார்யங்களில், மனத்தினால் அந்தந்த் தேவதையினுடைய த்யாநத்தையும் வாயினால் மந்த்ரங்களுடைய உச்சாரணத்தையும் தேஹேந்த்ரியங்களினால் ப்ரோக்ஷணம் அர்க்யதாநம் முதலிய கார்யங்களையும் செய்யவேண்டியிருப்பதால், இந்த மநோ வாக் காயங்களுடைய கார்யங்களான

கஷ்டங்களுக்குப் பயந்தவர்களாய், 'இதை அவஶ்யம் செய்யவேண்டும்' என்று விதிக்கிற சாஸ்த்ரங்களில் நம்பிக்கையில்லாததினால், இவற்றை விட்டதினால் உண்டாகும் நமன்தமர் செய்யும் வேதனைக் கொடுங்கி நடுங்காதவர்களா யிருக்கும் இக்காலத்துச் சில புத்திமான்களால் ஸந்த்யா வந்தநம் முதலிய சில ஆசாரங்கள் அடியோடு விடப்பட்டும், மற்றும் சிலரால் விட்டவைகளுக்குத் துல்யங்களாக அநுஷ்டிக்கப் பட்டும் வருகின்றன.

இது நிற்க: இப்படிப்பட்ட மநோ வாக் தேஹ வ்யாபார கஷ்டங் களுக்கு இடமில்லாதபடி, பால்ய வயதில் ஏதோ ஒரு திநத்தில் ஸ்வல்ப ஶ்ரமத்தோடு அநுஷ்டித்த மாத்ரத்தினாலேயே பின்பு எக்காலத்திலு மிருந்து பயனளிப்பதாய், இவ்வுலகத்தில் மல்லிகை முல்லை முதலிய நல்ல வாஸநா த்ரவ்யாலங்காரத் திற்கு யோக்யமாய், பரலோகத்திலும் 'மின் னனைய நுண்ணிடையா ருருப்பசியும் மேனகையும் அன்னவர் தம் பாடலொடு மாடல்களே' அநுபவிக்கக் காரணங்களான புண்ய கர்மங் களை அநுஷ்டிப்பதற்கு யோக்யதையைத் தரக்கூடியதாய், தன்னை விட்ட மாத்ரத்தினால் மனிதனை நாநாவித நரகாநுபவங்களில் தள்ளிவிடுமதாய், நமது முன்னோர்களாலும் இது அவஶ்ய தர்மமென்று அநுஷ்டிக்கப் பட்டதுமாய், சிரஸ்ஸுக்கு அலங்காரமாய், ரக்ஷகமாயிருக்கிற சிகையை (குடுமியை) நமது தேசாபிமாநிகளான பல புத்திமான்கள் அநாதரித்து, 'ஜஹதா வாஸூவஹெ நஃ' என்கிறபடியே முன்பு செய்த அளவிறந்த புண்யத்தினால் கிடைத்திருப்பதாய், அந்தமில் பேரின்பத்தை அநுபவிக்க ஸாதநமான மநுஷ்ய தேஹத்தை ஒருவித தர்மாநுஷ்டாநத்திற்கும் யோக்ய மல்லாததாகச் செய்து, 'தஒதா யாஹ ூயூாேம மதிழ' என்கிற படியே மரஞ் செடிகளாய்ப் பிறக்க ஸந்நத்தர்களாக இருப்பதைப் பார்த்து, 'இப்படி அதி துர்லபமான மநுஷ்ய ஜந்மத்தைக்கொண்டு நல்ல கார்யங்களைச் செய்துகொள்ளலாகாதா? ப்ரதிகூல கார்யங்களைச் செய்து அதைப் பாழாக்க வேண்டுமா?' என்று ஆஸ்திகர்களுக்கு வருத்த முண்டாகிறது.

சிகை விஷயம்

இப்படி நாடோறும் வ்ருத்தி யடையும் நாஸ்திகர்களால் துரத் தப்பட்டு, இவ்வுலகத்தில் அருமருந்தாய் விளங்கும் சில ஆஸ்திகர்களால் ஆதரிக்கப்பட்டிருக்கையாலே, நமது தேசத்தை விட்டுப் போகவும் முடியாமல் இருக்கவும் முடியாமல் த்ரிஶங்குவைப்போலத் திண்டாடுகிற சிகையினுடைய துர்த்தசையைப் பார்த்து வருந்துகிற பூணூல் புண்ட்ரம் முதலிய மற்றை ஆசாரங்கள், 'ஒருவித ஶ்ரமத்திற்கும் ஹேதுவாகாமல் ஸுகங்களுக்கு ஹேதுவான சிகையின் ஸ்திதி இப்படியானால், கொஞ்சம் ஶ்ரம ஹேதுவாக இருக்கும் நமது கதி எப்படியாகுமோ?' வென்று இட்டகால் இட்ட கைகளாய் நடுநடுங்கி மோஹித்துக் கிடக்கின்றன.

ஆகையினுல் மனிதர்கள் சிகையைத் தரிப்பதினுல் உண்டாகும் லாபத்தையும், சிகையை எடுத்து விடுவதினுல் உண்டாகும் நஷ்டத்தையும், நமது தர்ம சாஸ்த்ரங்களில் சொல்லியிருப்பதை இங்குச் சுருக்கமாகப் புத்திமான்களுக்குத் தெரிவிக்கிறோம். சிகை தரிப்பதை 40-ஸம்ஸ்காரங்களுக்குள் சௌளம் என்கிற ஸம்ஸ்காரமாக ஶாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. ஆகையினுல் அதை விடக்கூடாது.

"ஶிகீ வா முண்டோ ந விஹிதோ யஜ்ஞஃ
தஸ்ய தபஸ்யாநம் யஜ்வா" [ஶ்ருதி]

[எந்த மனிதன் குடுமி யில்லாமல் மொட்டைத் தலையாக இருக்கிறுனே அவன் இல்லாததற்கு ஸமானன்; ஒருவித தர்ம கார்யங்களுக்கும் அவன் யோக்யதை இல்லாதவன் என்று சாஸ்த்ரங்களினுல் அநாதரிக்கப்பட்டவன். ஆகையினுல் சிகையானது மனிதனுக்குக் குடுமி யில்லாததினுல் உண்டான தோஷத்தைப் போக்குகிறது.] இதனுல் மனிதர்கள் எல்லோருக்கும் சிகை அவஶ்யம் என்று சொல்லப்பட்டதாகிறது:

பாரதம் ஆஶ்வமேதிக பர்வ வைஷ்ணவ தர்ம ப்ரகரணத்தில்:

"ஶிகாயஜ்ஞோபவீதாப்யாம் யே ஸந்த்யாம் யே வ்யுபாஸதே।
நஷ்டதுஷ்க்ருதகர்மாணோ ப்ரஹ்மலோகம் வ்ரஜந்தி தே"

[எந்த மனிதர்கள் சிகை பூணூல்களோடும் ஸந்த்யா வந்தநத்தை அநுஷ்டிக்கிறுர்களோ, அவர்கள் ஸர்வ பாபங்களையும் விட்டு மோக்ஷத்தை யடைகிறுர்கள்] என்று சொல்லப்பட்டிருக்கிறது. ப்ரம்ஹாண்ட புராணத்தில்:

"ஶிகோபவீதவத்தார்யம் ஊர்த்வபுண்ட்ரம் த்விஜந்மநாம்।
விநாக்ருதாஶ்சேத்விஹிதா: க்ரியாஸ்ஸர்வா யதாக்ருதா:"

[ப்ராம்ஹண க்ஷத்ரிய வைஶ்யர்கள் சிகை பூணூல்களைத் தரிப்பதுபோல் ஊர்த்வ புண்ட்ரத்தையும் அவஶ்யம் தரிக்கவேண்டியது. ஊர்த்வ புண்ட்ர மில்லாமல் செய்யப்படும் புண்ய கர்மங்கள் சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்டபடி செய்யப்பட்டாலும் அவைகளுக்குப் பலன் கிடையாது] என்று சொல்லப்பட்டிருக்கிறது. இங்கு: சிகையானது ஊர்த்வ புண்ட்ரம் தரிக்கவேண்டியதற்கு உதாஹரணமாகச் சொல்லப்பட்டிருப்பதால், சிகையானது அவஶ்யம் தரிக்கப்படவேண்டியதென்று சொல்லப்பட்டதாகிறது.

ப்ரம்ஹ ராத்ரத்தில்:—

"உபவீதம் ஶிகாபந்தம் ஊர்த்வபுண்ட்ரம் விநா க்ருதம்।
யத்கரோதி ஜபோ ஹோமஸ்வாத்யாய: பித்ருதர்ப்பணம்।
பஸ்மீபவதி தத்ஸர்வம் ஊர்த்வபுண்ட்ரம் விநா ஜபோ ஹோமோ"

[பூணூல், சிகை, ஊர்த்வ புண்ட்ரம், இவைகளைத் தரிக்காமல் செய்யப் படும் யாகம் தானம் ஜபம் ஹோமங்கள் வேதாத்யயனம் பித்ருக்களுடைய தர்ப்பணம் முதலியவைகள் எல்லாம், உப்பு மண்ணில் விதைக்கப்பட்ட விதைகளைப் போல் பயனில்லாமல் போய்விடுகின்றன] என்று சொல்லப் பட்டிருக்கிறது.

வ்யாஸ ஸ்ம்ருதியில் :—

“ 𑌵𑌿𑌨𑌾 𑌶𑌿𑌖𑌯𑌾 𑌕𑍃𑌤𑌂 𑌵𑌿𑌨𑌾 𑌯𑌜𑍍𑌞𑍋𑌪𑌵𑍀𑌤𑌤𑌃 ।

𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑌂 𑌤𑌦𑍍𑌧𑌿 𑌵𑌿𑌜𑍍𑌞𑍇𑌯𑌂 𑌸𑌰𑍍𑌵𑌾 𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌾𑌃 𑌕𑍍𑌰𑌿𑌯𑌾𑌃 ”

[சிகை யில்லாமலும் பூணூல் இல்லாமலும் செய்யப்படுகிற கர்மமானது ராக்ஷஸ மென்று அறியத் தகுந்தது. சிகை பூணூல் இல்லாமல் செய்யப் படுகிற புண்ய கர்மங்களுக்குப் பலன் கிடையாது.] என்று சொல்லப்பட் டுள்ளது.

“ 𑌸𑌦𑍋𑌪𑌵𑍀𑌤𑌿𑌨𑌾 𑌭𑌾𑌵𑍍𑌯𑌂 𑌸𑌦𑌾 𑌬𑌦𑍍𑌧𑌶𑌿𑌖𑍇𑌨 𑌚 ।

𑌵𑌿𑌶𑌿𑌖𑍋𑌽𑌨𑍁𑌪𑌵𑍀𑌤𑌶𑍍𑌚 𑌯𑌤𑍍 𑌕𑌰𑍋𑌤𑌿 𑌨 𑌤𑌤𑍍 𑌕𑍃𑌤𑌮𑍍 ”

[எக்காலத்திலும் மனிதன் உபவீதம் என்கிற பூணூலை யுடையவனாகவும், எக்காலத்திலும் சிகையை உடையவனாகவு மிருக்கவேண்டும். சிகை பூணூல் இவை இல்லாமல் செய்யப்படுகிற கார்யங்களுக்குப் பயன் கிடையாது.] என்று இம்மாதிரியான மற்றும் அநேக வசநங்கள் இருக்கின்றன.

ஆகையினால் சிகையைத் தரிப்பதினால் மனிதனுக்குத் தர்மங்களை அநுஷ்டிக்க யோக்யதை உண்டாகிறது என்றும், சிகை யில்லாவிட்டால் மனிதனுக்கு ஒரு புண்ய கார்யத்திற்கும் யோக்யதை இல்லை என்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுவதாலும், சிகையை அவஸ்யம் தரிக்கவேணு மென்கிற விதியை மீறி நடப்பதினால் நரகாதி கஷ்டம் வருமாகையினாலும், சிகையைத் தரிப்பதினால் ஸ்ரமம் ஒன்று மில்லாததினாலும், சிகை புஷ்பங்களைத் தரிக்க ஹேதுவாக இருப்பதாலும், அது சிரஸ்ஸுக்கு அலங்காரமாக இருப்பதாலும், தலையை மொட்டையாக வைத்திருப்பது மகம்மதியர்களுடைய ஆசார மாகையினாலும், நம் தேசாபிமானிகள் நமது தேசாசாரத்தை விட்டிருப்பது உசிதமாகா தாகையினாலும், அவ ரவர்கள் பூர்வர்கள் அநுஷ்டித்திருக்கிறபடி சிகையைத் தரிக்கவேண்டி யதே ந்யாய்யமாகும்.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

திருப்பாவை

[ஸ்ரீ. உப. தி. ஈ. சடகோபாசார்யர், திருப்பாப்புலியூர்.]

(ஸம்புடம் 2 ஸஞ்சிகை 2 பக்கம் 92 தொடர்ச்சி)

இப்பாசுரத்தில், 'உய்யுமாறெண்ணி யுகந்து' என்று விசேஷ்ய நிர்த்தேஶ மில்லாமல் குறிக்கப்பட்ட ஆத்மோஜ்ஜீவனார்த்தமான த்யாநாதிகளுக்கு ஆலம்பநோசித ஆகார விஶேஷத்தை அநந்தரம் நிர்த்தேசித்து, அதன் த்யாநத்தினுல் ஏற்படும் ஆநந்தத்தின் பரீவாஹமாக ஸ்தோத்ராதிகளில் ப்ரவ்ருத்தியைக் கூறித் தம் வ்ரதாநுஷ்டாநத்துக்கு ஸம்பவிக்கும் ஆநுஷங்கிக பலத்தையும் குறிக்கிறுர்.

3. 'ஓங்கி யுலகளந்த வுத்தமன் பேர்பாடி
நாங்கள் நம்பாவைக்குச் சாற்றி நீராடினுல்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயலுகளப்
பூங்கு வளைப்போதிற் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடநிறைக்கும் வள்ளற் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய்.'

இங்கும் 'வையத்து வாழ்வீர்காள்' என்பது அநுவர்த்திக்கப்படுகிறது.

ஓங்கி யுலகளந்த உத்தமன் பேர்பாடி—அப்ரதிஹதமான வ்ருத்தியை யடைந்து ஸர்வ லோகங்களையும் வ்யாபித்துநின்ற புருஷோத்தமனுடைய கீர்த்தியைப் புகழ்ந்து பாடி. இத்தால், முன் 'நாராயணன்' என்றும் 'பரமன்' என்றும் வ்யபதேஶிக்கப்பட்டவனே உபய விபூதி விஶிஷ்டனுய் ஸர்வ விலக்ஷணனுய் ஸர்வோத்க்ருஷ்டனுய் இருப்பவன் என்பதும், அவனை இவ்வாகாரத்தில் த்யானிப்பதே எல்லாவற்றிலும் சிறந்ததென்பதும், ஸர்வ ஶ்ரேயஸ் ஸாதக மென்பதும் ஏற்படுகிறது. இந்த த்ரிவிக்ரமாகாரத்துக்கு இவ்வளவு மஹிமை வாய்ந்திருப்பது பற்றியே, ஸர்வ வேதங்களுக்கும் ஶிரஸ்ஸாக விளங்கும் புருஷ ஸூக்தத்தில் இதை முற்பட வர்ணித்து, இதனையே '𑌧𑌾𑌤𑌾𑌪𑍁𑌰𑌸𑍍𑌤𑌾𑌤𑍍' இத்யாதியால் பிரமதேவனும் இந்திரனும் ஆதி காலத்தில் துதித்ததாகக் கூறி, இதை நன்கறிந்தவனே நற்கதி யடைவானென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இதை அநுஸரித்தே கீதையிலும்,

'𑌉𑌤𑍍𑌤𑌮𑌃 𑌪𑍁𑌰𑍁𑌷𑌸𑍍𑌤𑍍𑌵𑌨𑍍𑌯𑌃 𑌪𑌰𑌮𑌾𑌤𑍍𑌮𑍇𑌤𑍍𑌯𑍁𑌦𑌾𑌹𑍃𑌤𑌃 ।
𑌯𑍋 𑌲𑍋𑌕𑌤𑍍𑌰𑌯𑌮𑌾𑌵𑌿𑌶𑍍𑌯 𑌬𑌿𑌭𑌰𑍍𑌤𑍍𑌯𑌵𑍍𑌯𑌯 𑌈𑌶𑍍𑌵𑌰𑌃 ॥'

என்று த்ரிவிக்ரம சப்தத்துக்கு வ்யாக்யாநமாக அசித் ஷத்த முக்த ரூபமான த்ரிலோகத்தை வ்யாபித்து நிற்பவனே பரமாத்மாவென்றும் ஸர்வேஸ்வரனென்றும் புருஷோத்தமனென்றும் வ்யக்தமாக உரைத்து, கடைசியாக:

'யொ ஶாமெவஶஸஂமூடொ ஜாநாதி வுருஷொதூஃ |
ஸ ஸவவிஜஜதி ஶாஂ ஸவஹாவெந ஹாரத ||'

என்று த்ரிலோக வ்யாபகாகார விஶிஷ்டனுப் பகவானை அறிவதே எல்லாவற்றுக்கும் உத்தமமான பஜநமென்று நிகமநம் செய்யப்பட்டிருக்கிறது. இங்கும் ஒங்கி யுலகளந்த உத்தமனுடைய த்யாந ஸ்தவநாதிகள் குறிப்பிடப்பட்டிருப்பது, இந்த ஸ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களைப் பின் பற்றியதாகக் கொள்ளத்தகும். 'ஊத்ர்திஷ்ஊ' 'விவக்ரமெ' முதலிய ஶ்ரௌத ஶப்தங்களின் பொருள் 'ஓங்கி' என்பதால் வெளியிடப்பட்டது. 'ஹிமிஂ வுகூா, லொகத்ரயஶாவிஶு' முதலியவைகளின் அர்த்தம், 'உலகளந்த' என்பதால் விளக்கப்பட்டது. 'வுருஷொதூஃ, ஊக்ஷராதவி வொதூஃ' முதலியவைகளின் பொருள், 'உத்தமன்' என்றதால் பேசப்பட்டது. நிருபபதமாய் ப்ரயோகிக்கப்பட்டிருக்கும் 'உத்தம' சப்தம், ப்ரஹ்ம சப்தம்போல் ஸர்வ ப்ரகாரேண நிஸ்ஸமாப்யதிகமான உத்கர்ஷத்தைக் குறிக்கும். இத்தால் ஸ்வரூபத்தாலும் குணங்களாலும் இன்னுமுள்ள ஸர்வ ப்ரகாரங்களாலும், ஸர்வஸ்மாத் பரத்வம் சொல்லப் பட்டதாகிறது. 'பேர்பாடி' என்பதில் 'பேர்' என்பதற்குப் பெருமை என்பது பொருள். 'தஸ்ய நாம மஹத்யஶஃ' என்றபடியும், 'யஶஸஶ்சைக ஹாஜநம்' என்றபடியும் பெருமை வாய்ந்தவன் புருஷோத்தமன் ஒருவனே யாகையால், அவனை வாயாரப் புகழ்ந்து பாடுவதே நாம் நாப் படைத்ததற்குப் பரமலாபம் என்று கருத்து. 'உய்யுமாறெண்ணி யுகந்து' என்று முன்பாசுரக் கடையிற் குறித்தவாறு, இவ்வுத்தமன் புகழைப் பாடுவதே நம் பாவைக்கு நாம் செய்யும் கிரிசைகளில் ப்ரதாநதமமென்று தாத்பர்யமாகவுமாம். தத்வ ப்ரதாநமான முதற் பாசுரத்தில், 'நாராயணனே நமக்கே' என்றதால் ஶேஷஶேஷி பாவத்தைக் குறித்துப் பிறகு உபாய ப்ரதாநமான இரண்டாவது பாசுரத்தில் 'பரமனடி பாடி' என்று, அகிஞ்சநாதிகாரிகளுக்கு அவன் திருவடியே சரணமென்பதை நிர்த்தேசித்து, புருஷார்த்த ப்ரதாநமான இப்பாசுரத்தில் 'உத்தமன் பேர்பாடி' என்று பகவானுடைய பெருமையைப் புகழ்ந்து பாடுவதே ஸ்வரூப ப்ராப்தமான புருஷார்த்தமென்று ஸூசித்திருப்பதின் ஸ்வரஸம் மிகவும் உகக்கத்தக்கது. அநந்தரம் இவ்விதமான ஸ்வயம் புருஷார்த்தமாய் அத்யந்தம் போக்யமாயிருக்கும் புருஷோத்தம ஸ்துதியாலும், தடங்கமான ப்ரஸ்துத வ்ரத ஸ்நாநாதிகளாலும் ஸித்திக்கிற ஆநுஷங்கிக பலத்தை விவரிக்கிறார்.

நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீராடினல்—நாமும் இப்போது ப்ரஸ்துதமான நம்முடைய வ்ரதத்துக்காக ஸங்கல்பித்து ஸ்நாநம் செய்தால். 'நாமும்' என்பதிலுள்ள உம்மையால், முற்கூறியபடி இவ்விஷயத்திலும் நாம் மேலையார் செயலை அநுஸரிக்கிறோம் என்று ஸூசிக்கப்பட்டதாகக் கொள்ளலாம். தவிரவும்:

'𑌅𑌨𑌨𑍍𑌯𑌾𑌶𑍍𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌨𑍍𑌤𑍋 𑌮𑌾𑌂 𑌯𑍇 𑌜𑌨𑌾𑌃 𑌪𑌰𑍍𑌯𑍁𑌪𑌾𑌸𑌤𑍇 ।
𑌤𑍇𑌷𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌾𑌭𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌨𑌾𑌂 𑌯𑍋𑌗𑌕𑍍𑌷𑍇𑌮𑌂 𑌵𑌹𑌾𑌮𑍍𑌯𑌹𑌮𑍍 ॥'

என்றபடியும்,

'𑌶𑌰𑍀𑌰𑌾𑌰𑍋𑌗𑍍𑌯𑌮𑌰𑍍𑌥𑌾𑌂𑌶𑍍𑌚 𑌭𑍋𑌗𑌾𑌂𑌶𑍍𑌚𑍈𑌵𑌾𑌨𑍁𑌷𑌂𑌗𑌿𑌕𑌾𑌨𑍍
𑌦𑌦𑌾𑌤𑌿 𑌧𑍍𑌯𑌾𑌯𑌿𑌨𑌾𑌂 𑌨𑌿𑌤𑍍𑌯𑌮𑌪𑌵𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌦𑍋 𑌹𑌰𑌿𑌃 ॥'

என்றபடியும் பகவானைப் பலாந்தர அபிஸந்தி ரஹிதமாய் ஏகாந்தோபாஸநம் பண்ணும் மற்ற அதிகாரிகளுக்குப்போல் தாத்ருஶ ரீதியில் இந்த நம்முடைய வ்ரதத்தை அநுஷ்டிக்கும் நமக்கும் பரமோதாரனை பகவான் தன்னிஷ்டமாகவே யோகக்ஷேம ஸம்ருத்தியை அநுக்ரஹிப்பான் என்றும் தாத்பர்யம். இத்தால் வையத்து வாழ்வோர், நம் வ்ரதாநுஷ்டாநத்தைக் குறித்துக் குற்றஞ் சொல்ல இடமில்லை யென்பது மாத்ரத்தோடு நிற்காமல், அவர்கள் தங்களுக்கெல்லாம் ஏற்படும் பெரும் நன்மையைக் கண்டு நம்மைப் புகழ்ந்து கொண்டாட வேண்டியதாகும் என்றும் தாத்பர்யம்.

தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்து—தேசம் முழுவதும் வண்ட வ்ருஷ்டி இல்லாமல் எல்லாப் பிரதேசங்களிலும் பரவி அதிவ்ருஷ்டி அகால வ்ருஷ்டி முதலிய தீங்கில்லாமல், வேண்டிய காலத்தில் போதுமான அளவு மாதம் மூன்று தடவை மழைபெய்து. பிறகு இதன் ப்ரயோஜநமாக ஏற்படும் ஸஸ்ய வ்ருத்தியை ப்ரபஞ்சிக்கிறார்.

ஓங்கு பெருஞ் செந்நெலூடு கயலுகள—உயர்ந்தும் பருத்தும் வளர்ந்திருக்கும் செம்மையான (சம்பா) நெற்பயிர்களின் இடையில் மத்ஸ்யங்கள் விளைந்தோட. இத்தால் வயல்களில் மத்ஸ்ய ஸஞ்சாரத்துக்கு யோக்யமாக இடைவிடாத ஜல ஸம்ருத்தி சொல்லப்பட்டது. பயிர்கள் உயரமாய் வளர்ந்திருந்தபோதிலும், அதற்கு அநுகுணமாய்ப் பருத்து மிருந்தபடியால், கதிர்கள் புஷ்கலமாகவும் சாய்ந்து விழுந்து சிதறிப் போகாமலும் நின்றதுடன், அதிக இடைவெளி யில்லாமல் புஷ்டமாயிருந்தது காரணமாக மீன்கள் விளைந்து செல்லவேண்டி யிருந்த தென்பது ஏற்படுகிறது. இதனல் நீர்வளத்தின லுண்டான பயிர்ச்செழிப்பு பேசப்பட்டது. பிறகு தடாகம் முதலிய ஜலாஶயங்கள் நிரம்பியதால் ஏற்பட்ட தண்ணீரில் வளரும் ஆம்பல் தாமரை முதலிய புஷ்பங்களின் ஸம்ருத்தி வர்ணிக்கப்படுகிறது.

பூங்குவளைப் போதிற் பொறிவண்டு கண்படுப்ப—அழகிய கரு நெய்தல் பூக்களில் சித்ரமான புள்ளிகளையுடைய வண்டுகள் ஸுகமாய் நித்ரை செய்ய. ஸாதாரணமாய்க் கருநெய்தல் புஷ்பம் அதிக மெல்லிய தாயும் சிறியதாயு மிருப்பதால் அதில் வண்டுகள் உறங்குவது ஸாத்ய மில்லாமற் போனபோதிலும், நீர்வளத்தினால் அப்புஷ்பங்கள் பெரியனவா யும் த்ருடமான தளங்களை உடையனவாயு மிருப்பதால் வண்டுகளுக்கு மெதுவான மஞ்சம்போல் அமைந்தனவென்று கருத்து. முற்காலத்தில் நெல்வயல்களி னுள்ளே தாமரை குவளை முதலிய புஷ்பக்கொடிகள் வளர் வது வழக்கமுண்டு. ‘ஆபாதபத்மப்ரணதா: கலமா இவதே ரகும்’ என்று காளிதாஸ மஹாகவியின் வர்ணநம் இதற்குச் சான்றாகும். அப்படி வைத்துக்கொண்டால், நெற்பயிரினிடையில் மீன்கள் வளைந்தோடும்போது அங்குள்ள குவலயங்களில் உறங்கும் வண்டுகளுக்குப் பூக்களின் அசை வினால் ஊசலாட்டமும் ஏற்பட்டது என்றும் ஸூசித்ததாகும். வண்டுகள் உறங்குவதைக் குறித்ததால், இராக்காலத்தில் விகஸிக்கும் ஸ்வபாவமுள்ள குவலயத்தை ப்ரஸ்தாவித்தார். இது, மற்றைப் புஷ்பங்களுக்கும் உபலக்ஷணமாகும். அல்லது எல்லாவற்றிலு மிது மெல்லியதாகையால், மற்றவைகளின் புஷ்டி இத்தால் கைமுதிகந்யாய ஸித்தமாகும். இவ்வாறு நெற்பயிர்களையும் வயல்களையும் வர்ணிப்பதால், ஆண்டாள் தன் ஜந்ம நகரியின் இயற்கையமைப்பை மனத்தில் வைத்து, அதனைப் புராண ப்ர ஸித்தமான திருவாய்ப்பாடியின் வைபவத்துடன் கலந்து, ஓர் சித்ரமான ரஸாநுபவத்தை ஸஹ்ருதய ஹ்ருதயங்களில் ஊட்டுகிறார்போலும். இதற்கு மேலும் ஆங்காங்கு ஸந்தர்ப்பங்களில் இச்சேர்க்கைச் சிறப்பு அத்யந்த மநோஜ்ஞமாய் விளங்கா நிற்பது காணத்தகும். அநந்தரம்: ஸுவ்ருஷ்டியா லுண்டான புல்வளத்தினால் ஏற்பட்ட கோ ஸம்ருத்தியை வர்ணிக்கிறார்.

தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி வாங்கக் குடம் நிறைக் கும் வள்ளற் பெரும்பசுக்கள்—ஆயர்கள் தம் பசுக்களின் கீழ்ப் புகுந்து உட்கார்ந்து, சீர்மை வாய்ந்த மடிகளைக் கைப்பற்றிவிடாமல், இருகை களாலும் கறக்கக் குடங்களைப் பாலால் நிறைக்குமதான உதாரத்தன்மை யுள்ள பெரிய பசு மாடுகள். ‘புக்கிருந்து’ என்றதால், பசுக்கள், பால் கறக்கிறவர்கள் கீழேபுகுந்து உட்காரும்படியான உயரமும் புஷ்டியும் உள்ளவைகள் என்று ஏற்படுகிறது. இது ‘பெரும்பசுக்கள்’ என்று விசேஷித்ததால் வ்யக்தமாகிறது. ‘சீர்த்த’ என்றதால், ஸ்தநங்களுக் குரிய ஸர்வ லக்ஷணங்களும் பொருந்தியுள தென்பதால் மடியில் பால் நன் றாகச் சுரந்து வெளிவருவதற்குத் தயாராயிருப்பது ஸூசிக்கப்பட்டது. ‘தேங்காதே’ என்பது, ‘பற்றி வாங்க’ என்பதோடு அந்வயிக்கிறது. ஓயாமல் இருகைகளாலும் மாற்றிமாற்றி மடியைப் பிடித்துக் கறக்கிறார் கள் என்பது பொருள். ‘வள்ளல்’ என்று பசுக்களை விசேஷித்ததால், அவைகளின் ஔதார்யம் கொண்டாடப்பட்டது. இதனால் ஸம்ருத்தியும்

மநஸ்விதையும் குறிக்கப்பட்டன. பசுக்களின் மடிகளில் பால் பூரணமாக இருந்தது மாத்ரமல்லாமல், அவைகள் அதைக் கபடமின்றிக் கறப்போர்க்குச் சுரந்து கொடுக்கும்படியான நல்ல ஸ்வபாவமுடையவைகள் என்பதும் தெளிவாகிறது. இதுபற்றியே அவைகள் ஆகாரத்தில்போல் குணத்திலும் பெருமை வாய்ந்தவை என்பதைத் தெரிவிக்கிறார் 'பெரும் பசுக்கள்' என்று.

நீங்காத செல்வம் நிறைந்து—ஶாஶ்வதமான ஸம்பத்து பூர்ணமாயிருக்கும். 'மேழிச் செல்வம் கோழைபடாது' என்றும், 'விஷ்ருஷெக ஜொாஷு ஸலவணு' என்றும் பெரியோர் சொற்படி, பூமி வளத்தாலும் பசுக்களின் ஸம்ருத்தியாலும் ஏற்படும் ஸம்பத்துதான் குறைவற்றதென்று தாத்பர்யம்.

இப்பாசுரத்தில் கூறப்பட்ட நெற்பயிர் வளத்தால் தாரக ஸாமக்ரீ வர்க்கத்தினுடையவும், குவலய வளர்ச்சியால் போக்யவஸ்து வர்க்கத்தினுடையவும், பாற்பெருக்கால் போஷக பதார்த்த வர்க்கத்தினுடையவும் ஸம்ருத்தி ஸங்க்ரஹிப்பட்டதாகக் கொள்ளலாம். முதல் பாதத்தில் 'ஓங்கியுலகளந்த வுத்தமன் பேர்பாடி' என்பதில் ஒவ்வொரு பதமும் தீர்க்க மாத்ரையா யிருப்பது அர்த்தாநுகுணமா யமைந்து காவ்ய ஸ்ரீயை நன்கு அலங்கரிப்பது நோக்கத்தகும்.

ஏல் ஓர் எம் பாவாய்—என்பது முன்போலவே.

[தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

சித்ரபாநு ஹூ பங்குனி மீ

1உ ஞாயிற்றுக்கிழமை	—	மீந ஸங்க்ரமணம் 17 - 52 : ஷடசீதி : கும்ப ஶுக்ல அஷ்டமி திதி.
2உ திங்கட்கிழமை	—	மீந சுக்ல நவமி திதி
4உ புதன்கிழமை	—	ஸர்வ ஏகாதசி : திருநாராயணபுரம் வைரமுடி ஸேவை
8உ ஞாயிற்றுக்கிழமை	—	பங்குனி உத்திரம் : நஞ்ஜீயர்
17உ செவ்வாய்க்கிழமை	—	நவமி தஶமி திதி த்வயம்
19உ வியாழக்கிழமை	—	ஸர்வ ஏகாதசி
22உ ஞாயிற்றுக்கிழமை	—	அமாவாஸ்யை
23உ திங்கட்கிழமை	—	யுகாதி பண்டிகை
30உ திங்கட்கிழமை	—	மீந ஶுக்ல அஷ்டமி திதி
31உ செவ்வாய்க்கிழமை	—	சூந்ய திதி : மேஷரவி 38 - 14

ஸ்ரீ:

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

"பிரிந்தவர் கூடினல்........."

(ஸ்ரீ. உப. தி. ராமஸ்வாமி ஐயங்கார், அட்வோகேட், மயிலாப்பூர்.)

[ஸ்ரீ அழகியசிங்கர் அருளாளனை மங்களாசாஸநம் செய்தருளியவண்ணம்.]

பதினன்கு வருஷங்களுக்குப் பிறகு, சென்ற தைமீ 11வ (24-1-1943) ஞாயிற்றுக்கிழமை யன்று, நம் ஸ்ரீ அழகியசிங்கர் பெருமாள் கோயிலுக்கு எழுந்தருளி, ஸ்ரீ பேரருளாளனையும் பெருந்தேவித் தாயாரையும் மங்களாசாஸநம் செய்தருளினர். பதினன்கு வருஷம் என்றதும், ஸ்ரீமத் ராமாயணத்திலுள்ள 14-வருஷம் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனல் அதற்கும் இதற்கும் எத்தனை வாசி! அங்கே முடி துறந்து பெருமாள் வனமேறப் போனபடி; இங்கோ (ஆசார்ய ஸ்தாநத்தில்) முடிசூட ஸ்ரீ ஸ்வாமி பெருமாளை விட்டகன்று நம்பெருமாளை நண்ணியபடி. இந்த 14-வருஷங்களில் பெரும்பான்மையான காலம் அதிகார வஹநத்திலுள்ள க்லேசங்களு மில்லாமல் அநவரதம் பகவத் விஷயத்திலேயே செலவிட்டு, சென்ற ஒரு வருஷமாய் இளவரசு நீங்கிச் செங்கோல் செலுத்தும் மன்னவராய்ப் பொலிந்து, மாமலராள் புணர்ந்த பொன்மார்பன் பொருந்தும் பதிதொறும் புக்கு நின்று, அவனையும் அடியார்கள் குழாங்களையும் வாழ்வித்தருளு மழகு அனைவரும் அறிந்ததே.

அநவரதம் அன்பினல் தாம் அடிபணிந்து வந்த அருளாளனை விட்டகன்றிருப்பதே என்று மட்டும் திருவுள்ளத்தில் குறை யொன்றுண்டு. இம்மனப் பான்மையை உணர்ந்திருந்த 41-வது பட்டம் ஸ்ரீமத் பெரிய அழகியசிங்கர், தொண்டை நன்னட்டிலிருந்து யாரேனும் வந்து அடிபணிந்தால், "நீர் உடனே சின்ன அழகியசிங்கரிடம் போய் அருளாளன் திருவாராதந மஹோத்ஸவாதி வைபவங்களைச் சொல்லி அவரைக் களிப்பித்து, பிறகு இங்கே வாரும்" என்று நியமித்தருளுவதுண்டு. அப்படி வந்தவர்களை நம் ஸ்ரீமத் அழகிய சிங்கரும் பரபரப்புடன் வரவேற்று, "அருளாளன் மஹோத்ஸவங்கள் யதாக்ரமம் நடக்கின்றனவா? '[illegible]' என்ற ஆசார்யோத்தமன் மங்களாசாஸநத்திற் கேற்ப பரமைகாந்திகள் பெருமாள் கோயிலில் எழுந்தருளியிருந்து இடைவிடாது எம்பெருமானை அடிபணிந்து வருகின்றனரா?" என்றெல்லாம் உள்ளம் குழைந்து கேட்டருளுவது வழக்கம். அப்படியெல்லாம் திருவுள்ளத்தால் அநுபவித்து நின்ற விஷயத்தில், நேருக்கு நேராக மங்களாசாஸநம் செய்யத் தருணம் வாய்த்தபோது, ஸ்ரீமத் அழகியசிங்கர் அடைந்த ஆநந்தத்தையும் அநுபவத்தையும் என்னென் றெடுத்துரைப்பது? 'பிரிந்தவர் கூடினல் பேசல் வேண்டுமோ?' என்றுன் கவிச் சக்ரவர்த்தி. நெடுங்காலம் பிரிந்தவர்

கூடியபோது, அவர்கள் அடையும் பேரின்பம் பேசற் கெளியதன்று. அக்காலத்தில் அங்கே அருகிலிருக்கப் பெற்றவர் தங்களைத் தந்யர்களாகக் கருதுவது வியப்பல்ல.

மங்களாசாஸநம் நடக்கவேண்டியதற்காகக் குறித்த நன்னாளில் அதிகாலையிலேயே ஸ்ரீமத் அழகியசிங்கர் திருவுள்ளம் பூரித்து நின்றார். "க்ருஷ்ணாங்க்ரி நலிநம் ஸாக்ஷாத்ப்ராப்ய நாஸிகம்" என்று பாரித்த அக்ரூரரைப் போலவே, நம் ஸ்வாமிக்கும் நெடுங்காலம் பிரிந்து பட்ட துன்பம் முடிவடைந்துவிட்டது என்ற உவகை ஏற்பட்டது. "ப்ராவீண்யம் ஸ்வ தேவ ஸாதயதிவ" என்கிற ரீதியிலல்லவோ அருளாளன் அருள் செய்வது! இவ்வெம்பெருமானை அடிபணிந்து நின்றபோது, முந்தி இழந்த காலமெல்லாம் கூட இன்புறும் வண்ணமல்லவா இவன் அநுபவமளிப்பது! "முந்தி யிழந்தனவெல்லாம் முழுக்கத்தந் தாட்கொள்ளும் அந்தமிலா வருளாழி அத்திகிரிப் பெருமாள்" என்று இவர் திறத்து ஆசார்யோத்தமன் பாசுரம். இப்படியெல்லாம் மநோரதித்து நிற்கும் போது, ஸ்ரீ உ. வே. வித்வான் அய்யா க்ருஷ்ணஸ்வாமி தாதாசாரியர் ஸ்வாமி எழுந்தருளி, ஸ்ரீமத் அழகியசிங்கரைத் தண்டனிட்டு உபஹாரங்கள் ஸமர்ப்பித்து, "இத்தனை காலம் அருளாளனை மறந்தபடியோ?" என்று வினவி நிற்க, ஸ்ரீமத் அழகியசிங்கரும் அவரை நன்மொழிகளால் வரவேற்று, "இத்தனை காலம் இழந்த இழவு தீர இன்று அவன் ஸேவையைப் பெறலாமென்றே எண்ணுகிறேன்" என்று அருளிச் செய்து, கலங்கிய திருக் கண்களோடும், தழுதழுத்த திருக்குரலோடும், "தே நாத் ப்ராப்தாஸ் தம் தேசம் ஸாநுஜோ யத்ர ராகவ:" என்ற ஸ்ரீ பரதாழ்வான் வாக்யத்தை அநுஸந்தித்தருளினார்.

"யாவந்ந சரணௌ ப்ராது: பார்த்திவ வ்யஞ்ஜநாந்விதௌ ।
ஸிரஸா தாரயிஷ்யாமி ந மே ஸாந்திர் பவிஷ்யதி ॥"

என்கிறபடி தாம் இத்தனை காலம் சாந்தி பெறாது நின்றநிலை அதில் தோன்றிற்று.

பொழுதுபுலர்ந்து ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹன் அபிகமந ஆராதநம் முடிந்தபின்னர், திருப்பல்லக்கில் ஆரோஹணித்துப் பெருமாள் ஸந்நிதிக்கு எழுந்தருளியாயிற்று. பதினாறுகால் மண்டபத்தில் பெருமாள் ஸந்நிதியிலிருந்து ஸகல பரிஜநங்களும் பெருமாள் ஸ்ரீசடாரியை எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து எதிர்கொண்டு வரவேற்றார்கள். ஸ்ரீ ஸ்வாமியும் பல்லக்கிலிருந்து கீழிறங்கி ஸ்ரீசடாரியைத் தண்டனிட்டுநிற்கவும், கோயில் மரியாதைகளெல்லாம் யதாக்ரமம் நடந்தேறின. பிறகு ஸகல பரிவாரங்களும் சூழத் திருக்கோயில் புக்குப் பூவியல் பொழிலும் தடமும் அவன் கோயிலுங் கண்டு ஆவி யுள்குளிர உகந்து, திருவநந்தஸரஸ் புஷ்கரிணியை வலம்வந்து, பிறகு யமுனைத்துறைவர் திருமுற்றம் என்ற உள் (திருமடைப்

பள்ளி) ப்ரதக்ஷிணம் வந்து, நேராக ஸ்ரீ பெருந்தேவித்தாயார் மங்களா சாஸநத்திற்கு எழுந்தருளியாயிற்று.

தாயாரும், வரதனுடைய பெருந்தேவி யென்னும் உரிமைக்கும் நம் பெருந்தெய்வ மென்னும் சீர்மைக்கும் ஏற்றவாறு ஸர்வாலங்கார பரிதையாய் வெகு இன்பமாகக் காட்சியளித்துக் குளிர்ந்த கடாக்ஷங்களால் வரவேற்றுப் பேருவகை பூத்து அருமையான மந்தஸ்மிதத்துடன் விளங்கினாள். ஸ்ரீ ஸ்வாமியும் ஸேவித்து பரமாநந்தபரிதராய் விலையுயர்ந்த ஒரு சரிகைச் சேலையை ஸமர்ப்பித்துப் பலவிதமான ஸ்தோத்ரங்களால் புகழ்ந்து இன்புற்றார். உடனே தீர்த்தம் முதலிய மரியாதைகளெல்லாம் நடந்தேறின. தாயார் திருமாலைகளுடன் ஸ்ரீமத் அழகிய சிங்கர் விளங்கியபோது, ஸ்வாமி தேசிகன் அருளிச்செய்த பின்வரும் ஸ்லோகம் அருகிருந்த அனைவருக்கும் வ்யாக்யாதமாயிற்று.

"𑌶𑍍𑌰𑍇𑌯𑌸𑍍𑌕𑌾𑌮𑌾𑌃 𑌕𑌮𑌲𑌨𑌿𑌲𑌯𑍇 𑌚𑌿𑌤𑍍𑌰𑌮𑌾𑌮𑍍𑌨𑌾𑌯𑌵𑌾𑌚𑌾𑌂
𑌚𑍂𑌡𑌾𑌪𑍀𑌡𑌂 𑌤𑌵 𑌪𑌦𑌯𑍁𑌗𑌂 𑌚𑍇𑌤𑌸𑌾 𑌧𑌾𑌰𑌯𑌨𑍍𑌤𑌃 ।
𑌛𑌤𑍍𑌰𑌚𑍍𑌛𑌾𑌯𑌾𑌸𑍁𑌭𑌗𑌶𑌿𑌰𑌸𑌃 𑌚𑌾𑌮𑌰𑌸𑍍𑌮𑍇𑌰𑌪𑌾𑌰𑍍𑌶𑍍𑌵𑌾𑌃
𑌶𑍍𑌲𑌾𑌘𑌾𑌶𑌬𑍍𑌦𑌶𑍍𑌰𑌵𑌣𑌮𑍁𑌦𑌿𑌤𑌾𑌃 𑌸𑍍𑌰𑌗𑍍𑌵𑌿𑌣𑌃 𑌸𑌞𑍍𑌚𑌰𑌨𑍍𑌤𑌿 ॥"

[மலர்ப் பாவையின் மலர்ப் பதங்களை மறவாமல் மனத்து வைப்பவர்கள் குடைநிழலி லிருந்து இருபுறம் சாமரம் வீசவும் அவர் குணங்களைப் பிறர் கொண்டாடவும் மாலையுடன் பொலிவர்] என்ற ஸ்ரீஸ்துதி ஸ்லோகம் நம் ஸ்ரீமத் அழகியசிங்கர் திறத்திலேதான் அந்வர்த்தமாயிற்றென்று சொல்ல என்ன தடை?

தாயார் ஸந்நிதியிலிருந்து எழுந்தருளி, அழகியசிங்கர் ஸந்நிதியில் மங்களாசாஸநம் நடைபெற்றது. அழகிய சிங்கப்பிரானுக்கு அழகான ஒரு பீதாம்பரம் ஸமர்ப்பிக்கப்பட்டது. அங்கிருந்து எழுந்தருளி ஸ்ரீ ஆண்டாளை ஸேவித்த பின்னர், திருமலையை வலம்வந்து அத்திகிரியின் அடிவாரத்தை அடையும்படி இருந்தது. உடனே

'𑌯𑌂 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌵𑌚𑌸𑌾 𑌤𑍍𑌰𑌯𑍀
𑌨𑍇𑌤𑌿 𑌨𑍇𑌤𑌿 𑌪𑌰𑌵𑍍𑌯𑍁𑌦𑌾𑌸𑌤𑌃 ।
𑌵𑌕𑍍𑌤𑌿 𑌯𑌸𑍍𑌯 𑌪𑌰𑍋𑌕𑍍𑌷𑌮𑍀𑌕𑍍𑌷𑌯
𑌤𑍇𑌜𑌸𑌾 𑌤𑌂 𑌕𑌰𑌿𑌗𑌿𑌰𑌿𑌂 𑌸𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑍇 ॥"

என்று அநுஸந்தித்துக்கொண்டே திருமலைக்கு ப்ரணாமங்கள் ஸமர்ப்பித்து, ஒலிமுகவாசல் கடந்து, காயத்ரி ஸங்க்யைகொண்ட படிகளை ஆரோஹணித்து, "வையமாளிகை" என்று விளங்கும் மாதங்காசல மௌளியை அடைந்தாயிற்று. நெடுநாளாய்ப் பிரிந்துபட்ட நோவுகளெல்லாம் நொடியில் ஆறிப்போகும்படி திருக்கண்களால் குளிர வரவேற்று, அஞ்சல் என்று கவித்த திருக்கைகளால் ஆஸ்வஸிப்பிக்கும் அருளாளன் திருமுன்பை அடைந்ததும், அழகியசிங்கர் தமது அங்க

மெல்லாம் வந்து இன்பமெய்தக் கண்டு களித்துப் பேருவகை எய்தினர். எப்பொழுதும் ஸ்வாபாவிகமாகவுள்ள அழகிய திருமிடற்றொலியோடு ஸுஸ்வரமாகப் பல்லாண்டு பாடி, தம் திருக்கண்கள் அப்பொழுது அடைந்த அநுபவத்தை ஆழ்வானுடைய அருளிச்செயல் மூலம் அநுஸந்தித்தாயிற்று.

“கூாரோ⁻ஷாரஹ⁻ஜரோ⁻ஞவஸாேய தூண⁻ுவாஶவஙிகூரு⁻ுவஷ௦வஷ |
கூயதாக்ஷரோஹிஜாதகூவொவ௦ வாரணீயதி வரவுஃஷ்ஜெ ||”

கண்களால் காண வருங்கொல் என்னும் பசியால் வருந்தி நெடுங்காலம் பட்டினி கிடந்த திருக்கண்கள், இப்பொழுது அருளாளனது அஸ்ப்ருஷ்ட சிந்தாபதமான ஆபிரூப்யத்தை வாரி விழுங்கித் தம் பசியைப் போக்கிக்கொண்டனவாம். இப்பொழுது அளிக்கும் இன்பக் காட்சி எப்பொழுதும் மறையாதபடி அந்த ஆசைமுகம் நிரந்தர ஸேவையை அளிக்கவேண்டுமென்ற ப்ரார்த்தநை உடனே எழுந்தது.

“ஶ⁻வஶ⁻ஞவஸாேய தாக்ஷரோ⁻ஷ ரூகூ
வஸ்தஷ௩௦ ர⁻விராயர௦ நதஹ்ரு⁻ |
ஶுவஷ௦வஸ௦ிஙஒ௦ஷிகூண⁻ுவாஶ௦
ஶயி தெ நிஸ்ஶுஶேஷோ⁻ ஹவஸ்தி நாய ||”

இத்தேவபிரானுக்குத் திருவாலவட்ட கைங்கர்யத்தில் நிரம்ப ப்ரீதியாகையால், சற்றே திருவாலவட்டம் பரிமாறியாயிற்று. ஆலவட்டம் வீசிய பெருமைக்காகவன்றோ அன்று திருக்கச்சி நம்பிகளுக்கு அர்ச்சா ஸமாதியும் கடந்து நேராக வார்த்தைகள் அருளிச்செய்தது. இந்த ரஸம் கண்டு ஸ்வாமி தேசிகனும், ஹம்ஸ ஸந்தேசத்தில், பெருமாளைக்கொண்டே “வ்ருத்தோவர்ஶவ்ருஜ நவவ⁻ஷாவீவயெஷ௦ கூவஶவ” என்று ஹம்ஸத்திற்கு வஶீகரணோபாயம் சொல்லி வைத்தாராயிற்று. ஸ்ரீமத் அழகிய சிங்கரும் ஆலவட்டம் பரிமாறிக்கொண்டே “வ்ராதஹ்நாநாதர⁻ண த⁻ஊவஸீ” என்கிற ஸ்ரீவரதராஜ பஞ்சாஶத் ஶ்லோகத்தையும் இன்னும் பலபல ஸ்தோத்ரங்களையும் பாசுரங்களையும் திருவாக்கால் அநுஸந்தித்தபடியே, “மறையோர் தங்கள் கண்ணினைக் கண்களாரளவும் நின்று கண்டுகொண்டேனே” என்ற ரீதியில் வைத்த கண் வாங்காமல் ஆபாத சூடம் அநுபவித்துக் கொண்டு நின்றருளியாயிற்று.

வெகு நாட்களுக்கு முன்னே ஒன்றே புகலென்று உணர்ந்த ஓர் உத்தமர் காட்ட, ஸ்ரீமத் அழகியசிங்கரை அன்றே அடைக்கலங் கொண்ட நம் அத்திகிரித் திருமாலும், அப்போது என்றுமில்லாக் காந்தியுடன் ஸேவை ஸாதித்துக்கொண்டு நின்றான். மலைகுனிய நின்றமலை போல் விளங்கும் மூலவரென்ன, மருவினிடை யோங்கு புனல்போல் புலன்கொள் வடிவழகால் அனைவரையும் வசீகரிக்கும் உத்ஸவரென்ன, இருவரும் போட்டி போட்டுக்கொண்டு கண்டவர் உள்ளத்தை உருகச் செய்தார்கள். “பகலோன் பகல் விளக்காகப் பரஞ்சுடர் தோன்றி

யதே" என்றபடி திருவவதார காலத்திற்போல் திருமேனி யொளியா லும் திருவாபரணச் சேர்த்தியாலும் பெருமாளுடைய காந்தியானது சொல்லுக் கடங்காத எழில்கொண்டு விளங்கியது. ஸ்ரீமத் அழகியசிங் கர் ஸாதரமாக ஸமர்ப்பித்த ஒரு ஸாதராவும், விலையுயர்ந்த ஒரு மகர கண்டியும், பெருமாள் சோபையை மேலும் அதிகரித்துக் காட்டின. தம்மை அடைந்தாரை, "ஸொவநாஹ்ரம் விஷஹிவ" என்றபடி வெகு ப்ரீதியுடன் வரவேற்பது எம்பெருமான் இயல்பு. அதிலும் அருளாளன், தம்மை அண்டினவரை அங்கீகரிக்கும் அழகு விலக்ஷணம். இதை உள்ள படி அறிந்த தேசிகோத்தமன் ஸ்ரீ ஹம்ஸ ஸந்தேச மஹா காவ்யத்தில் இந்தப் பெருமையை சக்ரவர்த்தித் திருமகனைக் கொண்டு பேசுவிக்கிறார்.

"ஸாராஷாதீ ஸவநஹவிஷாம் ஷாதிநஷேஸஷைவ:
ஶாஃஸம் வக்ஷா: ஸ்ரீதிவபிஷதாம் வக்ஷாஷாம் ஹாமயெபழ |
கஜீகாயபூாகஃ விநதஶ்ரு தாவஸாரஸம்வாதிஹிஷாம்
க்ஷவிஶேபூாஶெஷாஹிஶதவரஷூ௫ைஶௌக்ஷ: கடாஶெக்ஷ: ||"

வணங்கினவர்களை அவன் அவ்வண்ணம் அங்கீகரிப்பது வழக்கமாம். அம்ருதமயமாய் வேண்டிற்றெல்லாம் தரவல்லதான கடாக்ஷத்தால் அருளாளன் அப்படி அங்கீகரித்தருளுவது இன்றைக்கும் பலருக்கு அநுபவஸித்தம். "வாஸாஷைவ: ஸவபூஶிதிவஸஹோஜா ஸாஷா-ஷூஹ:" என்றவனுக்கு, ஸ்ரீமத் அழகியசிங்கரைப்போன்ற ஒரு அபூர்வ வ்யக்தி கிடைத்தால், எத்தனை பேரானந்தத்துடன் விளங்கமாட்டான்! அத்தனை புகரும் அவன் திருமேனியிலும் அவன் திருக்கண்களிலும் தோன்றிற்று.

பிரிந்தவர் இருவரன்றோ! ஒவ்வொருவர் திருவுள்ளத்திலும் பிரிந் தமையால் ஏற்பட்ட துன்பம் பின்பு கூடியபோது ஆறி, அதுவே இன்ப மாகவும் மாறியது என்பதற்கு, அருளாளனும் அழகியசிங்கரும் அன்று அங்கு திரண்டுவந்து குழுமி யிருந்தோருமே ஸாக்ஷிகள்.

இப்படி மங்களாசாஸநம் ஆகிய பின்னர், ஸ்ரீமத் அழகியசிங்க ருக்குத் தீர்த்தம் பரியட்டம் மாலை சடாரி முதலிய ஸகல மரியாதைகளும் நடைபெற்றன; அருளாளன் அருளுக்கு இலக்காகி நெடுநாழிகை அவன் திருமுன்பே நின்றருளி பிறகு விடைபெற்றுக்கொண்டு, திருமலையினின்று இறங்கி நான்கு திருவீதிகளிலும் முன்கோஷ்டி பின் கோஷ்டிகளுடனும் ஸகல வாத்ய கோஷங்களுடனும் வலம்வந்து, பிற்பகல் சுமார் 3-மணிக்கு மடத்திற்கு எழுந்தருளியாயிற்று. ஆயிரக்கணக்காக அங்கே அன்று வந்திருந்த ஆஸ்திகர்களின் ஆநந்தம் சொல்லி லடங்காது. சிரகாலா காங்க்ஷிதமான அருளாளன் மங்களாசாஸநம் வெகு கோலாஹலத்துட னும் கொண்டாட்டத்துடனும் வெகு சிறப்பாக நடந்தேறியது.

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ ஸ்துதி

[ஸ்ரீ. உப. வித்வான் அநந்தாசார்யர், மலையாங்குளத்தூர்]

[ஸம்புடம் 2, ஸஞ்சிகை 2 : பக்கம் - 55 தொடர்ச்சி]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 7.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 8.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 9.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 10.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 11.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] 𑌤𑌂 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌭𑌜𑍇 ॥ 12.

ஸ்ரீ:

[சித்ரபாநு ஞு கார்த்திகை மீ 15ௗ பரமபதத்தை அடைந்த இஞ்சிமேடு சேட்லூர் ஸ்ரீ க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமி விஷயமாய் முக்கூர் வித்வான் ஸ்ரீ ராஜகோபாலாசார்யர் செய்தருளிய ஶ்லோகங்கள்]

[illegible] ।
[illegible] ॥
[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ।

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

[illegible] ।
[illegible] ॥

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

முதல் ஆண்டு நிரம்பிய ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியைக்கு வாழ்த்து

[குன்றத்தூர் பகவத் விஷயம் ஜோஸ்யம் வித்வான் க்ருஷ்ணமாசார்ய **ஸ்வாமியின்**
தௌஹித்ரனும், ஸ்ரீ அழகியசிங்கர் திருவடித்துகளுமான
V. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், **B. A.** எழுதியது.]

1. ஓங்கிடுஞ் சிங்க வெற்பி லுவந்துறை மாலோ லன்றன்
றேங்கிடுங் கருணை வெள்ளந் திசையெலாம் பெருக்கிட் டோட
பாங்குடன் நரசிங் கன்றன் ப்ரியையெனும் பெயரி னோடும்
ஈங்குவந் துலவுந் தேவி இறைவிநீ வாழி யூழி.

2. திகழுமா லகோப லத்துச் சிறப்பெலாம் புவியோர் காணப்
புகழுடன் விளங்கு ஞானப் புண்ணிய ருரையின் சீர்த்தி
சகமெலாங் கண்டு கக்கத் தமிழுட னரி யத்தின்
வகையெலாம் விளங்க யாரும் மகிழவீண் டுலவு வாயே.

3. ஆயிர முண்டு கல்வி யவனிக்கோர் சுமையா மன்றி
மேவிய பயனென் றில்லை வேதநூல் விரித்து நாளும்
சேயுயர் விசும்பும் போற்றத் திகழ்ந்திடு சிங்கன் செல்வி
நீயொரு வூழிக் காலம் நிலமிசை நிலவி வாழ்வாய்.

4. தேசுடைத் தேவர்க் கெல்லாஞ் சிங்கனே தலைவ னும்போல்
ஆசிரி யர்கட் கெல்லா மழகிய சிங்கர் போல
காசினிக் கெல்லாம் ஞானக் கைகொடுத் துதவு நூலுக்
காசறு தலைவி வாழி யாயிர மூழிக் காலம்.

நமது தரிசனத்தின் சிறப்பு

1. ஞானம் தருமிந்தத் தரிசனமே—உயர்
நாடெங்கும் விளங்குமித் தரிசனமே
வானம் தருமிந்தத் தரிசனமே—புகழ்
வரைவின்றி யோங்குமித் தரிசனமே.

2 ஆதியில் நாரண னுரைத்ததிது—பின்
அன்புடன் திருமகள் வளர்த்ததிது—சேனை
நாதனுர் வழியாக வந்ததிது—பின்
நம்மாழ்வார் ஞானத்தாற் கண்டதிது.

3. நாதமு னியென்பார் யோகுசெய்தே—அதில்
நம்மாழ்வார் தம்மைத்தம் முன்னே கண்டு
ஏதமில் தரிசன மித்தைப் பெற்றார்—பின்
யமுனைத்து றைவர்வந் திதனைக் காத்தார்.

4. ஞானந்தி கழ்கொண்டல் பூதூர்வள்ளல்—தம்
நானிலம் போற்றும்ஸ்ரீ பாஷ்யத்தால்
வானோரும் மண்ணோரும் போற்றி செய்ய—நல்ல
வண்மையி னால்வந்து இதனைக் காத்தார்.

5. பூசுரர் கோன்பட்டர் தொண்டியற்றி—இதைப்
புவியினுக் கலங்கார மாகச் செய்தார்
காசினி யோர்போற்றுந் தேசிகத் தோன்றல்—தம்
கருணையி னலிதை ப்ரதிஷ்டை செய்தார்.

6. ஆதிவண் சடகோப னேமுதலாப்—பல
அழகிய சிங்கர்கள் வளர்த்த திது
போதவ னும்நிக ராகாவிந்தப்—பல
புண்ணிய புருஷர்கள் காத்ததிது.

7. இந்தநற் றரிசன மழகிய சிங்கர்கள்
ஈரிரு பதின்மர்கள் காத்த பின்னர்
எந்தம ஹாசார்ய ஸார்வபௌமன் எழில்
லக்ஷ்மீ நரசிங்கன் தழைக்கச் செய்தார்.

8. ஆரியர் கோமானிவ் வழகிய சிங்கர்
அன்புடன் நியமிக்க வன்று முதல்
சீரிய ஞானத்துப் பெருமை கண்டோன்—ஸ்ரீ
சீரங்க சடகோப னீண்ட ளிப்பார்.

மாலோலன் பிள்ளைத் தமிழ்

[முத்தப் பருவம்]

ஆனை மருப்பில் விளைந்திடுநல் லாணிமணிக்கும் விலையுண்டாம்
ஆடுந்தரங்கக் கடல்கிடந்தங் கார்க்குஞ் சங்கங் கரைதவழ்ந்தே
யீனுமணிக்கும் விலையுண்டா மீசன்கடையிற் றவமிருந்த
விற்றுவுதிர்க்கும் நித்திலமு மெழிலிகான்ற வொளிர்மணியும்
மீனும்பாம்புந் தீங்கரும்பும் வேயுமளிக்கும் முத்தினமும்
வேவும்மணியின் றரந்தெரிந்தோர் மதிக்கும்விலைபெற் றுளதாமெங்
கோனேசிங்கப் பெருவரைவாழ் கோவேவிலையொன் றில்லாநின்
கொவ்வைச்செவ்வா யொளிர்முத்தங் கோமான்தருக தருகவே.

ஸ்ரீ:

ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்

எங்கும் நிஶ்ஶப்தம் குடிகொண்டிருந்தது. சிறிது தூரத்துக் கப்பால் ப்ரவஹிக்கும் தாம்ரபர்ணி நதியின் அலைகளின் ஒலியும், வஸந்த காலமானதால் மாமரங்களின் மீதிருந்து கூவும் குயில்களின் இனிய கானமும், காற்றடிப்பதால் அசையும் பனைமட்டைகளின் சலசலப்பும் தவிர வேறு சப்த மொன்று மில்லை. மிகவும் தேஜோவானாக அதோ வீற்றிருக்கும் மஹான் யார்? ஓர் இளங்குமரர். வயது இருபதிருக்கும். அரையில் காவி. கையில் த்ரிதண்டம். திருமேனி பன்னிரண்டு புண்ட்ரங்களோடும் ப்ரகாசிக்கிறது. சிவந்த திருமேனி. கீழே க்ருஷ்ணாஜிநம் விரித்து அதன்மேல் வீற்றிருக்கிறார். ஏதோ சிந்தனையில் ஆழ்ந்திருப்பதாகத் தெரிகிறது. இவர் யார்!

திடீரென்று ஒரு சப்தம் கேட்கிறது. என்ன சப்தம் இது! ஆம்! இது குதிரையின் காலடிச் சத்தமே. ஆரம்பத்தில் மெதுவாகக் கேட்ட சப்தம் வரவர அதிகரிக்கிறது. திடீரென்று பல வீரர்கள் குதிரைகள் மேலே ஏறிக் கண்ணெதிரே தோன்றுகிறார்கள். வீரர்களுக் கெல்லாம் முன்னால், மிகவும் கம்பீரமான தோற்றத்தோடு நிற்பவன் அவர்களுடைய தலைவனே. நெற்றியில் விபூதி பட்டை பட்டையாகப் பூசியிருந்தது. கழுத்தில் ருத்ராக்ஷ மாலைகள் வடங்கள் வடங்களாகத் தொங்குகின்றன. பழுத்த சிவப் பழமாகக் காட்சி யளிக்கின்றான். தூரத்தில் காவியுடனும் த்ரிதண்டங்களுடனும் தோன்றிய மஹானைக்கண்ட இவ்வீரன், தன்னையு மறியாமல் குதிரையின் கடிவாளத்தை இழுத்தான். குதிரை நின்றது. கூட வந்தவர்களும் நின்றார்கள். "மந்த்ரீ! அதோ பார். உதய பானுவைப்போல் காவி யாடையுங் கையில் த்ரிதண்டமுங் கொண்டு வீற்றிருந்து காட்சி யளிக்கும் மஹா புருஷனை. அவரை வணங்க வேண்டு மென்று என் மனம் துடிக்கிறது. நீங்கள் இங்கேயே நில்லுங்கள். நான் மாத்திரம் போய்வருகிறேன்" என்றான். மந்த்ரி, 'அரசன் உத்தரவுப்படியே செய்கின்றோம்' என்றான். அரசன் குதிரையிலிருந்து கீழே குதித்தான். அரச சின்னங்களையும், ஆயுதங்களையும், ருத்ராக்ஷ மாலைகளையும் களைந்து வைத்துவிட்டு நடந்து, அந்த ஸ்வாமியினிடம் சென்று வணங்கினான். "ஐயனே! நான் இந்தப் பாண்டிய நாட்டு மன்னன். வேட்டைக்கென்று புறப்பட்டவன், தேவரீரை ஸேவிக்கும் பாக்யம் பெற்றேன். என்னைக் காப்பாற்றி யருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான்.

அரசனைத் தம் அருள்நோக்கால் அநுக்ரஹித்தார் முனிவர். அரசனுக்கு விவேக முண்டாயிற்று. "ஐயனே! அடியேனுக்குத் தத்வ ஹித புருஷார்த்தங்களை உபதேசித் தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான்.

ஜீயரும் ஈஶ்வரனுடைய ஸ்வரூப மின்னதென்றும், இந்த ஸம்ஸார பந்தத்திலிருந்து விலக வாய்த்த வொரு உபாயம் இன்னதென்றும், இதனால் இவன் அடையும் அந்தமில் பேரின்பத் தடிமையின் ப்ரபாவங்களையும் சுருக்கமாக உபதேசித்தருளினார். அப்போது "அடியேனுக் கொரு கைங்கர்யம் நியமித்தருளவேண்டும்" என்று ப்ரார்த்தித்தான் அரசன். அதற்கு ஜீயர், "அரசே! நீ முன் க்ஷுத்ர தேவதைகளை உபாஸித்துப் பாஷண்டிகளுடைய துர்ப்போதனையால் ஆழ்வாரை மலைச் சுனையுள் போட்டுவிட்டாய். இதனால் உன் விஷயத்தில் எம்பெருமானுடைய திருவுள்ளம் மிகவும் கலங்கி யிருக்கிறது. அநேக ப்ரம்ஹ கல்பங்கள் அநுபவித்தாலும் மாளாத நரகாநுபவம் உனக்குக் காத்திருக்கிறது. நீ நற்கதியை அடைய விரும்பினால், ஆழ்வாரை முன்போல் திருப்புளி யடியில் ப்ரதிஷ்டை செய்" என்று நியமித்தார். கோவில் கட்டலாம். ஆனால் அகாதமான பர்வத மடுவிலிருந்து ஆழ்வாரை எடுப்பதெப்படி? ஜீயர் மடுவின் கரையில் நின்று ஆழ்வாரை மிகவும் பக்தியோடு த்யானம் செய்து, கைகளை நீட்டி, "எழில் குருகை வருமாறு யிரங்கு நீயே!" என்று ப்ரார்த்

தித்ததுதான் தாமதம். மடுவின் அடியிலேயிருந்து மேலே மிதந்து வந்து, ஆழ்வார் ஜீயருடைய கையில் ஒரு குழந்தைபோல் எழுந்தருளினர்.

'இராவணனுக்கு, ஹிமவான் மந்தரம் மேரு என்னும் பர்வதங்கள் போல கனத்த இளைய பெருமாள், பக்தியுடன் தாங்கிய சிறிய திருவடிக்கு இலேசாக ஆனதுபோல், இம்முனிவருடைய பக்திக் கிசைந்த சடகோபன், தாம் அர்ச்சா ரூபியாக இருக்கும்போதே, அர்ச்சையில் காணமுடியாத விசேஷ அநுக்ரஹத்தைச் செய்தாரே!' என்று அரசன் போற்றினன். ப்ரதிஷ்டையும் மிகவும் விமரிசையாக நடந்தது. ஜீயரை, எம்பெருமான் ஆழ்வார் தேசிகன் முதலிய எல்லாரும் அநுக்ரகித்தார்கள். 540-வருஷங்களுக்கு முன் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் ஆழ்வாரை ப்ரதிஷ்டை செய்து ரக்ஷித்ததாலன்றோ, இன்றளவும் ஸ்ரீமத் அஹோபில மடத்தின் அஸாதாரணமான திவ்ய தேசமாக ஆழ்வார் திருநகரி விளங்குகிறது.

வ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெங்களூர்.

ஸ்ரீ:

ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹ த்யாந ஸோபாநம்

[41-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் அநுக்ரஹித்ததின் தமிழ் மொழிபெயர்ப்பு]

[ஸ்ரீ. உப. வ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்: பெங்களூர்]

1. வெள்ளிய தோர்தெய்வ மண்டபமாம்—அதில்
   விளங்குந் தூண்களோர் நான்குளவாம்.
   ஒள்ளிய பொன்றிக ழூசலுண்டாம்—அது
   ஒளிவிடும் நவமணி குயின்றதுவாம்.
2. பொன்றிகழ் பீடமும் சேர்த்துளதாம்—அதில்
   பூமக ளார்கேள்வன் வீற்றுளராம்.
   தன்சரண் சார்வதோ ராசையினல்—சாரும்
   தமர்கள்தாம் பற்றுதற் கேற்றவண்ணம்
3. நீட்டிய பாதத்திற் பாதுகையாம்—அதை
   நேசமாய்க் கருடன்றன் தாங்கிநிற்பான்.
   தேட்டமா மிவ்வலத் திருவடியை—எண்ணும்
   திருவுடை யார்பவக் கடல்கடந்தார்.
4. மடக்கிய திருவடி மற்றென்றது—செழு
   மலர்மக ளெழுந்தருள் பீடமாகும்.
   கடக்கரும் பவக்கடல் கடப்பதற்கு—அவர்
   கணுக்கால்கள் வாய்த்ததோர் தெப்பமாகும்.
5. முழந்தாள்க ளிரண்டும்மிக் கெழிலுடைத்தாம்—அவர்
   முன்றெடை கதலிபின் தண்டுநிகர்.
   மழுங்காத வழகுடன் கடிவிளங்கும்—பொன்
   மணிக்காஞ்சி பீதக வாடைசூழ.
6. புரைதீர்ந்து விளங்கிடும் நாபிமலர்—இப்
   புவனிக்கெ லாமது பிறந்தகமாம்.
   திரையாடு கடல்தந்த மாமகள்வாழ்—அவன்
   திருமார்வுக் கலங்காரம் திருமறுவாம்.

2|0111
N43 2:3

7. நரசிங்கன் கண்டத்துக் கலங்காரம்—ஒளி
நலமிக்க கௌஸ்துப மாமணியாம்.
திருவங்கு மடிதன்னி லிடப்பாகத்தில்—வீற்றுத்
தேவனுர் அணைந்திட மகிழ்ந்திடுவாள்.

8. மார்புற வணைந்தங்கு வீற்றிருப்பாள்—அலை
மாக்கடல் பூத்ததோர் மடக்கொடிதான்.
சார்புறத் தானின்ற வண்ணமதை—அவர்
சரணக்கு றிகாட்டுங் கையுணர்த்தும்.

9. அங்கையொன் றபயத்தைக் காட்டிநிற்கும்—இரு
அழகிய நீண்டபெ ரும்புயங்கள்.
சங்கமும் சக்கரமும் தாங்கிநிற்கும்—முகம்
தாமரை நாண்மலர் போன்றுளதாம்.

10. பற்பல வண்ணவில் வீசுமணி—அங்குப்
பகலவன் காந்திபோல் சோதிதிகழ்
நற்கன கம்முடி சாற்றினராம்—திரு
நரசிங்க னெழிலுடை முடிக்கணியா.

11. மேற்புறம் பொன்மயப் பணியரசாம்—அவர்
மிக்கசெஞ் சோதிநற் பணிமுடியால்
நாற்புறமும் விரிந்துநற் குடைகவிப்பார்—மேலே
நலமிகப் பொற்ப்ரபை விளங்கிடுமாம்.

12. பொன்மய மாம்சத்ரம் மேலுண்டு—அது
புரையற்று நலமிக்கு விளங்கிடுமாம்.
தன்மடி மேற்றிரு மாமகளை—இடத்
தாமரைத் திருக்கண்ணுல் நோக்கிடுவார்.

13. வலதுதி ருக்கண்ணுல் பத்தியொடு—ஆங்கே
வந்தெதிர் நிற்பாரை யாதரிப்பார்.
பொலன்மாலை கண்டத்திற் பூண்டிருப்பார்—மற்றும்
பூஷணம் பற்பல தரித்திருப்பார்.

14. சாலக்ரா மத்தாலே மாலையுண்டாம்—இன்னும்
ஸ்வர்ணத்தால் யஜ்ஞோப வீதமுண்டாம்.
மாலுக்க லங்காரம் காசுமாலை—முத்து
மாலைகள் சம்பக மாலையுண்டாம்.

15. மதிப்புக் கடங்காத விலைபெற்றதாம்—காஞ்சி
மட்டற்ற மாணிக்க மிழைத்துளதாம்.
துதிப்பார்க் கநுகூலம் செய்பவராம்—ஹரி
தொண்டரைப் புரப்பதில் தீக்ஷிதராம்.

16. மாலோல தேவனைக் கருதுவார்க்கு—அடி
மலர்முதல் முடிவரை யெண்ணுவார்க்கு
மாலோலன் திருவடிப் பத்திதன்னை—மிக
மட்டற்று வளர்த்திடும் பெற்றியதாய்
மாலோல சடகோப யோகிவரர்—பெரு
மகிழ்ச்சியால் ஸோபான மியற்றித்தந்தார்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

அரி(யல்)ஊர் (அரியலூர்)

ஸ்ரீ. உப. S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M. A, வித்வான் L. T.

'நீராய் நிலனாய்த் தீயாய்க் கானாய் நெடுவானாய்' நின்ற ஶ்ரிய:பதியானவன் 'தாம் தம் பெருமை யறியார்' என்றவண்ணம், தன் பெருமை தனக்கும் பேச நிலமல்லாது நின்றருளும் திருப்பதிகள் பலபல. நூற்றெட்டு என்று நுண்ணறிவோர் வரையறையும் உண்டு. ஆயினும் மனிதன் நடமாட்ட மில்லாத ஒதுக்குப் புறங்களில் ஓரோவிடங்களில் இவ்வுத்தமன் கோயில்கொண்டு செய்தருளும் குளிர்ந்த லீலைகளை ஆரே அறிவார்! திவ்ய தேசங்களைத் தேடி எப்படியாவது ஹரி பக்தர்கள் செல்வர். இத்திவ்ய தேசங்களின் கணக்கி லடங்காது தேவாதி தேவனது அத்யாஶ்சர்ய க்ருபா சேஷ்டிதங்கள் தாண்டவமாடும் நிலங்களை, ஒரு வைணவன் தன் ஆயுளிலேயே பாராமலு மிருந்துவிடக் கூடும். அப்படியானால் இது சிறிது நஷ்டமாகவே கொள்ளப்பட வேண்டும்.

திருச்சி ஜில்லாவில் பரந்த காடுகளுக் கிடையே அரியலூர் என்ற சிறு நகரம் உண்டு. வருடம் முழுவதுமே கதிரவன் வெம்மையை வாரி இறைக்கும் கான்நிலத்திடையே இவ்வூர் தோன்றும். இங்கு ஒரு திருமால் ஆலயம் உண்டு. முதல்முதல் காணும் காலத்திலேயே ஏதோ சிறு கிராமக் கோயில்போல் அல்லாமல், "சித்திரத் தேரும் சிறந் தமையும் மண்டபமும்" வாய்ந்து துலங்குகிறது. திருத்தேரை வணங்கி நகர்ந்தால், கம்பீரமாய் உயர்ந்து தோன்றும் கருடஸ்தம்பம் மனத்தைக் கவரும்.

அழகிய திருக்கோபுர வாயிலைத் தாண்டி உள் விளங்கும் ஸரோவரத்தில் கைகால்களைச் சுத்தி செய்துகொண்டு சென்றால் ஓர் குளிர்ந்த திருவாயிலும், அதற்கப்பால் ஓர் அழகிய ஸபா மண்டபமும் தோன்றும். இதையே தசாவதார மண்டபம் என்பர். கடுங் கோடையிலும் ஈண்டு மன்றூடே தென்றல் வந்துலவும். தளவரிசைக் கற்கள் நம் மெய்யிற் பட வணங்குங்கால் உடலெல்லாம் குளிர்ந்து இன்பம் பரவுகிறது. இத்தசாவதார மண்டபத்தின் அழகோ வர்ணிக்க யாவராலும் இயலாது. பன்னிரண்டு தூண்கள், ஆறு ஆறாக இரு வரிசையாய் நிற்கின்றன. இடப் புறம் முதலில், ஓர் நாயக மன்னன் கைகுவித்து, நாராயணனது அன்பே உருவாய் நிற்கிறார். இக்கோயிலுக்குத் திருப்பணி செய்த திவ்யபுருஷனோ, அல்லது இங்கு வழிபட்டு நற்பேறு பெற்றவனோ, அல்லது இவ்விரு பாக்யமும் உடையவனோ அறியேன். வலப் புறம் பத்தியில் முதற்றூணில் கணவனை நோக்கியவண்ணம் இவரது தர்மபத்னி நிற்கிறார். அவர்கள் அஹோஹா ஹ்ருதஹோஹா ஹ்ருத்! என்று வியக்குமாறு நிற்கிறார்கள்.

ஹைதர் கலாபத்தில ஒரு மகமதிய வீரன் இவ்விரு சிலைகளையும் மழுவால் அடித்தானாம். இத்தம்பதிகளுக்குப் புணர்த்த கைகள் மாத்திரம் பாழ்பட்டன. அப்பொழுது முதற் பத்தித் தூணில் நரசிங்கமாய் எழுந்தருளி யிருந்த ப்ரபுவானவன் தன் அர்ச்சா ஸமாதியைக் கடந்து, ஓர் வீரநாதம் செய்து, தன் பிடரி மயிரை உதறிக் கனல்விழி விழித்தானாம். மகம்மதிய வீரன் 'இது ஏதோ திவ்ய சக்தியுள்ள ஆலயம்' என்று கருதி ஏதும் இன்னல் செய்யாது அப்பாற் சென்றானாம்.

தசாவதார உருவங்களைப் பற்றிச் சொல்லப்புகின், ஒவ்வோர் வடிவத்திற்கும் ஒரு புஸ்தகமே எழுதவேண்டும். மநுஷ்யாக்ருதியாய், மந்தஹாஸத்துடன், அழகே உருவமைந்த இதர வடிவங்களைச் சற்று மறந்து, ஸ்ரீ நரஹரியின் திவ்ய விக்ரஹத்தைச் சற்றுப் பார்த்து நிற்கநிற்க நம் உடல் புளகாங்கித மாகிறது. நாம் நிற்கும் காலமும் தேசமும் மறைகின்றன. நாம், ஹிரண்ய கசிபுவின் அரண்மனையில் அச்சுதன்

எழுந்தருளிய சோதித் திருத்தூணுக்கு முன் நிற்பதுபோல் தோன்றுகிறது. என்ன அழகு! என்ன அங்காந்த வாய்! சிலா திருமேனி இரத்தமும் நரம்பும் கொண்ட அழகிய மானிட வடிவாகவே மிளிர்ந்து தோன்றுகிறது: வளைந்து கூரிய திருநகங்களும், ஹிரண்யனது காலையுந் தலையையும் அழுத்திப் பிடித்த திருக்கைகளும், அன்னான் குடலைப் பிளந்து பொகட்டு மாலையாகத் தரிக்கும் வேறு திருக்கைகளும், நிமிர்ந்த வரைபோல் வனப்புற்ற திருமார்வும், திருவடித் தலத்தில் துலங்கும் ஸ்ரீப்ரஹ்லாதாழ்வான் திருவடிவும், காணக் காண நம் மனம் பெருமையாலும் அன்பினாலும் ஆனந்தத்தாலும் பொங்கிப் பொங்கி நிற்கிறது. 'இந்த நரஸிம்மம் நம்மை ஆளும் இறையாகப் பெற்றோமே!! இந்த வைகுண்ட கண்டீரவத்திற்கு எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் வாழாட்பட்டு நின்ற குடியிற் பிறந்தோமே!" இவ்வித ஸாத்விக கர்வம் தலையோங்குகிறது. பக்த கோடியில் முதற்றுலங்கும் ஸ்ரீ ப்ரஹ்லாதனின் திருமுகத்தில் உள்ள வியப்பும் அன்பும் ஆனந்தமும் அமைதியும் சொல்லத் திறமன்று.

இச்சீரிய சிங்கப்பெருமானுக்கு ஒரு சிறு கோயில் அமைத்திருக்கிறார்கள். பூவும் பூசனையும் இவனொருவனே மிகையாகக் கொள்ளுகிறான். ஒருவாறு நம் மனத்தை அடக்கி உள்ளே சென்றால், அங்கு விளங்குபவன், தேசமெல்லாம் புகழும் திருவேங்கடத்தான். இவ்வெம்பெருமானிடம் ஒருவரிடமும் காணப்படாத ஓர் விசேஷ மென்னவெனில்: முகம் நிறைந்த சிரிப்பே. மந்தஹாஸ மல்ல. அப்பொழுது தான் ஒரு பச்சைக் குழந்தையை லாலநம்செய்த தாய் முகத்திலும், தன்னை வாயாரப் புகழ்வாரது துதிச் சொல்லைக் கேட்டவர் முகத்திலும், தாங்கொணாத விகடத் துணுக்கைப் படித்தோ கேட்டோ நிற்பவர் முகத்திலும், என்ன முழுச்சிரிப்பு காது வரையில் அகன்று துலங்குமோ, அச்சிரிப்பை இவ் வச்சுதனுடைய முகச்சோதியில் காணலாம்.

மறுபடியும் அர்த்தமண்டபம் திரும்பினால், வலப்புறத்தில் ஒரு சிங்காசனத்தில் ஸ்ரீ பேரருளாளன் ஸ்ரீ பூமி நீளைகளுடன் நிற்கிறான். பக்கலில் ஸ்ரீ பெருந்தேவி நாச்சியார் வீற்றிருக்கிறார். இவர்கள் ஏன் இங்கு வரவேண்டும்? இதைப் பன்னியுரைக்கில் ஓர் பாரதமாகும். குளத்தின் கரையில் உள்ள அழகிய கோயிலில் இருந்து, பின் கவனிப்பா ரற்று, ஈண்டு கொணரப்பட்டனராம்! குளக்கரைக் கோயிலோ கன்னார் மதிள் சூழ்ந்தது. வாவியும் மண்டபங்களும் மாடமும் முற்றங்களும் பாழ்பட்டன. தங்யர்கள் கட்டிய கோயிலைப் பழது பார்க்க ஆற்றலில்லாது பாழ்படுத்திவிட்டோம்! உணர்ச்சி ததும்பும் முகமுடைய இரு துவார பாலகர்கள் நன்றியற்ற நம்மைக் கண்டு ஓர் துயரமான புன்முறுவல் புரிந்து நிற்கிறார்கள். இக்கோயில் மறுபடியும் எழுமோ! மாதவனே அறிவான்!!

மறுபடியும் இக்கோயிலை மறந்து அர்த்த மண்டபத்திற்கு வருவோம். வலப்பங்கில் நிகரற்ற வடிவு வாய்ந்த ஸ்ரீ ராமபிரானும் மைதிலியும் இலக்குவனும் நம்மீது பூர்ண கடாக்ஷ அமுதை அள்ளித் தெளிக்கிறார்கள். இதை யெல்லாம் கண்டு 'கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக் கினியன கண்டோம்' என்று புலற்றிய வண்ணம் நகர்வோம். இத்தகைய சில்ப நிதியாகிய நகரம் நம் தென்னிந்தியாவிற்கே ஓர் பெருமையல்லவா! நினையுந்தோறும் நெஞ்சு இடிந்து அன்பினாற் கரைந்து ஆரவாரிக்கிறது. செங்கண்மால் எங்கண்மால் என்று சொல்லும் தொல்லடியார் குலத்திற் பிறக்க என்ன நோன்பு நோற்றோங்கொலோ!!

இங்குளது மிவ்வரியென் றியம்பிக்கேட்ட விரணியனின் முன்னிடிந்த தூணினின்றும்
பொங்குசினத் தாளரியாய்ப் புறம்போதந்து பொன்பெயரோன் மார்பிடந்த புனிதர் [கோயில்
தெங்குளதோர் செவ்விளநீர் மந்திமாந்திச் செழுங்கிளைமேற் கடுவனுட னினிதே சேரப்
பங்குகளுஞ் சங்கினமே லன்னந்தாவும் பைம்புனலா ரரியலெனும் பதியேதானே.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

காரயித்ருத்வ ஸித்தாந்த விமர்சநம்

[மதுராந்தகம் தி. ஈ. வீரராகவாசார்யர், திருவாதி]

(ஸம்புடம் 2, ஸஞ்சிகை 2: பக்கம் 64 தொடர்ச்சி)

இனி, யாம் உதாஹரித்துள்ள ப்ரமாணம்சத்தைப் பற்றி இவர் சொல்லும் தூஷணங்களை விமர்சநம் செய்வோம். "உபேக்ஷகத்வமாவது, அந்தந்த ப்ரவ்ருத்தி காலத்தில் 'விசேஷப்படியாக'த் தடுக்காமலிருப்பதே. உபேக்ஷகத்வம் அப்படித் தடுக்காமலிருப்பது தான் என்பதானது, "ஸாதாரணோ ந ஹேதுஸ்ஸஸ்யேஷ்விவ விஹாஸ்ஸர்வகார்யபர்ஜந்யாணாம்" [எல்லாக் கார்யங்களுக்கும் விதைகளுக்கு ஜலம் போல் பகவான் ஸாமாந்ய ஹேது] என்பதால் விளங்குகின்றது. என்பதாக ஸம்பாதக ஸ்வாமியின் ஸங்க்ரஹத்தில் காணப்படுகிறது. உபேக்ஷகத்வம் இத்தகையது என்பதற்கு இது ப்ரமாணமாகாது என்கிறார் இந்த ஸ்வாமி. ஆகும் வழியைக் காட்டுகின்றோம். நிவாரணத்திற்கு அடைமொழியாக 'விசேஷப்படியாக' என்றும் 'அப்படி' என்றும் சேர்ந்திருக்கின்றது; முன் உதாஹரித்துள்ள சரம ச்லோகாதிகார ஸ்ரீஸூக்தியில் 'ஒன்றிலே ப்ரவ்ருத்தனான சேதநனை விலக்காத வளவில் உபேக்ஷகன்' என்றிவ்வளவே காணப்படுகிறது; 'விசேஷப்படியாக' என்கிற அடைமொழியைக் காணோமே, என்று சங்கை எழக்கூடுமன்றோ? அதன் விளைவு என்ன! சேதநன் விலகுவதற்கு ஈசன் ஸாமாந்ய காரணமுமன்று என்று தேறும். அப்படி கொள்ளக்கூடாது. ஆசார்யன், தாமே எல்லாக் கார்யங்களுக்கும் ஈசன் ஸாமாந்ய காரணமென்று ஸ்தலாந்தரத்தில் அருளியிருக்கிறார்; ஆகவே விசேஷகாரணமன்று என்பதிலேயே இங்கும் தாத்பர்யம் கொள்ளவேண்டும் என்பதற்காகவே இதை ப்ரமாணமாக்கியது. 'ஸாக்ஷிதா ந்ருணாம் வர்ஷவத்' என்கிற ஸாராவளி ஸூக்திக்கும், 'தத்ரோபேக்ஷா' என்கிற தத்வஸார வசநத்திற்கும் வ்யாக்யாநம் செய்யுமிடத்தில், ஆசார்யர்கள் ஸலிலாங்குர த்ருஷ்டாந்தத்தைக் காட்டி, ஸாமாந்ய காரணத்வமே 'உபேஷகத்வம்' என்று நிர்வசநம் செய்திருக்கிறார்கள் என்பது கவனிக்கத் தக்கது. இந்த ச்லோகத்தில் அத்தகைய 'உபேக்ஷகத்வம்' ப்ரதிபந்நமாவதைப் பற்றியே அவர்கள் இதை உதாஹரித்திருக்க வேண்டுமன்றோ? தத்வஸார வ்யாக்யாதா கண்டரவேணவும் இதை ப்ரமாணமாகக் காட்டி யிருக்கிறார். ஆசார்யன் தாமே, "க்ஷேத்ரஜ்ஞருடைய விஷம ஸ்ருஷ்டி ஹிதாஹித ப்ரேரணாதிகளில் விசேஷ காரணமன்றிக்கே யிருக்கை உதாஸீநத்வம்" என்பதாக ஸ்பஷ்டமாக்கியிருப்பதையும் முன்பே உதாஹரித்துள்ளேன். அடுத்தபடியாக இப்படிப்பட்ட உபேக்ஷகத்வமே, ரசநாநுபபத்யதிகரண ச்ருத ப்ரகாசிகையிலும் காண்கிறது; "ப்ரவ்ருத்திகாலே து விஶேஷதோ நிவாரகத்வாபாவ ஏவ ஹ்யுபேக்ஷகத்வம்" என்பதே அந்த ஸூக்தியாகும் என்று யாம் கூறியது. இந்த ஸூக்தியினால் முன் கூறிய உபேக்ஷகத்வம் ஏற்படாதென்கிறார். இது ஸரியன்று. "ப்ரவ்ருத்திகாலே-அந்தந்த ப்ரவ்ருத்தி காலத்தில், விஶேஷத:-விசேஷப்படியாக, நிவாரகத்வாபாவம்- தடுக்காமலிப்பது" என்று அக்ஷரார்த்தமாய் நிற்பதை இவர் இல்லை என்பது எங்ஙனே கூடும்! ஆகிலும் அது ஸாதாரணோபகாரத்வ ரூபம் என்று இதனால் ஏற்படவில்லையே எனில், ஆகிலென்! இரண்டு அர்த்தங்களைப்ரதிஜ்ஞைபண்ணி முறையேப்ரமாணோபந்யாஸம் செய்யுமிடத்தில், இரண்டு அர்த்தங்களும் ஒவ்வொரு ப்ரமாணத்திலும் ஏற்படவேண்டும் என்கிற நியதியில்

லேயே. இந்த வசநத்தினுல் ‘விஶேஷதோ நிவாரகத்வாபாவாதேவம் உபேக்ஷகத்வம்’ என்று கண்டரவேண ஏற்பட்டு விடுகிறதன்றே! மேலே உதாஹரிக்கப் போகிற பராயத்தாதிகரண வசநத்தினுல் ஸாதாரணேபகாரத்வ ரூபம் அது என்று ஸித்திக்கின்றதே. அதுவே போதுமன்றே! உண்மையிலோ இங்கும் நிவ்ருத்திக்கு ஈசன் விசேஷகாரண மன்று என்றதனுலேயே ஸாதாரண காரணம் என்பது பலிக்கின்றதே. ஸர்வ காரணபூதனுன ஈசன் ஒன்றுக்கு விசேஷ காரணமன்று என்ருல், அந்தக் கார்யத்திற்கு ஸாமாந்ய காரணம் என்று தனித்துச் சொல்லவேண்டாவே. “ஶாஸ்த்ரப்ரவ்ருத்தித்வாரேண ஸாமாந்யேந அஹிதப்ரவ்ருத்திநிவாரணஸ்ய க்ருதத்வாத்” என்கிற முன் வாக்யத்தில் ஸாமாந்ய காரணத்வம் கண்டோக்தமுமாயிற்று. இதனையும் யாம் உதாஹரித்திருக்கிறே மாகையால் இவருடைய தூஷணத்திற்கு இங்கும் அவகாசமில்லை.

இப்படி விசேஷப்படியாக விலக்காமையே உபேக்ஷகத்வம். அது ஸாதாரணேபகாரகத்வ ரூபம் என்று இரண்டு ப்ரதிஜ்ஞைகளும் ஸித்தித்தாலும், இது காரயித்ருத்வ ரூபம் என்பதற்கு இவ்வசநம் ப்ரமாணமாகாதென்கிறேம் என்பது இவர் நினைவாகில், “காரயித்ருத்வமானது ஸாதாரணேபகாரகத்வ ரூபமன்று என்று ஸாதிப்பதற்கே இவர் முயற்சி செய்திருக்க வேண்டுமன்றி, உபேக்ஷகத்வமானது விசேஷப்படியாக நிவாரணம் செய்யாமையாகாது.” என்றும், ‘அது ஸாதாரணேபகார ரூபமு மாகாது’ என்றும் பதேபதே எழுதி வைத்திருக்க வேண்டாமே. உபேக்ஷகத்வ நிலையில் காரயித்ருத்வம் கிடையாது என்று நினைத்து ஸ்ரீ தேசிக ஸூக்தியையும் இத்தகைய உபேக்ஷகத்வத்தை ஆக்ஷேபிப்பதன் மூலம் ஶ்ருத ப்ரகாசிகாதி ஸூக்திகளையும் புறக்கணித்து விடுகிருர். ப்ரக்ருத ஶ்ருதப்ரகாசிகா வசநத்தினுல் காரயித்ருத்வம் ஏற்படாதென்பதுவும் ஸரியன்று. இவ்வசநத்திற்கு முன்புள்ள வாக்யத்தில் ப்ரயோஜயித்ருத்வமானது, ஆஜ்ஞாபந ரூபம் ப்ரார்த்தநா ரூபம் உபதேசரூபம் என்று மூன்று விதம் என்கிருர் ஆசார்யர். சாஸ்த்ரமானது ஆஜ்ஞா ரூபம்; உபதேச ரூபம். இங்கு சாஸ்த்ர முகேந ஸாமாந்யத அஹித ப்ரவ்ருத்தி நிவாரணம் செய்திருப்பதாகச் சொல்லியிருப்பதால், ஸாமாந்யத: ப்ரயோஜயிதா வாகிருன் ஈசன் என்றதாயிற்று. ப்ரயோஜயித்ருத்வமும் காரயித்ருத்வமும் ஒன்றே. இதை ஏற்கெனவே விளக்கியுள்ளே னுகையால் இங்கு விஸ்தரிக்கவேண்டியதில்லை.

இதற்குமேல் இவர் சொல்லுவன :—

(1) “இப்படிப்பட்ட உபேக்ஷகத்வமானது அசுப ப்ரவ்ருத்தி விஷயத்தில் மாத்ரம் உதாஹ்ருத ஶ்ருதப்ரகாசிகா வசநத்தில் சொல்லியிருப்பதால் சுபாசுப ஸாதாரணமாக யாவத் ப்ரதம ப்ரவ்ருத்திலும் இத்தகைய உபேக்ஷகத்வம் ஸித்தியாது.”

(2) “மேலும் இப்படிப்பட்ட ஸாதாரணேபகாரகத்வம் வாசியற த்விதீயாதி ப்ரவ்ருத்திகளிலு முளதே யாகையால், ப்ரதம ப்ரவ்ருத்தியி லென்று இதற்கு ஒரு விசேஷத்தைச் சொல்லியது ஸங்கதமாகாது” என்பன. இந்த ஆபாதநமே ஸரியன்று; ஶ்ருத ப்ரகாசிகா வசநத்தின் பேரில் இந்தத் தூஷணத்தை இவரும் பரிஹரிக்கவேண்டியவர்தானே? பரமார்த்த மென்னவெனில் :

(1) சக்தனுன ஈசன் ப்ரதமத: அஹித ப்ரவ்ருத்தியை ஏன் தடுத்துப் போடவில்லை! இது சங்கை. இதற்குச் சொல்லும் பரிஹாரமாவது:—ஶாஸ்த்ரத்தைக் கொண்டு பொதுவாக அஹித ப்ரவ்ருத்தியைத் தடுத்தேயிருப்பதால், அடியோடு உபேக்ஷண மென்பதில்லை. ஹிதத்திலோ அஹிதத்திலோ சேதநன் ப்ரவர்த்திக்கும்போது விசேஷித்துத் தடுக்காமை என்பது அவன் இஷ்டம் என்பதே. இங்குள்ள ப்ரவ்ருத்தி சப்தமானது ஹிதாஹித ப்ரவ்ருத்திகள் இரண்டையும் ஸங்கோச மறப்

போதிப்பதைப் பாதிக்க வேண்டா. "ஹிதாஹித ப்ரேரணதிகளில் விசேஷ காரண மாகைமை உபேக்ஷகத்வம்" என்கிற முன் உதாஹரித்துள்ள ஆசார்ய ஸூக்தியிலும் இரண்டையும் சேர்த்திருப்பது இங்குக் கவனிக்கத் தக்கது. ஆகவே இவர் சொல்லும் முதல் தூஷணம் பரிஹ்ருதமாயிற்று.

(2) த்விதீயாதி ப்ரவ்ருத்திகளில் அநுமந்த்ருத்வ முகேந விசேஷோபகாரமும் உண்டு. ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஸாதாரணோபகார மாத்ரமே. ஆகவே ப்ரதம ப்ரவ்ருத்தியிலே இதற்கு விசேஷம். இது இவருடைய இரண்டாம் ஆபாதநத்திற்குப் பரிஹாரம். இப்படி, பத்தாவது ஸஞ்சிகையில் காணும் தூஷணங்களுக்கு ஸ்தாலீ புலாக ந்யாயத்தாலே பரிஹாரம் காட்டினோம். இனி, பதினோராவது ஸஞ்சிகையிற் காணும் அம்சங்களை விமர்சநம் செய்வோம்.

"ஸாயாரணொவகார விஶெஷொவகாரவெஷஒ௯ண ஸவ_ூா ஸாரீ நாஈவவதீ நாஂ வரிஹ௱தக௯ாஃ" என்பதாக பராயத்தாதிகரண ஶ்ருதப்ரகாசிகா வசநமொன்று. உபேக்ஷகத்வம், அநுமந்த்ருத்வம், ப்ரயோஜகத்வம் ஆகிய இம்மூன்றுக்கும் பரஸ்பரம் வித்யாஸத்தைச் சுருங்கத் தெளிவிக்க இந்த ஸ்ரீஸூக்தி. இதற்கு த்விதீயாதி ப்ரவ்ருத்திகளில் அநுமதி ப்ரதாந முகத்தாலே விசேஷ காரணமாயிருப்பதால், அவற்றுக்கு ஈசனே ப்ரயோஜயிதா வென்கிறது" (ப-392-393). இது இந்த வாக்யத்தின் கருத்து என்பதாகப் பாவவர்ணநம் செய்திருக்கிறார் இந்த ஸ்வாமி. அநுமந்த்ருத்வத்தையும் இந்த ப்ரயோஜயித்ருத்வத்தையும் ஒன்ருகவோ ஏக க்ஷணத்தில் ஸம்மேளநம் பெற்றதாகவோ இவர் கொண்டது ஶ்ருத ப்ரகாசிகா நிஷ்கர்ஷத்திற்கு மாறுபட்டது. (1) உபேக்ஷகத்வமானது ஸாதாரணோபகாரகத்வ ரூபம். மற்றுமிரண்டும் விசேஷோபகார ரூபங்கள். அவற்றுள் (2)ப்ரவ்ருத்த ப்ரவர்த்தநம். அநுமந்த்ருத்வம் (3) ப்ரயோஜயித்வத்வமானது அப்ரவ்ருத்த ப்ரவர்த்தந ரூபம். இது அதிகாரி விசேஷ நியதம் என்று ஶ்ருதப்ரகாசிகா நிர்ணயம். "வூயவெூவூ ஜுஸ௱ நாஈநூ ௱௯வஃ கதூஜா நாஈக௵ வூதிக௵ யொஃ வூயொஜயிதூ௯ாஃ" என்றும் "வூயவஈவெக்ஷக௯ஂ வஸூாஂ நாஈநூ௱௯ஂ கூவிவிஷயெவூபொஜக௯ஂ" என்றும் "ஂ௱ஂஷூ௱ஶஂ விஶெஷொவகா௱ஂ வூயவதவவ கெஷாவிதீஶூ௱ஃ கரொ்தி தது வூயொஜயிதூ௯ாஃ" என்றும் இவ்வாறாக ப்ரயோஜயித்ருத்வத்தை அதிகாரி விசேஷத்தைப் பற்றியதாகவும், அவ்வதிகாரிகளுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் அது உளது என்றும், இவ்வதிகரணத்திலும் அதிகரணாந்தரத்திலும் ஶ்ருத ப்ரகாசிகாசார்யர் அருளிச் செய்திருக்கிறார். ஆகவே ப்ரவ்ருத்த ப்ரவர்த்தந ரூபமான அநுமந்த்ருத்வத்திற்கும் அப்ரவ்ருத்த ப்ரவர்த்தந ரூப ப்ரயோஜயித்ருத்வத்திற்கும் அபேதத்தையோ ஸம்மேளநத்தையோ நினைத்து இவர் எழுதியது ஸரியன்று. இவ்வதிகரணத்திலே "க௯யஈ நாஈஜெூ௯ஂ? கவூவூ ஜுவூவதூந ௱௵வஂ வூயொஜயிதூ௯ஂ ஹூஸூ ஷூஶூதெ? கநாஈஜெூகெ ஸதி க௯யஇஷஈவவஷூதெ" என்பதாக உள்ள ஶ்ருதப்ரகாசிகா வசநமொன்றே இவற்றுக்கு அபேதமோ ஸம்மேளநமோ கிடையாது என்று தெளிதற்குப் போதுமானது. இந்த ப்ரயோஜயித்ருத்வமானது விசேஷோபகார ரூபம். அதிகாரி விசேஷ நியதம். "ஸாது கர்ம காரயதித்யாதி ஶ்ருதி ப்ரதிபந்நம் அதிகாரி விசேஷ"மும் உபகார விசேஷமும் இதில் காண்கிறது. ஆகவே இந்த ப்ரயோஜயித்ருத்வமானது ஸர்வ ஸாதாரணமன்று. உபேக்ஷகத்வ நிலையில் கொள்ளும் ப்ரயோஜயித்ருத்வமானது. இதனில் வேறு ஸாமாந்யோபகாரமாத்ர ரூபம் ஸாமாந்யாதிகாரிகளைப் பற்றியது. ப்ரயோஜயித்ருத்வமானது உபதேஷ்ட்ருத்வ ரூபம்; ஆஜ்ஞா

ரூபம்; சாஸ்த்ரமானது உபதேச ரூபம்; ஆஜ்ஞா ரூபம். சாஸ்த்ர ப்ரவர்த்தநம் செய்து ஸாமாந்யத: அஹித ப்ரவ்ருத்தியை எல்லோருக்கும் தடுத்திருக்கிறுன் ஈசன் என்பதாக ரசநாநுபபத்யதிகரண ஶ்ருதப்ரகாசிகை. ஆகவே ஸாமாந்யத: ப்ரயோஜயித்ருத்வத்தை இவ்வாசார்யர் இசைந்திருக்கிறுர் என்பதை முன்பே சொல்லியிருக்கிறேன். ப்ராயத்தாதிகரண ஶ்ருத ப்ரகாசிகையில் "ப்ரதம ப்ரவ்ருத்தியில் இச்சாஜநகத்வம் ஈசனுக்கு உளதேல், இதுதானே ப்ரயோஜயித்ருத்வம். அதிகாரி விசேஷத்தில் சொல்லிய ப்ரயோஜயித்ருத்வத்திற்கு வேற்றுமை என்ன! என்று சங்கித்து அது விசேஷோபகார ரூபம் என்று பதில் சொல்லியிருக்கிறது. பூர்வோத்தர பக்ஷங்களுக்கு நிர்வாஹ மிது. ப்ரயோஜியித்ருத்வத்தில் உட்பிரிவை இவர் இசையாமையால், அநுமந்த்ருத்வ நிலையில் அதைச்சேர்த்திருப்பது ஸரியன்று. பராயத்தாதிகரண ஶ்ருதப்ரகாசிகையில், "ஸாமாந்யமாகவும் விசேஷித்துமுள்ள ஜீவகத கர்த்ருத்வ மெல்லாம் பராயத்தம் என்று சொல்லி யிருக்கிறது; இது ப்ரதம ப்ரவர்த்தியிலும் பகவானுக்கும் ஸாமாந்ய கர்த்ருத்வமுண்டு என்பதை த்ருடப்படுத்துகிறது" என்பதாக நான்காவது ஸஞ்சிகையில் காண்கிறது. ஸாமாந்ய கர்த்ருத்வம் என்பதை விஷயமாகக் கொண்டு 11-வது ஸஞ்சிகையில் பெரும் பாகத்தில் தூஷணம் காண்கிறது. "ஸாமாந்ய காரயித்ருத்வம் உண்டு என்பது பராயத்தாதிகரண ஶ்ருத ப்ரகாசிகையில் ஏற்படுகிறது" என்பதாக நமது பூர்வ வாக்யம். இவைகளிலிருந்து ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரனுக்கு ஸாதாரணத: காரயித்ருத்வமே உண்டு என்பதே ஸ்ரீஶ்ருத ப்ரகாசிகாசார்யருடைய ஆசயம் என்பதாக மேல் வாக்யம். இவற்றின் மத்தியிலுள்ளது, "பகவானுக்கு, ஸாமாந்ய கர்த்ருத்வம்" என்பது. ப்ரயோஜக கர்த்ருத்வத்தையே போதிக்கு மென்பதை விவரணம் செய்ய வேண்டுமோ! தத்வம் இவ்வாருக இருக்க: ப்ரயோஜ்ய கர்த்ருத்வத்தை ஈசனுக்குச் சொல்லியிருப்பதாக்கித் தூஷித்திருப்பது ஸரியா! என்பதை ஸஹ்ருதயர் அறிவார்கள். "ஸாதாரண கர்த்ருத்வமுடைய ஈஶ்வரன்" என்பதாக சரம ஶ்லோகாதிகாரத்தில் ஆசார்யஸூக்தி காண்கிறது. "ஔதாஸீந்யேந ஸ்தித:.......வஸ்துத: நைவ கர்த்ருத்வமவலம்பதே" என்பதாகக் கீதாபாஷ்ய ஸ்ரீஸூக்தி. ஈசனுக்குக் கர்த்ருத்வத்தையே இசையாவிடில் ப்ரயோஜ கர்த்ருத்வமும் தத்விசேஷமாகையால் கூடாதே. ஜீவனுக்குக் கர்த்ருத்வம் பராயத்த மென்றதனல் ஈசனுக்கு ப்ரயோஜ கர்த்ருத்வம் என்பதும் ஸித்தந்தானே. "காரயித்ருத்வ மென்கிற பதமன்றியி லிருக்கிற வ்யாக்யாநாந்தரத்தில் "ஸாதாரணகாரயித்ருத்வவிவக்ஷயா"" என்றிருப்பதாகப் பக்கம் 398 இல் இவர் எழுதிவைத்திருக்கிறுர். "இதை வாசக நண்பர்கள் கவனிக்கவேண்டும்" என்றும் தூண்டுகிறுர். அப்படி யாதொரு விரோதமு மில்லையே இங்கு. ஆலமர்யாதையில் தூஷண மிவர் செய்து போகிருரேயல்லது, வக்தாவின் தாத்பர்யம் ப்ரகரணம் முதலியதில் கண்ணேட்டங் கொள்வதில்லை.

இனி 12-வது ஸஞ்சிகையிலுள்ள நிரூபணத்தின் போக்கை விமர்சிப்போம். எட்டாவது ஸஞ்சிகையிலுள்ள அடியேன் வ்யாஸத்தைப் பற்றியது இது. "ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈஶ்வரன் காரயிதா அன்று உபேக்ஷகனே என்பதாக ஶ்ருத ப்ரகாசார்ய ப்ரப்ருதிகளின் மதம் என்பதற்கில்லை" என்பதாக நமது வ்யாஸத்தின் உபக்ரமத்தில் சொல்லியிருக்கிருேம். "இப்படியாகில் ப்ரதம ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகத்வத்தைச் சொல்லும் ப்ரமாண வசநங்களுக்கு என்ன வகை சொல்வது என்பதைச் சிந்திக்கவில்லை போலும்" என்பதாக இவர் தூஷணம். நன்ருகச் சிந்தித்தோம். 'உதாஸீநத்வம் ச' என்கிற ஸாராவளியின் அவதாரிகையில் "அத ஸ்ருஷ்டே: ஜீவஸ்ய ப்ரயத்நப்ரவ்ருத்யுபாதாவஸ்தாயாம் காரயிதா ந பவதி ஸம்ஸ்காரஸஹகாரீ அபேக்ஷதே" இதி.......தஸ்மாத் ப்ரதிக்ஷிபதி

றெதி" என்பதாகச் சிந்தாமணி ஸ்ரீ ஸூக்தியையே அநுவாதம் செய்தோமத் தனே. "உபேக்ஷகத்வத்தோடு காரயித்ருத்வமும் கூடி வாழட்டுமே" என்பதே ஆசாரியர்களின் நினைவு. இது முடியாதென்கிறார் இவர். இதற்கு ஸமாதாநம் முன்னமே நிரூபித்திருக்கின்றோம்.

இதற்குமேல் பரமதபங்க ஸ்ரீ ஸூக்தியொன்றை எடுத்துக் காட்டியுள்ளோம். அதாவது—"உத்தர கார்யங்களைப் பற்ற ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளைக் கொடுக்குமது சேதநர் பக்கல் இவனுக்கு விசேஷித்து ப்ரேரகத்வம். அசேதநங்களில் ப்ரேரகத்வமானது, கார்யாந்தராநுகுண விகார மாத்ர ஹேதுத்வம். இவற்றாலே காரயிதா வென்றும் ப்ரவர்த்தகன் என்றும் சொல்லுகிறது" என்பதே. உதாஹ்ருத வசநதில் 'உத்தர கார்யங்களை' என்பதாக ஒரு பத மிருக்கிறதன்றோ! இதற்கு த்விதீயாதி ப்ரவ்ருத்திகள் என்பதாக இவர் நினைத்து இந்த அர்த்த விசேஷத்தை யாம் மறந்துவிட்டதாகவும் குறை கூறுகிறார். இது ஸரியன்று. (1) சேதநருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ஈசனுக்கு ப்ரேரகத்வ முண்டு என்பதற்காகவே "[illegible]" இத்யாதியாக அவதரித்துள்ள ஸாராவளி ஸ்ரீ ஸூக்திகளுக்கு விருத்தமாகு மிது. (2) அத்யந்தம் ஆநுகூல்யத்திலோ ப்ராதிகூல்யத்திலோ வ்யவஸிதர்கள் விஷயத்தில் ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ப்ரேரகத்வமுண்டு என்பது '[illegible]' '[illegible]' இத்யாதிகளில் ப்ரதிபந்ந மாகையால், அந்த ப்ரேரகத்வத்தில் அவ்யாப்தியும் ப்ரஸங்கிக்கும். இது அதிகாரி விசேஷ நியதம் என்பதை இருவரும் எழுதிவைத்திருக்கிறோமே. (3) "ஸ்ரீதேசிகன் பக்ஷத்தில் சேதநருடைய ப்ரதமப்ரவ்ருத்தியிலும் ஈசனுக்கு ப்ரேரகத்வ முண்டு" என்பதாக ஸம்பாதக ஸ்வாமியும் கொண்டிருக்கிறார். ஆகையால் 'உத்தர கார்யங்கள்' என்பதற்கு த்விதீயாதி ப்ரவ்ருத்திகளை அர்த்தமாக்க முடியாது'. இதன் பொருளை ஆசார்ய ஸ்ரீ ஸூக்தியைக் கொண்டே விளக்குவோம். "சரமஶ்லோகாதிகாரத்திலே இவன் ஜீவனை ஒரு கார்யத்திலே ப்ரவர்த்திப்பிக்கும்போது அக் கார்யத்தைப்பற்ற காரயிதா வென்று சொல்லப்படும்' என்று ஆசாரியனே அருளிச் செய்திருக்கிறார். காரயித்ருத்வமும் ப்ரவர்த்தகத்வமும் பிந்நமன்று என்பதை, "இவற்றாலே காரயிதா வென்கிறது" என்பதாக உதாஹ்ருத பரமதபங்க ஸூக்தியே காட்டுகின்றது. '[illegible]" என்பதாகச் சிந்தாமணியிலும் பதயோஜனையிலும் ஆசார்யர்கள் பணிதி. "ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசன் காரயிதாவன்று, என்பதை நிரஸிப்பதாக "[illegible]" என்கிற ஸாராவளி ஶ்லோகத்தை அவதரிப்பிக்கின்றது சிந்தாமணி. '[illegible]' பதமே மூலத்தி லுள்ளது. ஆகவே காரயித்ருத்வமும் ப்ரேரகத்வமும் ஒன்றே. இங்கு காரயித்ருத்வ ஸ்வரூபத்தை ஆசாரியன் நிரூபிக்குமிடத்தில் "உத்தர கார்யத்திலே என்னமல் ஒரு காரியத்திலே என்று பொதுவாக அருளியதைக் கவனிக்கவேண்டும். இங்குற்ற கார்ய சப்தம் ப்ரவ்ருத்தி பரமன்று. ப்ரவ்ருத்தியில் ப்ரவர்திப்பிக்கும் போது என்பது சேராது. ஆகவே க்ருதிஸாத்யபரம் என்பது வெளிப்படை. ப்ரக்ருதத்திலும் கார்யசப்தம் அதையே போதிக்கின்றது. ப்ரவ்ருத்தி பரமன்று. ஜ்ஞாந சிகீர்ஷாதிகளை என்று 'ஆதி' சப்தத்தினல் அது ஸங்க்ரஹீதமாகுகிறது. உத்தர சப்தமும் த்விதீயாதி பரமன்று. ஜ்ஞாநசி சிகீர்ஷாதி ப்ரயத்நங்களுக்கு உத்தரமான (அவற்றால் ஏற்படுமதான) என்று அர்த்தம். உத்தர கார்யங்களைப் பற்றி ஹேதுக்களான, என்கிற பதத்வயத்தின் ஔசித்ய விசேஷத்தை ஸ்வாவஸரத்திலே நிரூபிப்போம். அல்லது 'உத்தர கார்யங்களைப்பற்றி' என்பதற்கு ப்ரேரகத்வத்தோடு அந்வயமும் கொள்ளலாம். "அக்கார்யத்தைப் பற்ற காரயிதா" என்கிற சரம ச்லோகாதிகார ஸூக்தியை நினைக்கவும். இப்பொழுது ஹேதுத்வமானது உத்தர கார்யங்களைப் பற்றியது என்பது ஸமபிவ்யாஹாரம் (பதங்களின் சேர்க்கை) இதனல் ஸித்திக்கின்றது. பதயோஜனை

ஏதேனு மாயிடுக. த்விதீயாதி ப்ரவ்ருத்தி பரமாக உத்தர கார்ய சப்தத்தை இவர் நினைத்திருப்பது ஸாராவளியில் ஆசார்யன் நிஷ்கர்ஷத்திற்கும் அதிகாரி விசேஷத்தில் ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ப்ரேரகத்வத்தைக் கொண்டிருப்பதற்கும் பொருத்தமுடையதன்று.

இதன்மேல் "ப்ரவ்ருத்தி ஹேதுக்களான ஜ்ஞாந சிகீர்ஷாதிகளில் ஸாதாரண ரூபமாகவோ அஸாதாரண ரூபமாகவோ காரணமாக யிருப்பதே ஈச்வரனுக்கு ப்ரேரகத்வம்" என்பதாக இவர் எழுதியிருக்கிறார். ஸாதாரண காரணமாயிருப்பதுவும் ப்ரேரகத்வ மென்றது. "விசேஷ ஹேதுத்வரூபமான ப்ரேரகத்வம் உத்தர ப்ரவ்ருத்திகளைச் சார்ந்தது". ஸாதாரண காரணத்வம் ப்ரதம ப்ரவ்ருத்தி விஷயம் என்பதாக (ப. 434) இதற்கு முன் கூறியிருப்பதற்குச் சேராது. ப்ரதம ப்ரவ்ருத்தியிலும் ப்ரேரகத்வ முண்டு என்றல்லவோ ஏற்படுகிறது. ஸாமாந்ய காரயித்ருத்வ மென்பதுவும் ஸாமாந்ய ப்ரேரகத்வ மென்பதுவும் அபிந்நங்களே யாகையால், ஸாமாந்ய காரயித்ருத்வத்தை ஸஞ்சிகைகள் தோறும் இவர் அபலாபம் செய்ததும் பயனற்றதாகுமே. ஸாஸாதாரண காரண ஸாரங்களான ப்ரேரயித்ருத்வ காரயித்ருத்வாதிகள் (ப–436) என்றும் "ஸாதாரண ரூபமாக காரணமாயிருப்பது ப்ரோகத்வம் (ப-435) என்றும் எழுதிவைத்து, ஸாதாரண காரயித்ருத்வ ப்ரேரகத்வங்களை இல்லை என்பது பொருத்தமற்ற வார்த்தை யாகும்.

இவ்வாறாக இவருடைய வ்யாஸத்தில் விமர்சநீயாம்சங்கள் பல இருக்கின்றன. விஸ்தாரத்திற்கு அஞ்சிச் சிலவற்றையே ஸங்க்ரஹித்துள்ளேன். ஜீவர்களுடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் உபேக்ஷகத்வத்தோடு காரயித்ருத்வத்தையும் ஸ்ரீ தேசிகன் திருவுள்ளம்பற்றி யிருப்பதை ஸம்பாதக ஸ்வாமியும் விளக்கியிருக்க, அதைத் தூஷிப்பதற்கென்றே ஏற்பட்டுள்ள இந்த ஸ்வாமியின் விமர்சநமானது ஸம்பாதக ஸ்வாமிக்கோ ஸித்தாந்தத்திற்கோ அநுகூலமன்று என்பதும், ஆசாரியர்களுக்கு ஜீவருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசனுக்கு ஸாதாரண காரயித்ருத்வ விஷயத்தில் மிகவும் ஸாமாரஸ்யமே உளது என்பதும் இந்த விமர்ஶநத்தின் ஸாராம்சம்.

ஸம்ஸாரே நராணாம் ப்ரதமப்ரவ்ருத்தாவுபேக்ஷக꞉ காரயிதா ச ஸா
ம்யாத꞉। வ்யவஸாயபூர்வப்ரவ்ருத்திஷு அநுமந்த்ருத்வப்ரேரகத்வம் ஸஹ
ஸம்ப்ரதத்தம் ॥

பிழை திருத்தம்

சென்ற மாதத்து ஸஞ்சிகையில்,

(1) பக். 62-இல் 'காரயித்ருத்வமானது சிலருடைய ப்ரதம ப்ரவ்ருத்தியில் ஈசனுக்குள்ளது' என்று காண்கிறது. இங்கு சிலருடைய என்பது பிழை.

(2) அதற்கு மேலே "ஸாதாரணதயா காரணத்வம்" என்கிற விடத்தில் காரணத்வம் என்பதற்குப் பதிலாகக் காரயித்ருத்வம் என்று இருக்கவேண்டும்.

(3) பக். 63-இல் "ஏதேனும் அநுபவத்தில் இருந்தாலன்றி" என்று காண்கிறது. இங்கு அநுபவத்தில் என்பதை மாற்றி அநுபபத்தி என்று கொள்ளவேண்டும்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌨𑌿𑌗𑌮𑌾𑌨𑍍𑌤 𑌮𑌹𑌾 𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌯 𑌨𑌮𑌃

செய்திகள்

—

(1)

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய மஹோத்ஸவமும் நாடகமும்

சென்ற மார்கழித் திங்கள் 25உ (9—1—43) சனிக்கிழமை ஞாயிற்றுக்கிழமைகளில் தஞ்சாவூர், தெற்குவீதி மண்டபம் கட்டிடத்தில் ஸ்ரீ ஸ்ஙகல்ப ஸூர்யோதய மஹோத்ஸவம், ஸ்ரீமாந் தேசிக ரத்நதீபம் V. V. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸ்வாமி அக்ராஸநத்தில் நன்ருய் நடைபெற்றது. அதை முன்னிட்டு, ஸ்ரீ அஹோபில மடம் ஆஸ்தாந வித்வான் ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யர், மதத்ரய பண்டிதர் ஸ்ரீ. உப A. V. கோபாலாசார்யர், வேங்கடாத்ரி அகரம் வித்வான் ஸ்ரீ. உப. அநந்தாசாரியர், வித்வான் ஸ்ரீ. உப. கமலாபுரம் கோபாலாசாரியர், ஸ்ரீ. உப. காஞ்சி தாதாசாரியர், ஸ்ரீ. உப. வடுவூர் ஸ்ரீரங்கநாதாசார்யர், ஸ்ரீ. உப. கல்யாணபுரா வக்கீல் வீரராகவாசார்யர், ஸ்ரீ. உப. திருக்குடந்தை அத்யாபகர் ஸ்ரீநிவாஸராகவாசார்யர், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர், உப்பிலியப்பன் ஸந்நிதி ஸ்ரீ. உப. ஸ்ரீராமதேசிகாசாரியர், பரவஸ்து ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசாரியர், நெடுந்தெரு ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்யர், இவர்களின் அரிய உபந்யாஸங்களும் அத்யக்ஷரின் அழகிய அத்புதமான முன்னுரை முடிவுரைகளும் நடந்தன.

ஞாயிறு காலே, ஸேவை சாற்றுமறை கோஷ்டி விநியோகங்களும் ஸம்ப்ரமமாக நடைபெற்றன. ஸ்ரீ தேசிகன் திருவுருவப் படத்துடன் ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய ஸ்ரீ கோசத்தை ஸ்ரீ தேசிகன் எத்ஸரிகை ஸ்வஸ்தி வாசநங்களுடனும் வாத்ய கோஷங்களுடனும் ஸ்ரீ வைஷ்ணவ ஸபை கார்யதரிசி ஸ்ரீமான் K. S. வக்கீல் நரஸிம்மய்யங்கார், திருமாளிகையிலிருந்து தெற்கு ராஜவீதி மேற்படி மண்டபம் கட்டிடத்திற்கு விசேஷப்படியாக எழுந்தருளப் பண்ணினர். மாலே 7-மணிக்கு ஸ்ரீ ஸுதர்சந ஸபை (ராமநாதம் செட்டியார்) ஹாலில் ஸ்ரீமான் V. V. ஸ்வாமி தலைமையில், ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதய நாடகம் நவரஸ பரிதமாய் நன்ருய் நடந்தது ஸ்ரீ தேசிகன் திருவடிகளான புருஷர்கள் பெண்டுகளால் கொட்டகை நிறைந்து விட்டது. கூடிய சீக்கிரத்தில் ஸ்ரீரங்கத்திலும் திருக்குடந்தையிலும் இந்நாடகம் நடைபெறலாம்.

தில்லஸ்தாநம் திரு திரு. கோபாலாசார்யர்.

—

(2)

சிலாவட்டம் க்ராமம்.

“𑌮𑌮 𑌮𑌦𑍍𑌭𑌕𑍍𑌤𑌭𑌕𑍍𑌤𑍇𑌷𑍁 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌰𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌾 𑌭𑌵𑍇𑌤𑍍” என்று பகவான் அருளிச்செய்தபடி, பகவத் ஸ்தோத்ரத்தைவிட ஆசார்ய பக்தி ஆசார்ய ஸ்துதி முதலியவைகளே ஸர்வருக்கும் முக்யமாக உபஜீவ்யமென்று நம் பூர்வர் வ்ருத்தாந்தங்களாலே ஸுவ்யக்தம். ஆகையாலே ந்ருஸிஹ்மாபர மூர்த்தியான ஸ்ரீ அழகியசிங்கர், பகவானுடைய விபவ பேதங்க ளாகையாலே நமக்கு ஸ்ரீ அழகிய சிங்கரே ந்ருஸிஹ்ம புருஷகார ஆசார்யன்.

நமது ஸ்ரீ அழகியசிங்கர் ‘த்வயம் விளைந்த திருப்பதி’ என்று ப்ரஸித்தி பெற்ற ஸ்ரீமதுராந்தகத்தில் அர்ச்சாரூபியாக எழுந்தருளியிருக்கிற ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனை

மங்களாஶாஸநம் செய்வதற்கும், ஶாஸ்த்ர பாடசாலே நூதந கட்டடத்தின் க்ரஹ ப்ரவேச மஹோத்ஸவத்தை நடத்துவதற்கும் எழுந்தருளும் மார்க்கத்தில், சிலா வட்டம் க்ராமத்தில் 2—11—42 திங்கட்கிழமை உதயம் தம் அநுஷ்டாநத்தை முடித்துக் கொள்ளுகிறதாக, ஶ்ரிய: பதியின் நாச்சியார் போலும், திருவாழி திருச்சங்குகள் போலும் ப்ரகாசிக்கின்ற வித்வத் பூஷணங்களான நமது ஸ்ரீ. உப. புத்தங்கோட்டகம் ஸ்வாமி, ஸ்ரீ. உப. திருக்கோட்டியூர் ஸ்வாமி முதலான மஹாங்களால் அறிவிக்கப் பெற்றேம்.

முன்னொரு கால விஶேஷத்தில் பெரியோர்களின் ப்ரார்த்தனையின் பேரில், சிஷ்ய க்ராமங்களில் விஷ்ணு தேவஸ்தாநங்கள் ஸ்ரீ அழகிய சிங்கரால் ப்ரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனவென்று அறிகிறேம். அவைகளுள் சிலாவட்டம் க்ராமமும் ஒன்று. இக்ராமத்தில் தற்காலம் சிதிலமாயிருக்கின்ற ஷை பெருமாள் கோயிலின் மேலண்டைக் கரையில், பரிமள வாஸித வகுளம் முதலான வ்ருக்ஷங்களின் அருகில், துளஸீ வநம் சூழ்ந்த சுற்றுக் கரையின் மத்தியில், தாமரை அல்லி மலர்ந்து, காற்றில் அசைந்து ஸதா வாஸிக்கின்ற மௌஞ்சிப் புல் தர்ப்பம் பலாசு முதலானவைகளால் அடர்ந்த சுற்றுக்காட்டுச் சிறிய குன்றின் வழியாய் நீர் அருவிக்கால் வந்து நிறைந்த பரிசுத்த தீர்த்தமாய் ஒரு தடாகம் இருக்கிறது. அதன் கரையில் இந்த ஸந்நிதியின் முன் பந்தல் போட்டுச் சித்ரா பூர்மாணிவில் ப்ரதி வருஷம் ஸ்ரீ கருணாகரணே எழுந்தருளப்பண்ணி ஆராதிப்பதுண்டு. அப்படியே, நமது ஸ்ரீ அழகிய சிங்கர் இந்த மார்க்கம் எழுந்தருளும்போதும் ஆராதிக்கிற வழக்கம் உண்டு. 'சிற்றுஞ் சிறுகாலே வந்து' என்கிறபடி கதிரவன் ஜொலித்தும், குளிருக்குக் குன்றி குடிலே விட்டுக் கிளம்பாத நாங்கள் குளிரை நினையாமல் இத்தனை சிறு காலேயில் வந்தது எவ்வளவு ஆற்றுமைபோலும். 'பெற்றம் மேய்த் துண்ணும்' என்கிறபடி நித்ய ஸூரிகளுக்கு நடுவே ஏழுலகும் தனிக்கோல் செல்ல வீற்றிருக்கும் இருப்பிடம் விட்டு, மேன்மைக்கு எல்லே நிலமாகிய உன் திருமார்பினில் நித்ய வாஸ மங்கையாகிய பெரிய பிராட்டி யோடு அநந்தன் வைநதேயன் திருவநந்தாழ்வான் விஷ்வக்ஸேநர் சூழ்ந்த நித்ய ஸூரிகள் போலிருக்கின்ற ஆஸ்தாந வித்வான்களோடு ஸ்ரீ அழகிய சிங்கருமாய் நியாமகரை இருக்கும் ஸ்ரீ அஹோபிலம் விட்டுத் தாழ்மைக்கு எல்லேயான எங்கள் க்ராமக் குடிலுக்கு வந்தது அடியோங்கள் பாக்யமே. நம் ஸ்ரீ அழகிய சிங்கரை ஆராத்யனை ந்ருஸிம்ஹனேடே எழுந்தருளச் செய்து, பாகவத மஹா கோஷ்டியுடன் ந்ருஸிம்ஹ கடாக்ஷத்தையும் அநுக்ரஹ பல மந்த்ராக்ஷதைகளேயும் பெறச் செய்வித்த ஆஸ்தாந வித்வாங்களான ஸ்ரீ புத்தங்கோட்டகம் ஸ்வாமி, ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமி மற்றுமுள்ள பாகவதோத்தமர்களுக்கும் அடியேன் க்ருதஜ்ஞதையை விஜ்ஞாபித்துக்கொள்கிறேன். —ஆயநம் கிருஷ்ணஸ்வாமி ஐயங்கார், மதுராந்தகம்.

(3)

ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ அழகியசிங்கர் திருநக்ஷத்திரம்

[கஞ்சி மாடபூசி க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார்.]

சித்திரபாநு வருஷம் தைமீ 21வ (3—2—'43) புதன்கிழமை ஸ்ரீரங்கம் கீழ் உத்தரவீதி ஸ்ரீ அஹோபில மடத்தில், 42-வது பட்டத்தில் மூர்த்தாபிஷிக்தராய், ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகேத்யாதி பிருதலங்க்ருதராய் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவண் சடகோப ஸ்ரீரங்க சடகோபயதீந்த்ர மஹாதேசிகனுடைய திருநக்ஷத்ர மஹோத்ஸவம் வெகு விமர்சையாக நடைபெற்றது.

அன்று காலையில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸம்பாவனை, கோஷ்டி முதலியவைகளை, ஸ்ரீ-உ. வே. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி முதலான ஸந்நிதி சிஷ்யர்கள் எழுந்தருளியிருந்து வெகு அழகாக நடத்தினர்கள். அந்தஸ்வாமி திருமாளிகையில் திருநக்ஷத்திரத்துக்காகத் ததீயாராதனம் நடைபெற்றது.

அன்று ஸாயங்காலம் ஷை மடத்தில் ஸ்ரீ. உ. வே. வித்வான் புத்தங்கோட்டகம் ஸ்ரீநிவாஸாசார்யஸ்வாமி 'ஆசார்யமஹிமை'யைப் பற்றி விஸ்தாரமாக உபந்யஸித்து, எப்படி நம் ஸ்ரீ அழகியசிங்கரிடம் ஆசார்யனுக்கு வேண்டிய குணங்கள் பரிபூர்ணமாக இருக்கின்றனவென்பதை ஸகலருக்கும் வெகு அழகாக எடுத்துக் காட்டினர். ஆசார்யன் திருநக்ஷத்ரம் கொண்டாட வேண்டியது அவசியமென்றும், அது நித்ய கர்மமென்றும், குருவை சிஷ்யன் ப்ரகாசிப்பது குருபக்தியாலேதான் என்று பல ப்ரமாணங்களுடன் நிரூபித்தார். "आचिनोति हि शास्त्रार्थानाचारे स्थापयत्यपि। स्वयमाचरते यस्मात्तस्मादाचार्य उच्यते ॥" என்கிற ஸ்ம்ருதியின்படி ஆசார்யன் என்னும் சப்தமானது தொழிலைத் தெரிவிக்கிற சப்தமாகும். சாஸ்த்ர ஜ்ஞானங்களை ஸம்பாதிப்பதும் அதற்கு அநுகுணமாகத் தர்மங்களை அநுஷ்டிப்பதும், உலகத்தையும் தர்மங்களை அநுஷ்டிக்கும்படி செய்விப்பதும், இந்த மூன்று தொழில்களை ஆசார்யன் செய்யவேண்டியது. நம் ஸ்ரீ அழகியசிங்கர் பூர்வாஶ்ரமத்தில் கேவல லோகோபகாரார்த்தமாகவே மிகவும் சிரமப்பட்டு, கஞ்சி, குடந்தை, மைஸூர், காசி, திருப்பதி, ஸ்ரீ முஷ்ணம் முதலிய இடங்களில் போய் சாஸ்திரங்களில் ஸம்பூர்ணமான ஜ்ஞானத்தை ஸம்பாதித்தார். அநுஷ்டாந விஷயத்தில் அம்மஹான் க்யாதி, டம்பம் முதலியவைகள் இல்லாமல் ஆத்மார்த்தமாக தீவ்ரமாயும், பூர்ணமாயும் தர்மாநுஷ்டாநம் செய்துகொண்டு வருவது ஸகலருக்கும் தெரிந்தவிஷயம். உலகத்தை, தர்மங்களை அனுஷ்டிக்கும்படி செய்வதற்காக தமது உபதேசங்களினலும் அனுஷ்டானங்களினலும், இதுவரையில் பூர்வாசார்யர்களினல் செய்யப்படாததான பல தர்மஸ்தாபநங்களினலும் தர்மத்தை ஸ்தாபநம் செய்துகொண்டிருக்கிறர். அவையாவன:- (1) மதத்துக்கு ப்ரதாந காரணமான வேதாத்யயநத்தை வ்ருத்தி செய்வதற்காக ஒரு பாடசாலையை ஏற்படுத்தி அதை எப்போதும் தமது பக்கலிலே வைத்து வளர்த்து வருகிறர். (2) ப்ரதிவருஷம் தை மாஸம் மலோல சபை என்கிற விதவத் ஸதஸ்ஸை ஏற்படுத்தி எல்லாத் தேசங்களிலிருந்தும் பண்டிதர்களை வரவழைத்து, வாக்யார்த்த மூலமாக அவர்களை உத்ஸாஹப்படுத்தி, அவர்களுக்குப் பூர்ணமான ஸம்பாவனைகளையும் செய்வதனல் சாஸ்த்ர பாண்டித்யத்தை உலகத்தில் வ்ருத்தியடையும்படி செய்தருளுகிறர். (3) வித்வத் கலாசாலை ஒன்று ஏற்பாடுசெய்து, அதற்கு ஒரு விஸ்தாரமான கட்டடம் மதுராந்தகத்தில் ஏற்படுத்தி வித்யார்த்திகளுக்கு, ஆஹார வஸ்த்ராதிகளோடு சாஸ்த்ரங்களில் பாண்டித்யம் ஏற்படும்படி, மஹான்களான பண்டிதர்களைக் கொண்டு வித்யா ப்ரதாநம் செய்தருளுகிறர். (4) 'ஸ்ரீ ந்ருஸிம்மப்ரியா' என்னும் பத்ரிகையை அச்சிட்டுத் தேசமெங்கும் அனுப்பி, அதன் மூலமாய்த் தர்மாநுஷ்டாநத்தை உலகத்தில் ப்ரவர்த்திப் பித்தருளுகிறர். (5) ப்ரதிகிராமம் தோறும் ஸம்ப்ர

தாயத்தை நிலைநிறுத்தி, ஸகலரும் தர்மங்களை அநுஷ்டிக்கும்படி உபந்யாஸங்கள் செய்ய நியமநமா யிருக்கிறது.

இப்படி, "ஸாக்ஷாந்நாராயணோ தேவ:" என்கிறபடியே, ஸர்வேஶ்வரனுடைய அநுப்ரவேசாவதாரமாய் அவதரித்து, ஸமஸ்த கல்யாணகுணநிதியாய் விளங்கும் நம் ஸ்ரீ அழகியசிங்கர், பல்லாண்டு பல்லாண்டாக எழுந்தருளியிருந்து இவ்வுலகத்தை வாழ்விக்கும்படி நாம் நமது பெரிய பெருமாளுடைய திருமுன்பே தண்டனிட்டு ப்ரார்த்திக்கிறோம். இவ்வாறு கேட்போர் மனங்கள் இழுக்கும்படி செவிக்கினிய செஞ்சொல்லால் ப்ரஶஸ்தவ்யரான ஸ்ரீ அழகியசிங்கரை ப்ரஶம்ஸித்து, உபந்யாஸத்தை முடித்தார்.

---

(4)

[ஸ்ரீகார்யம் வித்வாந் ஸ்ரீ. உப. அம். நரஸிம்ஹாசார்யர்.]

நிகழும் சித்ரபாநுவ்ஷு தைமீ 11௳ ஸ்ரீ அழகியசிங்கர் தேவப்பெருமாள் ஸன்னிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளியாயிற்று. 16-கால் மண்டபத்தி னருகில் ஸ்ரீ பட்டாரியை எழுந்தருளப்பண்ணினார்கள். பிறகு ஸ்ரீ அத்திகிரியில் தேவாதிராஜனை "ஸ்ரீ:ஶ்ரியஸ்ஸ்ரீ:ஶ்ரியோ" என்கிறபடி பெருவிடாய் தீரும்படி ஸேவித்தபிறகு பல்லாண்டு பாடியருளினர். உயர்ந்த சாதராவும் ஸுமார் 1500 ரூ. பொறுமான கல்லிழைத்த இரட்டைக்கிளி மகரகண்டி மாலையையும் ஸமர்ப்பித்தார். பிறகு அருளப்பாடிட்டு தீர்த்தம் மாலை பரிவட்டம் முதலிய வரிசைகளைப் பேரருளாளன் அனுக்ரஹிக்க 'யதேஷ்ட்ரம்' என்று ஸ்வீகரித்து அருளினர். இப்படியே யோக ந்ருஸிம்ஹன் பெருந்தேவித் தாயார் ஸன்னிதிகளிலும் தூப்புல் தேசிகன் ஸன்னிதியிலும் காமாஸிகா நரஸிம்ஹன் ஸன்னிதியிலும் மங்களாசாஸனம் நடந்தேறியது. ஸ்ரீதேவப் பெருமாள் ஸன்னிதி மூன்று தினம் மங்களாசாஸனமும் பிறகு திருநக்ஷத்திர தினம் மங்களாசாஸனமும் நடந்தேறியது.

---

(5)

ஸ்ரீ மாலோல வித்வத் ஸபை சித்ரபாநுவ்ஷு தைமீ 12௳ முதல் 10 தினம் நடக்கிறதாக ப்ரசுரித்தபடி ஆரம்பித்து நடத்தியதில், அநேக வித்வான்கள் எழுந்தருளியிருந்தபடியால், இன்னும் 3 தினம் அதிகப்படியாக வைத்துக்கொண்டு நடத்தும்படியிருந்தது. ஆரம்பிக்குமுன், கீழே குறிக்கப்பட்டுள்ள ஶ்லோகங்கள் படிக்கப்பட்டன:

ஸ்வஸ்தி ஸ்ரீமாந் ந்ருஸிம்ஹோ விதரது ஸததம் மங்களம் மங்களாநாம்
மாமோம ஸ்ரீயுதாயா: விஶ்வயமிநி மமைஸூக்ஷிதாயா ஸ்ஸஹாயா: |
காருண்யம் ஸ்ரீரங்கமகாஸிஷ்யஹவய திவ்யோர்வாஷ்ட்ர தாயா மஹாநேஷ்ஸ:
ஸ்ரீமதேஷ்ராமீஷ்ரஹாஷ்ராஷிகேஷி தமேஷா மஸ்யவஸாராயஷ்டஸ்ஸ்ரீ: ||

விஷ்யஷாம் வமு வாக்யாயஷுஸஹாயாம் ஸஹ்ஶ நாயக: |
யதி விமாநு ஷாநவீரஶ்ஷஷாஷோஹமாஜ்வாஸநா ||

ஸ்ரீ அழகிய சிங்கர் திருநக்ஷத்திரத்தன்று வித்வான்களுக்கு டோலோத்வத்தில் ஸம்பாவனைகளும் அளிக்கப்பட்டன. அநேகமாய் வித்வான்களுக்கு ரூ. 20 ஸம்பாவனை செய்யப்பட்டது. மைஸூர் முதலிய தூர தேசத்திலிருந்து எழுந்தருளிய வித்வான்களுக்குப் போகவர ரயில் சார்ஜும் கொடுக்கப்பட்டது. அடுத்த பக்கத்தில் இங்கு எழுந்தருளிய வித்வான்கள் பெயர்கள் எழுதப்பட்டுள.

ஸம்பாவனைபெற்ற வித்வான்களின் திருநாமங்கள்

1. ஸ்ரீகார்யம் அம். வ. நரஸிம்மாசாரியர்
2. பிரம்மதேசம். ராமானுஜாசாரியர்
3. புள்ளபூதங்குடி. ராஜகோபாலாசாரியர்
4. குரிச்சி. ஸ்ரீனிவாஸரங்காசாரியர்
4A. வடுகூர் ராம பத்திராசாரியர்
5. கோஷ்டீபுரம். ஸௌம்யநாராயணாசாரியர்
6. அய்யா. கிருஷ்ணதாதாசாரியர்
7. இளங்காடு. ரங்காசாரியர்
8. நாவல்பாக்கம். தேவனாதாசாரியர்
9. திருப்பதி திருமலை தாதாசாரியர்
10. உத்தமூர். வீரராகவாசாரியர்
11. கூத்தப்பாக்கம். நீலமேகாசாரியர்
12. இஞ்சிமேடு. ராகவாசாரியர்
13. வேளியநல்லூர். ஸ்ரீனிவாஸதாதாசாரியர்
14. மதுராந்தகம். வீரராகவாச்சாரியர்
15. சின்னமு. ஸ்ரீனிவாஸபாட்டராசாரியர்
16. நாவல்பாக்கம். கிருஷ்ணதாதாசாரியர்
17. ,, நீலமேகாசாரியர்
18. கொத்தி மங்கலம். நாராயணாசாரியர்
19. வேலாமூர். ஸ்ரீனிவாஸாசாரியர்
20. மூக்கூர். ஸ்ரீனிவாஸாசாரியர்
21. வில்லிவலம். நாராயணாசாரியர்
22. அத்தி ஸாரநாதாசாரியர்
23. திருக்கள்ளம் கிருஷ்ணமாசாரியர்
24. முக்கூர். ராஜகோபாலாசாரியர்
25. தோட்டாலம். வேணுகோபாலாசாரியர்
26. மதுராந்தகம். ஆராவமுதாசாரியர்
27. ஸ்ரீமுஷ்ணம். ஸ்ரீனிவாஸாசாரியர்
28. மைஸூர். சேஷாசாரியர்
29. ,, வேங்கட நரஸிம்மாசாரியர்
30. ,, திருமலாசாரியர்
31. ,, கி. சேஷாசாரியர்
32. அழிசூர். திருமலாசாரியர்
33. சொக்கனூர். நரஸிம்மாசாரியர்
34. உ. வரதாசாரியர், பாப்பன்குளம்
35. பெருகாரணை. ராஜகோபாலாசாரியர்
36. திருப்பதி வாஸுதேவாசாரியர்
37. வளையபுத்தூர். ஸம்பத்குமாராசாரியர்
38. களத்தூர். வீரராகவ தீக்ஷிதர்
39. பாதூர். கோபாலாசாரியர்
40. ,, ராகவாச்சாரியர்
41. மேல்பாக்கம். நரஸிம்மாசாரியர்
42. அத்தி. கிருஷ்ணமாசாரியர்
43. கோஷ்டீபுரம். தாமோதராசாரியர்
44. வெங்கடாத்ரி அகரம். அனந்தாசாரியர்
45. புரிசை. வரததேசிகாசாரியர்
46. சரகூர். ஸ்ரீனிவாஸாசாரியர்
47. நாவல்பாக்கம். ராஜகோபாலதாதாசாரியர்
48. ,, தாததேசிகாசாரியர்
49. பையம்பாடி. தேவநாதாசாரியர்
50. நாவல்பாக்கம். அ தேவநாதாசாரியர்
51. சோளங்கிபுரம். தேவநாதாசாரியர்
52. ,, ஸாரநாதாசாரியர்
53. கி. ஸ்ரீனிவாஸாசாரியர்
54. கருடபுரம். ஸ்ரீனிவாஸாசாரியர்
55. கூத்தப்பாக்கம். ரங்காசாரியர்
56. ,, லக்ஷ்மீநரஸிம்மாசாரியர்
57. தாயார் ஸன்னிதி. வரதாசாரியர்
58. கொளத்தூர். விஜயராகவாசாரியர்
59. களத்தூர். வேங்கடதீக்ஷிதர்
60. இளங்காடு. ரங்கநாதாசாரியர்
61 வேளியநல்லூர். வரதாசாரியர்
62. வில்லியம்பாக்கம். ஸம்பத் குமாரதாதாசாரியர்
63. சருக்கை. ஸ்ரீனிவாஸராகவையங்கார்
64. அன்னதூர். வீரராகவாசாரியர்
65. தையார். ரங்காசாரியர்
66. அவதாரம். திருமலைதாதாசாரியர்
67. பட்டண்ணா. நரஸிம்மதாதாசாரியர்
68. பொய்கைபாக்கம். க்ருஷ்ணமாசாரியர்
69. அத்வரி. கிருஷ்ணமாசாரியர்
70. ஹேமப்பூர். ஸ்ரீனிவாஸாசாரியர்

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஆர்யா தசகம்

[ப்ரம்ஹதேசம் தூப்புல் வித்வான் ஸ்ரீ. உப. நரஸிம்ஹாசார்யர்.]

கமோ கார்ய தகமோ காங்க்ஷிதஸர்வப்ரதாயினீ ஹ்ருதயாஸ |
யஸ்யா: கடாக்ஷதாரா வக்ஷஸி பத்மாவிபாதி மாமேவ || 1.

ஸ்ரீரங்கநிஜமந்திரே பதே பாதாரவிந்தயுகமேஹம் |
யத்தம் தேந மஹேந்த்ர ப்ரதேஹதஸ்ரந்தா ஸம்பந்தோ பாதி || 2.

ரங்கஶம்கோபயோகிஹ்ருதயபஸ்தாய்ய தஸாஹ்ருக்ருத்ய்யாதீ |
ஶாஸ்த்ரார்த்தபதயோதீ மநஸி ஸதா ஜேஷ்டம் பத்மஸம்யோதீ || 3.

பதேஜ்ஞாவவீ தஸம்யந்தவக்ஷா ரங்கேஶட்கஶாரியோதீஶ: |
கார தமமஸஸத்ரிதம்ப: கபிதட்காஷாயஸம்வ்ருதோ பாதி || 4.

பரிபக்வாவபத்மயாரவஜ்ராஷிஷ்டாத்ருஸேஷிபத்மஷாஷி: |
ரங்கஶாரிஶீஶிதந்ரவதந் ஸதா மம் பதாப்ஜபவயஷி: || 5.

பரவாரணமதமதபு நதீக்ஷாஸம்யந்தக்ஷவீக்ஷயா பத்மணபு |
தக்ஷம் நமத ஜிதாக்ஷம் ரங்கஶாராதியோகிஹயபுக்ஷபு || 6.

ஶத்ருக்ந ஹந்தம் நித்யாந தரிதம் ஸம்ஸாரஸாகராம்ஹாம்ஸி |
ஜ்ஞாதம் தகவத்ர தயம் பொதந்ம் ஹாஷ்யாதிதஶபு நகர்யாந || 7.

கந்தம் கவிதாஸரணள ஸாஹித்யாம்ஹோயிவாரமயிகந்தம் |
மந்தம் மநஸா ஸ்ரீஶம் க்ஷந்தம் மந்தபந விஷத்ரவி ரவிதாந || 8.

உபதேஷ்டம் ஸந்தத்ரா நாதேஷ்டம் ஸாத்ரவகபுமஹிஜாதம் |
த்யக்ஷா கோவா ஹம்மள ஶக்த: ஸ்ரீரங்கநாதநந்ஜமந்திம் || 9.

ஸத்கமபுணாம் ஹி கதபுா ஸம்ஹதபுா விஷயஜாதவாவாநாம் |
ஸ்துதபுா ஸஹஸ்ராணாம் விலஸதி ஹ்ருதயே ஸதாம் ஹி யதிராஜ:|| 10.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

'ச்யவந' ஶப்தார்த்த விசாரம்

ஸ்ரீ மதுராந்தகம் வித்வாந் ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமி 'ச்யவந' ஶப்தார்த்த விஷயமாக மறுபடியும் ஒரு ஸ்ரீமுகம் அனுப்பியிருக்கிறார். அதன் உபக்ரமத்தில் பின்வருமாறு ஒரு உபோத்காதம் காணப்படுகின்றது. "அடியேன் ஏற்கெனவே எழுதியிருந்த ஸமாதாநத்தை ஸம்பாதகர் புறக்கணித்து ஶாராஸ்வாதிநியின் பேரில் கீதா பாஷ்யாதி விரோதத்தை வற்புறுத்தி யிருப்பதால், மறுபடியும் அதைப்பற்றி எழுதவேண்டியது ஆவஶ்யக மாயிற்று". ஸ்ரீ வீரராகவாசார்ய ஸ்வாமியின் ஸமாதாநத்தை அடியேன் புறக்கணிக்க வில்லை; ஶாராஸ்வாதிநியின் பேரில் கீதாபாஷ்யாதி விரோதத்தை வற்புறுத்தவு மில்லை. அடியேனுடைய சிற்றறிவில் தோன்றின ஒரு ஸம்ஶயத்தை மாத்ரம் வெளியிட்டேன். அது அப்ரதீக்ஷிதமான ஒரு சர்ச்சையில் பரிணமித்து விட்டது. இம்மாதிரியே இத: பூர்வம் ஸ்ரீ ஶ்ருத ப்ரகாஶிகா வாக்ய மொன்றில் ஒரு விசிகித்ஸை ப்ரஸக்தாநுப்ரஸக்தமாக ப்ரஸ்தாவிக்கப்பட, அது சில ஆக்ஷேப ஸமாதாநங்களுக்கு இடம் கொடுத்தது மின்றிக்கே, ப்ரபலர்களான இரண்டு வித்வத் ஸிம்ஹங்களுக்குள் ஒரு ஸ்பர்த்தையையும் ஜநிப்பித்து, ஒருவராலும் எதிர்பார்க்கப்படாமலுள்ள பெரியதொரு விவாதத்திலும் ப்ரவஹித்து விட்டது. ஆனால் சிற்சில ஸமயங்களில் இம்மாதிரி ஸம்பவங்கள் எதிர்பாராமல் நேர்வது ஸஹஜமே.

ஸம்ப்ரதிபந்ந ஆசார்ய ஸூக்திகளில் பரஸ்பரம் விரோத உத்காடநம் செய்யவேண்டும் என்பது அடியேனுடைய தாத்பர்யமன்று. அப்படி விரோதம் இருப்பது போலத் தோன்றினாலும், அந்தக் காரணத்தைக்கொண்டு ஒன்று மற்றொன்றால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டது என்று சொல்வதற்கும் அடியேன் ப்ரவர்த்

திக்கவில்லை. அதற்கு அடியேன் ஸர்வதா அநர்ஹன். ஆசார்யர்களெல்லாரும் விஶ்வஸநீயர்களாதலால் அவர்களுக்குள் ஏக தாத்பர்ய யோகத்தைக் கடிப்பிக்க வேண்டியதே நமது தர்மம் என்பதை அடியேன் நன்றாக உணர்ந்தவன். ப்ரக்ருத விஷயத்தில் அப்படிப் பட்ட ஏக தாத்பர்ய யோகத்தை ஸ்ரீ மதுராந்தகம் ஸ்வாமி நிரூபிக்கிறார் என்பதில் அடியேனுக்கு மிக்க ஸந்தோஷமே. அம்மாதிரி ஶாஸ்த்ர வழியைக்கொண்டு ஒரு விஷயத்தை நிரூபிப்பதற்கு அவர் தகுந்த அதிகாரியே. ஏதோ சிற்சில நிரூபண ப்ரகாரங்களில் ஸ்வல்ப அபிப்ராய பேதங்கள் இருந்தபோதிலும், அவருடைய ஸமாதாநத்தை அடியேன் பூர்ணமாக அங்கீகரிக்கிறேன். அந்தக் காரணத்தால் அந்த ஸ்வாமியின் லேகத்தை யதாவத்தாகவோ ஸங்க்ரஹித்தோ ப்ரசுரம் செய்வதற்கு ஆவஶ்யகதை இல்லை.

प्राग्जन्मदुष्कृताद्धेतो र्यदुपालभ्यते जनः ।
वैष्णवस्य न तच्छोच्यं यदि भागवतेरितम् ॥

*   *   *   *

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஒரு ஶ்லோகத்தின் விஶேஷார்த்தம்

ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் இளைய பெருமாளுடன்கூட பிராட்டியை அந்வேஷணம் செய்துகொண்டு துக்கோபஹதராகக் கிஷ்கிந்தையை நோக்கிச் சென்றபொழுது, ஸுக்ரீவ மஹாராஜன் அவர்களைப் பார்த்துப் பயந்து சிறிய திருவடியை அவர்களிடம் அனுப்ப, சிறியதிருவடி அவர்களிடம் சென்று அழகான சில வார்த்தைகளைப் பேசினார். அந்தச் சொற்களின் அழகை ஸ்ரீ வால்மீகி பகவானே "**श्लक्ष्णया सुमनोज्ञया वाचा**" [ம்ருதுவாயும் அர்த்தத்தால் அதிரம்யமாயுமுள்ள சொற்களால்] என்று வர்ணித்திருக்கிறார். அந்தச் சொற்களைக் கேட்டச் சக்ரவர்த்தித் திருமகனும் "**नानृग्वेदविनीतस्य**" [வேதங்களை ஸாங்கமாக அத்யயநம் செய்துள்ள புத்திமான்களே இம்மாதிரி சொற்களைச் சொல்ல அர்ஹர்கள்] என்று அதிஶ்லாக்யமாகப் புகழ்ந்து பேசி யிருக்கிறார். ஸாமாந்யமாகப் பார்க்குமவர்களுக்கு இவ்வளவு புகழ்ச்சிக்குத் தகுந்த ஏற்றம் அவைகளில் என்ன இருக்கின்றதென்று ஒரு ஶங்கை தோன்றலாம். ஸ்ரீமத் ராமாயண வாக்யங்களின் உட்கருத்தை உள்ளபடி அறிந்திருக்கும் நமது ஆசார்யர்கள் ப்ரக்ருத சொற்களிலுள்ள ஏற்றத்தை நன்கு வெளிப் படுத்தி யிருக்கிறார்கள். இதற்கு நிதர்ஶநமாக அந்தப் பேச்சில் காணப்படும் ஒரு ஶ்லோகத்தை எடுத்து உதாஹரிக்கிறோம்.

आयताश्च सुवृत्ताश्च बाहवः परिघोपमाः।
सर्वभूषणभूषार्हाः किमर्थं न विभूषिताः ॥

இதன் ஸாமாந்யப் பொருளாவது:—'நீண்டவைகளும் உருண்டவைகளும் பரிகத்திற்கு [இருப்புத் தூணுக்கு] ஒப்பானவைகளும் ஸகல ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்படத்தக்கவைகளுமான கைகள் ஏன் அலங்கரிக்கப்படாமல் இருக்கின்றன?' என்பதுதான். 'உலகத்தில் சிற்சில தேஹங்களுக்கே பூஷணங்கள் ஶோபாதிக்யத்தைக் கொடுக்கின்றன. ஸ்வபாவத்தால் விகாரமாயிருக்கும் தேஹங்களுக்கோவென்றால், குரங்குக்கு அலங்காரம் செய்வதுபோல, பூஷணங்களெல்லாம் ஒருவிதமான விகாரத்தையே உண்டாக்கும் என்பது அநுபவ ஸித்தம். 'ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகனுடைய திருமேனி அப்படிப்பட்டதன்று; ஸகல பூஷணங்களாலும் அலங்கரிக்கப்படத்தக்கது அந்தத் திருமேனி' என்பதைமாத்ரம் 'ஸர்வபூஷண பூஷார்ஹா:' என்னும் பதம் குறிக்கின்றது என்று எல்லாரும் சொல்வார்கள். நமது ஆசார்யர்கள் வெளியிட்டிருக்கும் விஶேஷார்த்தத்தைப் பார்த்தால் இந்தப் பொருள் மந்தமென்றே சொல்லவேண்டிவரும். 'அழகிழந்து கிடக்கிற ஆபரணங்களை அலங்கரியா தொழிகிறதென்?' என்பது அவர்களின் விவரணம். அதாவது—'ஆபரணங்கள் எம்பெருமானுடைய திருமேனியுடன் கூடியிருந்தால், அவை அழகு பெற்றிருக்கும்; பிரிந்தால் அவை அழகு இழந்து கிடக்கும். ஆகையால் 'எல்லா பூஷணங்களையும் பூஷிக்க அர்ஹங்களான' [सर्वभूषणानि भूषयितुमर्हाः] என்பதே இதன் பொருள் என்பதுதான் அவர்களின் கருத்து. இந்த அர்த்தம் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருமேனியின் வைலக்ஷண்ய விஶேஷத்தை வெளியிடுகிறபடியால் இதுவே ஏற்றமுள்ளது என்று சொல்லவேண்டு மன்றோ? லோகத்தில் ப்ராக்ருத வஸ்துக்களாகிற மணி த்யுமணி [ஸூர்யன்]களின் ஶ்ரைஷ்ட்யமானது அவைகளின் குணங்களாகிற ப்ரபை முதலியவைகளால் ஏற்படுகின்றது; ஸ்வபாவத்திலேயே ஹேயப்ரத்யநீகமாயும் கல்யாணைகதாநரூபமாயுமுள்ள பகவத் ஸ்வரூப விஷயத்திலோவென்றால் அது விபரீதம். திருமேனியின் ஶோபாதிக்யம் பூஷணயத்தமாக இருப்பதுபோக, பூஷணங்களின் மங்களத்வம் திருமேனியைச் சார்ந்து நிற்கின்றது என்று சொல்வது ரஸவத்தன்றோ? ஸ்ரீ கூரத்தாழ்வான் ஸ்ரீஸுந்தர பாஹு ஸ்தவத்தில்

"गुणजं गुणिनो हि मङ्गलत्वं प्रमितं प्रत्युत यत्स्वरूपमेत्य ॥"

என்று இந்த வைபரீத்யத்தை அநுபவித்திருக்கிறார். இந்த விஶே

ஷார்த்தமன்ரோ அந்தச் சொற்களின் அதிமனோஜ்ஞதைக்கு நிரூபணமாகும்.

இதைக் காட்டிலும் அதிக ரம்யம், 'கிமர்த்தம் நவிபூஷிதா:' என்பதற்குச் சொல்லப்பட்டுள்ள அர்த்தம். 'ஏன் அலங்கரிக்கப் படவில்லை?' என்று கேவலம் ப்ரஸ்ந மாத்ரமாக எடுத்துக்கொண் டால் அதில் அழகு ஒன்றுமில்லை. 'அலங்கரியாமல் இருப்பதற்கு இது காரணமோ, அது காரணமோ?' என்று ஸமஞ்ஜஸமான சில உல்லேகங்களைச் செய்வதன்ரோ கவி ஹ்ருதயத்தை வெளி யிட்டதாகும்? நமது ஆசார்யர்கள் இரண்டு விதமாகத் தாத்பர்ய விவரணம் செய்திருக்கிருர்கள். முதலாவது:—"ராஜாக்கள் இன்ன கோட்டையை அழித்தாலொழியப் பால் குடியோம் வெற்றிலை உண் ணோம் என்று இருப்பது உண்டு. அம்மாதிரி தேவரீரும் ராஜா வானதால் ரிஷிகளின் விரோதிகளைப் போக்கினலொழிய ஆபர ணங்களை அணியோம் என்று இருக்கிறீரோ?" என்பதுதான். இரண்டாவது:—"ஒன்று மறியாதே காட்டிலே திரியக்கடவ குரங்குகளும் அநுபவிக்கும்படி அழகு எல்லாவற்றையும் காட்ட வேணும் என்பது தேவரீருடைய திருவுள்ளமாக இருக்குமோ?" என்பதே. இந்த இரண்டு தாத்பர்யங்களுள் இரண்டாவது மிகவும் ஸங்கதம்; ரஸவத்தமமு மானது. ராமனுடைய திருமேனியின் அழகைப் பார்த்து மெய்ம் மறந்து நிற்கும் ஹநுமானுக்கு இந்த எண்ணத்தின் தோற்றமே மிகப் பொருந்தும். 'இந்தத் திருமேனி ஆபரணங்களால் மறைக்கப்பட்டிருந்தால், அதன் நைஸர்க்கிகமான அழகை அநுபவிக்க ப்ராப்தமிராமல் போய்விடுமே' என்று அவன் வருந்துவதும் ஸஹஜமே.

'குரங்குகளும் அநுபவிக்கும்படி' என்பதிலுள்ள உம்மை யில் ஸ்வாரஸ்ய மொன்று உண்டு. அதாவது: 'திருமேனி யின் ஸௌந்தர்யத்தை ஒன்ருலும் மறைக்கப்படாமல் உள்ளபடி அநுபவிப்பதற்குப் பிராட்டியன்ரோ இட்டுப்பிறந்தவள்? அந்தப் பிராட்டி அஸந்நிஹிதையாக இருக்கையில், இந்தத் திருமேனியை திர்யக்கான எங்களுடைய கண்ணுக்கும் கோசரமாகச் செய்வதன் காரணமென்ன?' என்பதுதான். இம்மாதிரி ஒரு ரஸிகர் விவரித் ததை நாம் கேட்டிருக்கிரோம்.

மானது அபவர்க்க மென்றும் அபுநர்ப்பவ மென்றும் சொல்லப்படும் மோக்ஷத்தைக் காட்டிலும் வேறுபட்டதாக லோகத்திலும் வேதத்திலும் வ்யவஹரிக்கப்படுகின்றது. புராண கர்த்தாக்களும்,

"ध्रुवसूर्यान्तरं यत्तु नियुतानि चतुर्दश।
स्वर्गलोकस्स कथितो लोकसंस्थानचिन्तकैः॥"

['ஸூர்ய த்ருவாந்தர்வர்த்தியான லோக விசேஷமே ஸ்வர்க்க மென்று சொல்லப்படுகின்றது'] என்று ஸ்வர்க்கத்தை ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டதாகவே சொல்லுகிறார்கள். ஆகையால், மோக்ஷ மென்பது 'ஸ்வர்க்க' சப்தத்திற்கு முக்யார்த்தமாக மாட்டாது.

அமுக்யமாக அர்த்தம் கொள்ளலாமோ வென்றால், 'முக்ய மான அர்த்தத்திற்குப் பாதக மிருக்கும் இடங்களில் மாத்ரம் அமுக் யார்த்த க்ரஹணம் கூடுமன்றோ? இவ்விடத்தில் முக்யார்த்தத்தைப் பாதிக்குமவை ஒன்றுமில்லையே!' பாதகங்கள் இருக்கின்றனவே என்றால், அவை யாவை? 'நசிகேதஸ்ஸால் அபேக்ஷிக்கப்படும் ஸ்வர்க்கமானது ஜரை மரணம் அற்றது என்றும், அதில் வஸிக்குமவர்கள் அம்ருதத்வத் தைப் பெறுகிறார்கள் என்றும் சொல்லப்பட்டிருப்பது பாதகமன்றோ? ப்ராக்ருத ஸ்வர்க்கத்திற்கு இம்மாதிரியான பெருமை இல்லை' என்பது ஒன்று. மற்றொன்று, 'நசிகேதஸ் மோக்ஷத்தைத் தவிர்த்த வேறு பலத்தை அபேக்ஷியாதவன்; பலாந்தரங்களை அவன் நிந்திக்கிறான். அவன் எப்படி க்ஷயிஷ்ணுவா யுள்ள ப்ராக்ருத ஸ்வர்க்கத்தை அபேக்ஷிப்பான்?' என்பதுதான். இவை பாதகங்க ளாகமாட்டா. ஏனென்றால்: 'ப்ராக்ருத ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களைப் பற்றிப் பேசுகையில், புராணங்கள், 'அவர்களுக்குக் கிழத்தனம் மரணம் முதலியவை இல்லை யென்று சொல்லவில்லையா? அவர்கள் அம்ருத பானம் செய்கிறபடியால் அவர் களுக்கு அம்ருதத்வமு முண்டு' என்றும் சொல்லுகின்றனவே. ஆபே க்ஷிகமாகவாவது அவர்களுக்கு இவை உண்டு என்று ஏற்பட்டால், இவை எப்படிப் பாதகங்களாகும்? நசிகேதஸ் பலாந்தர விமுகன் என் பது உண்மையே. ஆனால் அந்த வைமுக்யம் இரண்டாவது வரத்தைக் கேட்கும் காலத்தில் அவனுக்கு இல்லை. இரண்டாவது வரத்தை அளிக் கும்பொழுது, 'அவனுக்கு ஹிதத்தைச் செய்யவேண்டும்' என்னும் எண் ணம் கொண்ட ம்ருத்யு, அவனால் ப்ரஸ்நம் செய்யப்படாமல் இருக்கை யிலும், அநந்த லோக ப்ராப்தியையும் அவ்விடத்தில் ப்ரதிஷ்டையையும் ஜந்ம ம்ருத்யுக்களைத் தாண்டி யிருக்கும் ஒரு ஸ்திதி விசேஷத்தையும் ப்ரஸ்தாவித்து, அது வழியாக மோக்ஷ ஸ்வரூபத்தை உபக்ஷேபிக்கவே, நசிகேதஸ்ஸுக்கு அதில் ஒரு ருசி உண்டாகி அவன் பலாந்தர வைமுக் யத்தைப் பெற்றான். அந்தத் தசையிற் செய்யப்பட்ட பலாந்தர நிந்தை, அதற்கு முன் செய்யப்பட்ட ஸ்வர்க்க ப்ரார்த்தனையை எப்படிப் பாதிக்கும்? ஆகையால் 'ஸ்வர்க்க' சப்தத்தின் முக்யார்த்தத்தைப்

பாதிக்கும் ஸாமக்ரீ ஒன்றுமில்லை என்றே சொல்லவேண்டும். ஆகை யால் அமுக்யார்த்தத்தை க்ரஹிப்பதும் உசிதமாகமாட்டாது.

இவைகளைத், தவிர்த்து 'மோக்ஷம்' என்று அர்த்தம் சொல்வ தற்கு வேறொரு பலீயஸ்ஸான ஆக்ஷேப முண்டு. உபக்ரமாதிகரண ந்யாய ப்ரகாரம் முதலில் இருக்கும் ப்ரஶ்ந வாக்யத்தில் காணப்படும் 'ஸ்வர்க்க' ஶப்தமே பலவத்தரம். உபஸம்ஹாரத்தில் காணப்படும் வாக்யங்க ளெல்லாம் துர்ப்பலங்களே. ஆகையால், பிந்தித் தென்படும் ஜரா ம்ருத்யு தரணம் அம்ருதத்வத்தை அடைவது முதலான வாக்யங்களைக்கொண்டு, பூர்வம் சொல்லப்பட்டுள்ள 'ஸ்வர்க்க' ஶப்தத்தின் அர்த்தத்தை இவை களுக்கு ஒத்துவரும்படி இசைப்பது ந்யாய விருத்தம். முதலில் இருப் பது ஸங்க்யையில் அல்பமாகவும், பிந்தி வருவது பஹுவாகவும் இருந்த போதிலும், உபக்ரமத்தில் இருப்பதே ப்ரபல மென்பது, ந்யாயமன்றோ? இதுதான் பூர்வபக்ஷிகளின் வாதம்.

இவைகளுக்கு ஸமாதானமாக, முதலில் 'ஸ்வர்க்க' ஶப்தத்திற்கு மோக்ஷமும் முக்யார்த்தமாகக் கூடுமென்று அநேக ப்ரமாணங்களைக் கொண்டு ஸித்தாந்திகள் ஸாதிக்கிறார்கள். அப்படிப்பட்ட ஶக்தி அந்த ஶப்தத்திற்கு உண்டு என்பதை ஸ்தாபித்துவிட்டு, அப்படிப்பட்ட ப்ரயோகமும் இருக்கின்றது என்று அநேக ஶ்ருதி வாக்யங்களையும் உதாஹரித்திருக்கிறார்கள்.

"तस्यां हिरण्मयः कोशः स्वर्गो लोको ज्योतिषावृतः"
"तेन धीरा अपि यन्ति ब्रह्मविदः स्वर्गं लोकमित ऊर्ध्वा विमुक्ताः"
"अपहत्य पाप्मानमनन्ते स्वर्गे लोके ज्येये प्रतितिष्ठति"

இம்மாதிரியான அத்யாத்ம ஶாஸ்த்ர வாக்யங்களில் 'ஸ்வர்க்க' ஶப்தம் மோக்ஷ மென்னும் முக்யார்த்தத்துடனேயே ப்ரயோகம் செய்யப்பட் டிருக்கின்றது. பௌராணிகர்களால் கல்பிக்கப்படும் முக்யார்த்தம் இம் மாதிரி ஶ்ருதி ப்ரயோகங்களுக்கு விருத்தமாகையால், அது அநா தரணீயமே.

இரண்டாவது: ப்ரக்ருதி மண்டலத்திற்கு உட்பட்டிருக்கும் ஒரு லோக விஶேஷமே 'ஸவர்க்க' ஶப்தத்தின் முக்யார்த்தம் என்று ஒத்துக்கொண்டபோதிலும், அந்த அர்த்தத்தை த்யஜித்து 'மோக்ஷ' மென்னும் அமுக்யார்த்தத்தை க்ரஹிக்கும்படியாகப் பாதக ஸாமக்ரீகள் பஹுவாக இருக்கின்றனவென்று நிரூபிக்கப்படுகின்றது. ப்ரஸ்துத வாக்யங்களில், அத்யாத்ம ஶாஸ்த்ர ஸித்தமான அபஹதபாப்மத்வம் முதலிய எட்டு ப்ரஹ்ம குணங்களின் ஆவிர்ப்பாவமே வ்யக்தமாகச் சொல்லப்படுகின்றது. அப்படிப்பட்ட ப்ரஹ்ம குணங்களின் ஆவிர்ப் பாவம் ப்ராக்ருத ஸ்வர்க்கத்தை அடையுமவர்களுக்கு ஸம்பவிக்க மாட்டாதாகையால், அந்த ஆவிர்ப்பாவத்தின் ப்ரதீதி பூர்வபக்ஷிகள்

சொல்லும் முக்யார்த்தத்திற்குப் பலவத்தான பாதகம். எவ்விடத்தில் அந்த ஆவிர்ப்பாவம் தோன்றுகிறதென்ருல் :—(1) "**स्वर्गे लोके न भयं किञ्च नास्ति**" என்று முதல் ப்ரஶ்ந மந்த்ரத்தில் அபஹதபாப்மத்வம் ப்ரதிபாதிக்கப்படுகின்றது. ஸ்வர்க்கத்தில் வஸிப்பவர்களுக்கு 'எப்பொழுது இவ்விடமிருந்து விழுந்து விடுவோமோ?' என்று ஒரு பயமுண்டு. அப்படிப்பட்ட பீதியின் அபாவமே இவ்விடத்தில் விவக்ஷிதம். அது அபஹதபாப்மா எவனே அவனுக்கே ஸம்பவிக்குமன்ருே? (2, 3) "**न तत्र त्वन्न जरया बिभेति**" என்பதால் விஜரத்வமும் விம்ருத்யுத்வமும், (4, 5) "**उभे तीर्त्वा अशनायापिपासे**" என்பதால் விஜிகத்ஸத்வமும் அபிபாஸத்வமும், (6) "**शोकातिग**:" என்பதால் விஶோகத்வமும், (7, 8) "**मोदते स्वर्गलोके**" என்பதால் ஸத்யகாமத்வமும் ஸத்ய ஸங்கல்பத்வமும் ப்ரதிபாதிக்கப்படுகின்றன. இரண்டாவது :—"**स्वर्गलोका अमृतत्वं भजन्ते**" என்னும் இரண்டாவது ப்ரஶ்ந மந்த்ரத்தில் [13-வது மந்த்ரம்] சொல்லப்பட்டுள்ள 'அம்ருதத்வ' ஶப்தம் அத்யாத்ம ஶாஸ்த்ரத்தில் மோக்ஷமென்னும் அர்த்தத்திலேயே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. மூன்ருவது :—"**ततो मया नाचिकेतश्चितोऽग्निरनित्यैर्द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम्**" [II—10] என்னும் இடத்தில், 'நித்ய பலமாகிற ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாயிருக்கும் ஜ்ஞாநத்தை இந்த அக்நி சயநத்தால் நான் பெற்றேன்' என்று நாசிகேத அக்நியினுல் ப்ராப்யமான வஸ்து பரப்ரஹ்மமே என்பது வற்புறுத்தப்படுகின்றது. இது ப்ரஸித்த ஸ்வர்க்கத்திற்கு ஸம்பவிக்குமோ?

நிற்க: '**अमृतत्वं भजन्ते**' [அம்ருதத்வத்தை அடைகிருர்கள்] என்னுமிடத்திலுள்ள 'அம்ருத' ஶப்தத்தை முக்த பரமாக எடுத்துக் கொள்வதே உசிதமாகும். மேல் [29-வது] மந்த்ரத்தில் இந்த 'அம்ருத' ஶப்தம், அம்மாதிரி முக்தர்களைச் சொல்வதாகவே ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது. ["**अजीर्यताममृतानाम्**"]. இப்படி அர்த்தம் ஸம்பவிக்கையில், அதை முக்த பரமாக எடுத்துக்கொள்ளாமல், ஆபேக்ஷிகமாக எடுத்துக்கொண்டு, அப்படிப்பட்ட ஆபேக்ஷிகமான அம்ருதத்வத்தை அவலம்பித்து முக்யார்த்தத்தை நிலைநிறுத்தப் பார்ப்பதுஉசிதமாகுமோ?

இரண்டாவது வரத்தைப் பெறுவதற்குமுன் நசிகேதஸ்ஸுக்குப் பலாந்தர வைமுக்யம் இல்லையென்று சொல்வதும் உபபந்நமாக மாட்டாது. இரண்டாவது வரத்தைக் கேட்கும்பொழுதே அவனுக்கு மோக்ஷத்தில் அபிநிவேஶம் இருந்தது என்பது, அந்த ப்ரஶ்ந வாக்யத்தின் உட்கருத்தை அறியுமவர்களுக்கு விளங்கும். குணுஷ்டகத்தின் ஆவிர்ப்பாவத்தை மநஸ்ஸில் வைத்துக்கொண்டன்ருே அந்த ப்ரஶ்நம் கேட்கப்பட்டிருக்கிறது?

உபக்ரமாதிகரண ந்யாயம் ஸித்தாந்திகளுக்கு விரோதிக்கும் என்று சொல்வதும் உபபந்நமில்லை. உபக்ரமத்திலுள்ள 'ஸ்வர்க்க'

"येयं प्रेते विचिकित्सा मनुष्ये अस्तीत्येके नायमस्तीति चैके ।
एतद्विद्यामनुशिष्टस्त्वयाऽहं वराणामेष वरस्तृतीयः ॥" २१

ஶப்தத்திற்கு மோக்ஷத்தையே முக்யார்த்தமாகக் கொள்ளும் ஸித்தாந்திகளுக்கு அந்த ந்யாயத்தின் ஸஹாயத்தை அபேக்ஷிக்க ஆவஶ்யகதையே இல்லையன்றோ? பாதன் சொல்லுமிடத்திலும் உபஸம்ஹாரத்தில் காணப்படும் வாக்யங்கள் பஹுவாக இருக்கிறபடியால், உபக்ரமத்தி லுள்ள அல்ப வாக்யத்தை அவை பாதிக்குமென்பதே ந்யாய வித்துக்களின் மர்யாதை. இரண்டு வாக்யங்களும் ஸம ஸங்க்யாகங்களாக இருக்குமிடத்தில் மாத்ரமன்றோ, பரஸ்பர விரோதம் நேர்ந்தால் முக்யார்த்தத்திற்கு ப்ராபல்யத்தைச் சொல்லுகின்றது ஶாஸ்த்ரம்? ஆகையால் உபக்ரம ந்யாய விரோதம் வருமென்று சொல்வது வீண் வார்த்தையே. இம்மாதிரியான பல காரணங்களைக்கொண்டு இந்த ப்ரகரணத்தில் 'ஸ்வர்க்க' ஶப்தத்தை மோக்ஷ பரமாக எடுத்துக்கொள்வதே உபபந்நமென்று நமது ஆசார்யர்கள் விவரித்திருக்கிறார்கள்.

---

21. நசிகேதஸ் மூன்றாவது வரத்தைக் கேட்கிறான். 'ஸ்தூலமாகப் பார்க்கும்பொழுது, 'தேஹம் போனவுடன் ஜீவனும் போய் விடுகிறானா? சிலர் போய்விடுகிறா னென்றும் சிலர் போகவில்லை யென்றும் சொல்லுகிறார்களே! எது தத்யம்?' என்று தேஹாதிரிக்தமான ஜீவ ஸ்வரூபமே இவ்விடத்தில் ப்ரஶ்நம் செய்யப் படுவதுபோலத் தோன்றும். அது பூர்வாபர விருத்த மாகையால், ஸ்ரீ பாஷ்யகாரர் இந்த மந்த்ரத்தின் ஸங்கதமான தாத்பர்யத்தைப் பின் வருமாறு அநுக்ரஹித்திருக்கிறார். **"अत्र परमपुरुषार्थरूपब्रह्मप्राप्तिलक्षणमोक्षयाथात्म्यविज्ञानाय तदुपायभूतपरमात्मोपासनपरावरात्मतत्वजिज्ञासया अयं प्रश्नः क्रियते"** [ப்ரஹ்ம ப்ராப்தியை லக்ஷணமாக உடையது மோக்ஷம். அதுதான் பரம புருஷார்த்தம். அந்த மோக்ஷத்தின் உண்மையை அறியவேண்டு மென்பது நசிகேதஸ்ஸின் நோக்கம். அதைப் பெறுவதற்கு 'பரதத்வம் எது? அவரதத்வம் எது? பரமாத்மாவை உபாஸிப்பது என்றால் என்ன?' என்பதை முதலில் அறிந்து கொள்ள வேண்டியது அவஶ்யமாகையால், அவைகளைப்பற்றியே இந்த ப்ரஶ்நம் செய்யப்படுகின்றது]. நசிகேதஸ் பெரியோர்களிடமிருந்து, ஜீவாத்மாவுக்குத் தனது கடைசி தேஹம் போனபிறகு அபஹத பாப்மத்வம் முதலான எட்டு குணங்களும் ஆவிர்ப்பவிக்கின்றன வென்பதைக் கேட்டிருந்தான். ஆகையால், முதலில் இரண்டு மந்த்ரங்களால் அப்படிப்பட்ட மோக்ஷத்திற்கு ஸாதநமாயுள்ள அக்நியை உபதேஶிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தான். இப்பொழுது அந்த மோக்ஷத்தைப் பற்றிப் பல பெயர் பலவிதமாகச் சொல்லுகிறபடியால், அது விஷயமாக ஸந்தேஹமுண்டாக அதைத் தெரிந்துகொள்ளும்பொருட்டு இந்த

“देवैरत्राऽपि विचिकित्सितं पुरा न हि सुविज्ञेयमणुरेष धर्मः ।
अन्यं वरन्नचिकेतो वृणीष्व मा मोपरोत्सीरति मा सृजैनम् ॥” २२

மூன்றாவது வரத்தைக் கேட்கிறான். ‘அப்படிப்பட்ட அபஹத பாப்மத்வம் முதலிய எட்டு குணங்களுடன் கூடியவன் முக்த ஆத்மா என்று சிலரும், அப்படி இல்லையென்று மற்றும் சிலரும் சொல்லுகிறார்களே; உம்மால் உபதேசிக்கப்பட்டு இதைத் தெளிய அறிந்துகொள்ள நான் விரும்புகிறேன்’ என்பதே இந்த மந்த்ரத்தின் ஸங்கதமான அர்த்தம். இந்த அர்த்தமே ஸங்கதமென்பது போகப்போக விளங்கும்.

[ப - ரை] **मनुष्ये** - ஒரு மனிதன் [அதாவது ஒரு ஜீவன்], **प्रेते** - ஶரீர வியோகம் பெற்றவுடன் [அதாவது: ஸர்வ பந்த நிர்மோக்ஷம் நேருங் காலத்தில் எந்த ஶரீரம் கடைசியாக அவனால் விடப்படுகிறதோ அந்த ஶரீரம் போனவுடன்], **‘अयमस्ति’** - ‘அவன் இருக்கிறான் [அதாவது: ஆவிர்ப்பூதங்களான எட்டு குணங்களோடு கூடியிருக்கிறான்]’, **इत्येके** - என்று சிலரும், **‘अयं नास्ति’** - ‘அவன் இல்லை [அதாவது: ஆவிர்ப்பூத குணாஷ்டகனை இல்லை], **इति चैके** - என்று மற்றும் சிலரும், [இவ்வாறு வாதிப்பதால் உண்டாகும்] **येयं विचिकित्सा** - யாதொரு ஸந்தேஹம் உண்டாகின்றதோ [அதை நிவ்ருத்தி செய்துகொள்ளும் பொருட்டு], **एतत्** - இதை [அதாவது: அந்த முக்தாத்மாவின் ஸ்வரூப யாதாத்ம்யத்தை], **त्वया अनुशिष्टः** - உம்மால் உபதேஶிக்கப்பட்டவனாய்க் கொண்டு, **अहं विद्याम्** - நான் அறிந்துகொள்ள வேண்டும். **वराणाम्** - [உம்மால் கொடுக்கப்பட்டுள்ள] வரங்களுக்குள், **एषः** - இது, **तृतीयो वरः**—மூன்றாவது வரம்.

முக்தாத்மாவின் ஸ்வரூபமே கேட்கப்பட்டிருந்த போதிலும், அந்தக் கேள்வியின் வழியாக மூன்று விஷயங்கள் கேட்கப்பட்டவையாகின்றன. அவையாவன:- உபேயமான ப்ரஹ்மத்தின் ஸ்வரூபம், உபேதாவாகிற ஜீவாத்ம ஸ்வரூபம், உபாயமாகிற உபாஸநத்தின் ஸ்வரூபம் என்பவைதாம். ஏனென்றால், இந்தக் கேள்விக்குப் பிந்தி சொல்லப்படும் ஸமாதாநத்தில் இந்த மூன்று விஷயங்களும் விளக்கப்படுகின்றன. முக்தாத்ம ஸ்வரூப ஜ்ஞாநமானது அதை அநுபந்தித்துள்ள மற்றை ஜ்ஞாநங்களை அபேக்ஷித்தே நிற்கின்றதன்றோ?

---

22. இவ்வாறு மோக்ஷ ஸ்வரூபத்தை நசிகேதஸ் கேட்டான். ம்ருத்யு, ‘இது அதிகஹநமாயிற்றே. இதைப் பூர்ணமாக இவன் க்ரஹிப்பானா?’ என்று ஶங்கித்து, ‘இது வேண்டாம்; வேறு வரத்தைக் கேள்’ என்கிறார்.

[ப - ரை] **अत्र** - இதில் [இந்த முக்த ஸ்வரூப விஷயத்தில்], **देवैरपि** - தேவர்களாலே கூட [ஜ்ஞாநத்தில் சிறந்தவர்களால் கூட], **पुरा-**

"देवैरत्राऽपि विचिकित्सितं किल त्वञ्च मृत्यो यन्न सुविज्ञेयमात्थ ।
वक्ताचास्य त्वादृगन्यो न लभ्यो नान्यो वरस्तुल्य एतस्य कश्चित् ॥"२३

"शतायुषः पुत्रपौत्रान् वृणीष्व बहून् पशून् हस्तिहिरण्यमश्वान् ।
भूमेर्महदायतनं वृणीष्व स्वयं च जीव शरदो यावदिच्छसि ॥ २४

முன்காலத்தில், **विचिकित्सितम्** - ஸம்ஶயிக்கப்பட்டது. [ஒருவித நிச்சயமும் பெறப்படவில்லை]. **एष धर्मः** - இந்தத் தர்மமானது [இந்த விஷயமானது], **अणुः** - ஸூக்ஷ்மம். **न सुविज्ञेयं हि** - [ஆத்ம தத்வம் என்னும் இந்த விஷயம்] ஸுலபமாக அறியக்கூடியதன்று. **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **अन्यं वरं वृणीष्व** - வேறு வரத்தை வரித்துக்கொள். **मा मा उपरोत्सीः** - நிர்ப்பந்திக்காதே நிர்ப்பந்திக்காதே. **एनं मा** - இந்த என்னை, **अतिसृज** - விட்டுவிடு.

---

23. நசிகேதஸ் பதில் சொல்லுகிறான்.

[ப - ரை]. **अत्र देवैरपि विचिकित्सितं किल** - தேவர்கள் கூட இதைப் பற்றி நிர்ணயம் பெறாமல் தடுமாறுகிறார்களல்லவா? **मृत्यो** - ஹே ம்ருத்யுவே! **त्वञ्च** - நீரும், **यत्** - எதை, **न सुविज्ञेयम्** - ஸுலபமாக அறியக்கூடாததாக, **आत्थ** - சொல்லுகிறீரோ [அதை நான் வேறு எவ்விதம் அறிந்துகொள்வேன்?] **अस्य** - இதனுடைய, **त्वादृगन्यो वक्ता** - உம்மைப் போன்ற மற்றொரு உபதேஷ்டா, **न लभ्यः** - கிடைக்கமாட்டார். [ஆகையால்] **एतस्य तुल्यः** - இதற்கு ஸமானமான, **अन्यः कश्चिद्वरो न** - வேறு ஒரு வரமும் இல்லை.

---

24. நசிகேதஸ்ஸின் உறுதியை ம்ருத்யு அறிந்தார். ஆனால், 'ஒருகால் நசிகேதஸ்ஸின் புத்தி விஷயாஸக்தமாக இருக்குமோ? அப்படி இருந்தால் இந்த ரஹஸ்யோபதேஶத்திற்கு அவன் அர்ஹனாகமாட்டானே' என்று ஶங்கித்து, ம்ருத்யு கொஞ்சம் ப்ரலோபநம் செய்கிறார். நசிகேதஸ்ஸுக்கு மோக்ஷத்தில் இருக்கும் இச்சை த்ருடப்படட்டும் என்பதும் ம்ருத்யுவின் கருத்து.

[ப - ரை]. **शतायुषः** - நூறு வருஷம் ஜீவித்திருக்கும், [தீர்க்காயுஸ்ஸுக்களாக இருக்கும்], **पुत्रपौत्रान्** - பிள்ளை பேரன்களை, **वृणीष्व** - வரமாகக் கேட்டுக்கொள். **बहून् पशून्** - பஹுவான பசுக்களையும், **हस्तिहिरण्यम्** - யானைகளையும் ஸ்வர்ண ரூபமான த்ரவ்யத்தையும், **अश्वान्** குதிரைகளையும், [**वृणीष्व** - கேட்டுக்கொள்]. **भूमेर्महदायतनम्** - பூமியில் விஸ்தீர்ணமான ராஜ்யத்தையும், **वृणीष्व** - கேட்டுக்கொள். **स्वयम्** - தானும் [நீயும்], **यावच्छरद इच्छसि** . எவ்வளவு வர்ஷங்கள் [ஜீவித்திருக்க வேண்டுமென்று] விரும்புகிறாயோ, **[तावच्छरदः] जीव** - அவ்வளவு காலம் ஜீவித்திரு.

एतत्तुल्यं यदि मन्यसे वरं वृणीष्व वित्तं चिरजीविकाश्च ।
महाभूमौ नचिकेतस्त्वमेधि कामानां त्वा कामभाजं करोमि ॥ २५
ये ये कामा दुर्लभा मर्त्यलोके सर्वान् कामाँ श्छन्दतः प्रार्थयस्व ।
इमा रामास्सरथास्सतूर्या न हीदृशा लंभनीया मनुष्यैः ।
आभिर्मत्प्रत्ताभिः परिचारयस्व नचिकेतो मरणं माऽनुप्राक्षीः ॥" २६

---

25. [ப - ரை]. एतत्तुल्यम् - [கீழ்க் கூறப்பட்டுள்ள] வரங்களுக்கு ஸமாநமென்று, वरं मन्यसे यदि - [மற்றொரு] வரத்தை நீ எண்ணும் பக்ஷத்தில், वृणीष्व - [அதையும்] கேட்டுக்கொள். वित्तं चिरजीविकाञ्च [அளவற்ற] த்ரவ்யங்களையும், அளவற்ற காலம் ஜீவித்திருப்பதையும் கேட்டுக்கொள். महाभूमौ - பெரிய பூமியில், नचिकेतः - ஹே நசிகேதஸ்ஸே! त्वं एधि - நீ சக்ரவர்த்தியாக ஆவாய். कामानाम् - [லோகத்தில்] ஆநந்தகரங்களாக எவை எவை உண்டோ அவை யெல்லாவற்றுக்கும், त्वा - உன்னை, कामभाजम् - காமநா விஷயமாக, करोमि - செய்கிறேன். [அதாவது: லோகத்தில் எவை எவை ப்ரார்த்திக்கத் தகுந்தவை யென்று ஜநங்களால் எண்ணப்படுகின்றனவோ, அவையெல்லாம் உன்னிடம் வந்து உன்னை ப்ரார்த்திக்கும்படி செய்கிறேன்.] एधि-अस् என்னும் தாதுவின் लोट् மத்யமபுருஷ ஏக வசநம்.

कामानाम् - काम्यन्त इति कामाः [எவை விரும்பப்படுகின்றனவோ அவைகளைக் 'காமங்கள்' என்று சொல்லக்கூடும்]. ஆகையால் कामानाम् என்பதற்கு, काम्यमानानाम् என்பது பொருள். அதாவது: அப்ஸரஸ் முதலிய விஷயங்கள். कामभाजम्-कामं भजतीति कामभाक् [कामानां विषयतया भजतीत्यर्थः] எதை நம்முடைய இச்சைக்கு விஷயமாக அடைகிறோமோ அது நமக்குக் 'காமபாக்' ஆகும். லோகத்திலிருக்கும் உத்க்ருஷ்ட பதார்த்தங்களுக் கெல்லாம் நசிகேதஸ்ஸை ப்ரார்த்தநா விஷயமாகச் செய்வதென்றால், அது எவ்வளவு உத்க்ருஷ்டமான பதவியாகும். 'காமாநாம்' என்னும் பதத்தில் காம ஶப்தத்திற்குக் 'காமிக்கப்படும் வஸ்துக்கள்' என்பது பொருள். 'காம பாஜம்' என்னும் பதத்திலுள்ள காம ஶப்தத்திற்குக் 'காமநை' [அதாவது: இச்சை] என்பது பொருள்.

---

26. [ப - ரை]. मर्त्यलोके - மநுஷ்ய லோகத்தில், ये ये कामाः - எந்த எந்தப் போகங்கள், दुर्लभाः - துர்லபங்களோ, सर्वान् [तान्] कामान् - அந்தந்தப் போகங்க ளெல்லாவற்றையும், छन्दतः - யதேஷ்டமாக, प्रार्थयस्व - வரித்துக்கொள். इमाः - இந்த [என்னால் கொடுக்கப்பட்டுள்ள] सरथाः सतूर्या रामाः - ரதம் வாத்யம் இவைகளுடன் கூடிய ஸ்த்ரீகள், [மநுஷ்யர்களுக்குத் துர்லபர்கள்]. ईदृशाः - இப்படிப்பட்டவர்கள், मनुष्यैः - மநுஷ்யர்களால், न हि लभ्यनीया - பெறக்கூடியவர்க ளல்ல. मत्प्रत्ताभिः என்னால் கொடுக்கப்பட்டுள்ள, आभिः - இவர்களால், परिचारयस्व - கைங்

"श्वोऽभावा मर्त्यस्य यदन्तकैतत् सर्वेन्द्रियाणां जरयन्ति तेजः ।
अपि सर्वं जीवितमल्पमेव तवैव वाहास्तव नृत्यगीते ॥ २७

न वित्तेन तर्पणीयो मनुष्यो लप्स्यामहे वित्तमद्राक्ष्म चेत्त्वा ।
जीविष्यामो यावदीशिष्यसि त्वं वरस्तु मे वरणीयस्स एव ॥ २८

கர்யம் செய்யப் பெற்றுக்கொள். **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **मरणमनु** - மரணத்திற்குப் பின் வருமதை [ஸர்வ பந்த விநிர்மோக்ஷத்திற்குப் பின்வரும் முக்தாத்ம ஸ்வரூபத்தை], **मा प्राक्षीः** - கேட்காதே.

27. ம்ருத்யு இவ்வளவு தூரம் ப்ரலோபித்தும், நசிகேதஸ் அந்த ப்ரலோபந மொன்றுக்கும் வசப்படாமல், கலங்காத ஹ்ருதயத்துடன் பதில் சொல்லுகிறான்.

[ப - ரை] **अन्तक** - ஹே ம்ருத்யோ!, **मर्त्यस्य** - மனிதனுடைய [போகங்களெல்லாம்], **श्वोऽभावाः** - நாளை இராதவை [அதாவது: இரண்டு திநங்கள்கூடத் தொடர்ந்திருக்குமவையல்ல]- **सर्वेन्द्रियाणां यदेतत्तेजः** - இந்த்ரியங்க ளெல்லாவற்றுக்கும் யாதொரு பலம் உண்டோ, **जरयन्ति** - [அதை அப்போகங்கள்] குறைத்து விடுகின்றன. **सर्वं जीवितमपि** - ஸகலமான ஆயுஸ்ஸும் [சதுர்முக ப்ரஹ்மா முதலான எல்லாருடைய ஆயுஸ்ஸும்] **अल्पमेव** - ஸ்வல்பமே [அளவுக்கு உட்பட்டதே]. **वाहाः** - [ரதம் முதலிய] வாஹநங்கள், **तवैव** - உமக்கே [இருக்கட்டும்]; **नृत्यगीते** - நர்த்தநம் பாட்டு [இம்மாதிரியான போகங்களும்], **तव** - உமக்கே.

எல்லாருடைய ஆயுஸ்ஸும் அல்பமே என்று சொன்னது, 'தீர்க்காயுஸ்ஸைக் கொடுக்கிறே' னென்று ம்ருத்யு செய்த ப்ரலோபநத்திற்குப் பதில். ரதம் முதலியவை உமக்கே இருக்கட்டும் என்பதன் தாத்பர்யம், 'எனக்கு அவைவேண்டாம்' என்பதே. இம்மாதிரி சொல்வது மர்யாதைக் குறைவு போலத் தோன்றும். தனக்கு ஸர்வதா அபேக்ஷை இல்லை என்பதைக் காட்டும்பொருட்டு அம்மாதிரி பேசுவது உண்டு.

28. [ப - ரை] **मनुष्यः** — மநுஷ்யன், **वित्तेन** - தநத்தால், **न तर्पणीयः** - த்ருப்தி அடையமாட்டான். [தநத்திலுள்ள த்ருஷ்ணை, எவ்வளவு தநம் கிடைத்தாலும் ஶமநம் அடையமாட்டாதன்றோ?] நிற்க: **त्वा** - உம்மை, **अद्राक्ष्म चेत्** - பார்த்துவிட்டால், **वित्तम्** - தநத்தை, **लप्स्यामहे** அடைந்துவிடுவோம். [ம்ருத்யுபோன்ற தேவதைகளின் அநுக்ரஹம் இருந்தால் தநம் அடைவது ஒரு ஶ்ரமமாகுமோ?]. **त्वम्** - நீர், **यावदीशिष्यसि** - எவ்வளவு காலம் [இந்த ம்ருத்யு பதத்தில்] ஈஶ்வரனாக இருக்கிறீரோ, **जीविष्यामः** - [அவ்வளவு பர்யந்தம்] நாங்களும் ஜீவித்திருப்போம். [உம்முடைய ஆஜ்ஞையை மீறி எங்களைக் கொல்பவனுமுண்டோ?] **मे वरणीयो वरस्तु** - ஆகையால் என்னால் வரிக்கப்படவேண்டிய வரமோவென்றால் [illegible] தான் [முன் நான் ப்ரஸ்தாவித்ததே].

210111

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—2—'43 to 28—2—'43

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

For 1942.

		Rs.
1.	Sri S. Narayana Iyengar, Rtd. Post Master, 27, Vyasapadi Street, Madura ...	3
2.	,, Ananthachariar Damal Village Post, via Conjeevaram ...	3
3.	,, Venkatesa Iyengar, Advocate, ImperialBank Road, Coimbatore ...	1
4.	,, K. Desika Iyengar, Srimushnam ...	1/8
5.	,, M. Srinivasachariar, Little Conjeevaram ...	3

For 1943.

		Rs.
1.	Sri S. Ganesh, 72, Mahim Mansion, Mahim, Bombay 16 ...	3
2.	,, S. Krishnamachariar, C/o S. Raghavachariar, Thamil House, East plot 34, Balachandra Road, Dadar, Bombay 14 ...	3
3.	,, S. Perumal Reddiar, No. 2, Vedagiri Mudali St., St. Thomas Mount ...	3
4.	,, K. R Srinivasachariar, Rtd., Custom Inspector, 13, North Adayavalanjan St., Srirangam ...	3
5.	,, R. Srinivasa Iyengar, Rtd., Overseer, 111, West Chitra St., Srirangam ...	3
6.	,, K. T. Parthasarathy Iyengar, Mirasidar, Velur, (Saelm) via Pugalur ...	3
7.	,, S. Sarangapani Iyengar, B.A., Electrical Supervisor, Velur (Salem) via Pugalur ...	3
8.	,, K. S. Soundararajan, Merchant, Negapattam ...	3
9.	,, S. Soundararaja Iyengar, 40, Ranganathapuram, Puthur Extension, Trichy ...	3
10.	,, S. Narasimhan, Calcutta ...	3
11.	,, N. Narayana Iyengar ...	3
12.	,, S. Srinivasa Gopala Iyengar, North Sarukkai, Kabistalam Post ...	3
13.	,, S. R. Sarma, 6, Venkatesan St,, Tyagarayanagar ...	3
14.	,, T. A. Rajagopala Iyengar, Rtd,, Drawing Master, Sannidhi St., Therazhandur ...	3
15.	,, V. S. Rangachariar, P.W.D. Executive Engineer's Office, Coimbatore ...	1/8
16.	,, P. A. Srinivasachariar, Rtd. Asst. Engineer, P.W.D. 23, Kottai Pillaiar Koil St., Saidapet, Velur, N. A. Dt. ...	3
17.	,, V. R Krishnaswami Iyengar, Kattampatti P.O., Salem District ...	3
18.	Sri Rao Saheb W. Krishnaswami Iyengar, 10, Kesavaperumal South ward St., Mylapore ..	3
19.	,, V. Bangaruswami Iyengar, Asst. Engineer, M. & S M. Ry Hubli ...	3
20.	,, G. Souriraja Iyengar, Gopalasamudram, Putur Post, Shiyali Tq ...	3
21.	,, N. Gopala Iyengar, c/o Mr. Narasimha Iyengar, Vakil, Sultan Bazaar Street, Hyderabad ...	3
22.	,, C. V. Rajagopalan, 86, East Chittra Street, Srirangam ...	3
23.	,, V. Narayana Iyengar, 211, Middle School Road, Visweswarapuram, Bangalore ...	3
24.	,, V. Gopalaswami Aiyangar, 589, Sajjan Rao Road, Visweswarapuram, Bangalore ...	3
25.	,, K. Venkatachariar, Thalavapettai, Bhavani Tq. Coimbatore ..	3
26	,, C. V. Jaghannadhachariar, 50, Big Street, Kumbakonam ...	3
27.	,, Vadyar Raghunada Aiyangar, Kovilunni P.O., Tanjore Dt. ...	3
28.	,, Kadambi Kalyanasundararaja Iyengar, Kovilanni P.O., Tanjore Dt, ...	3
29.	,, Namperumal Aiyangar. Kovilvanni P.O. Tanjere Dt. ...	3
30.	,, Vadyar Seshadri Aiyangar, Thirukkannamangai, Via Tiruvarur ...	3
31.	,, A. Parthasarathy c/o Messrs. F. P. Oliver & Co., Yaffi Buildng. Goa Street, Ballard Estate ...	3
32.	,, Bharaspathiya Kesari Alisoor Raghavachariar, 9 Jasa[illegible]i Bhavan, Matunga, Bombay 19 ...	3
33.	,, A, V. Srinivasa Iyengar, Asst. Rtd. Government Training School, Kizhanatam via Palamkottah Tinnevelly Dt. ...	3
34.	,, K. S. Madavachariar. 31, Mettu Street Kumbakonam ..	3
35.	,, N. Raghavachari, Accountant, and Superintendent "Well Sinking Department Osmanabad ...	3
36.	,, Settlur Srinivasa Raghavachariar, Doosi Post via Vandiwash ...	3
37.	,, Venkatesa Iyengar Advocate, Imperial Bank Road, Coimbatore ...	2
38.	,, M. B. Krishnaswamy Iyengar, Srirangam ...	3
39.	,, S. Krishnaswamy Iyengar, Sullivan Road, Mylapore ...	3

Regd. No. M. 4437

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

இது ஸ்ரீ அஹோபில மடத்தால் ப்ரதி மாஸம் ப்ரசுரம் செய்யப்படும் பத்ரிகை. இதன் நோக்கங்களாவன :—

1. ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய ஆஸ்திக்யத்தை வ்ருத்தி செய்வது.

2. ஸ்ரீ விசிஷ்டாத்வைத மதத்தின் விசேஷ தத்வங்களைப் பற்றி தத்வ வித்துக்களின் ஸஹாயத்தைக்கொண்டு வ்யாஸங்களை வெளிப்படுத்துவது.

3. ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் ஸந்நிதியில் நடைபெறும் நித்யோத்ஸவாதிகளைப்பற்றியும் மற்றும் ஸ்ரீ ஸந்நிதி ஸம்பந்தங்களாக அப்பொழுதுக் கப்பொழுது நடைபெறும் வ்ருத்தாந்தங்களைப் பற்றியும் குறிப்புக்களை ஸங்க்ரஹிப்பது.

4. வைதிகாசாரம் வேதோக்த மதம் இவைகளைக் காப்பாற்றுவதற்கு வேறு உபாயங்களைத் தேடுவது.

5. இவைபோன்ற மற்றை கார்யங்களைச் செய்வது.

விளம்பரம்:— இந்தப் பத்ரிகையில் விளம்பரங்களுக்குப் பின் கூறப்பட்டுள்ள வீதம் சார்ஜு வஸூலில் செய்யப்படும்.

(1)	முழுப்பக்கம் ஒருதடவைக்கு		ரூ.	4—0—0
(2)	ஷை	3 மாஸங்களுக்கு	,,	10—0—0
(3)	ஷை	6 ,,	,,	18—0—0
(4)	ஷை	12 ,,	,,	34—0—0

பாதிப் பக்கத்திற்குப் பாதி சார்ஜும், கால் பக்கத்திற்கும் அதற்குக் குறைந்த பாகத்திற்கும் கால் சார்ஜும் செய்யப்படும். சார்ஜு முழுவதையும் முன்பணமாகவே செலுத்த வேண்டும்.

இந்தப் பத்ரிகைக்குச் சந்தாதாரர்கள் ஆயிரம் பெயர்கள் இருக்கிறார்கள்.

: ஆபீஸ் விலாஸம் :

5, ராமஸ்வாமி தெரு, தியாகராய நகர், மதராஸ்.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.